


398

# குறள் நானூறு

## (சேரன் தெளிவுரை)

கலைக்குடில் வெளியீடு

# குறள் நானூறு

தெளிவுரை

கவிஞர் கோ கோவை. இளஞ்சேரன்

செல்வன் கோ. தி. மோகன் பி.எசி.,
செல்வி நிலவுவல்லி
திருமண நினைவாக
மலர்ந்த

# குறட்கொத்து

மலர்த்தியோர் :

மாண்புமிகு க. அன்பழகனார் எம்.ஏ.,

மக்கள் நலத்துறை அமைச்சர்.

வழங்கி அருளுவோர் :

தவத்திரு குன்றக்குடி அடிகளார்

வெளியீடு :

கலைக்குடில் - நாகப்பட்டினம்

## பதிப்புரை

வணங்கி மகிழ்கின்றோம்.

திருமண நிறைவில் அன்பின் படைப்பாக மங்க பொருள்கள் வழங்குவது மரபு. நூல் ஒரு மங்க பொருள். எமது மகள் திருமணத்தில் திருக்கு வழங்கி மகிழ எண்ணினோம். தேர்ந்தெடுத்த கு பாக்களைத் தெளிவுரையுடன் வழங்குக என்று பணித்த மாண்புமிகு டாக்டர் நாவலர் அவர்கள். அவ் இவ்வெழில் பதிப்பு மலர்கிறது.

அறத்துப்பால் குறட்பாக்கள் 135 கோத்த மண கோவை; பொருட்பால் குறட்பாக்கள் 305 பொதி பொருட்பேழை; இன்பத்துப்பால் குறட்பாக்கள் தொடுத்த இன்பமாலை. இவற்றின் தொகையே கு நானூறு.

அதிகாரம் — குறளுக்குத் தலைப்பு — குறள் பக்கலில் எளிய விரிவில் தெளிவுரை — இவை நூல் அமைப்பு.

கையடக்கப் பதிப்பை ஏற்றுக் கைக்கொண் உளத்தில் பதிக்குமாறு வேண்டுகிறோம்.

கலைக்குடிலார்

**தமிழ் நாட்டரசு முதலமைச்சர் மாண்புமிகு**
**டாக்டர் - கலைஞர் மு. கருணாநிதி அவர்கள்**
**வழங்கிய அருமை வாழ்த்து**

அருமை நண்பர்
கோவை இளஞ்சேரன்
இலக்கியச் செல்வி
நிலவு வல்லியை,
திரு. மோகன், வாழ்க்கைத்
துணை நலமாகப் பெற்றிடும்
இந்நாளில் என் இதய
வாழ்த்துக்கள்.

மு.க.

கல்வியமைச்சர் மாண்புமிகு

## டாக்டர் நாவலர் இரா. நெடுஞ்செழியனார்

எம்.ஏ.

வழங்கும்

# வளம் நிறை வாழ்த்து

செல்வி நிலவுவல்லி — செல்வன் மோகன்
வளம்பல பெற்று, நலம்பல எய்தி,
இல்லற இன்பம் இனிதே துய்த்துப்
பீடும் பெருமையும் பிறங்கப் பெற்று,
உற்றார் மகிழ, ஊரார் பாராட்டப்
பெற்றோர் உவந்து பெருமகிழ்வு கொள்ள
மலரும் மணமும் போல ஒன்றிப்
பழமும் சுவையும் போலக் கலந்து,
நகமும் சதையும் போலப் பொருந்தி,
வீரனும் கைக்கூர் வாளும் போலவும்,
அண்ணாவும் அருந் தமிழும் போலவும்
பல்லாண்டு பல்லாண்டு வாழ்க! வாழ்கவே!

(ஒ—ம்) இரா. நெடுஞ்செழியன்

மக்கள் நலத்துறை அமைச்சர்

மாண்புமிகு க. அன்பழகனுர் எம். ஏ.

வழங்கும்

# நலம் நிறை வாழ்த்து

அன்புகெழுமிய நண்பர் கோவை இளஞ்சேரன் அவர்கட்கு, வணக்கம். தங்கள் அருமை மகள் திருவளர் செல்வி நிலவுவல்லியும் திருவளர் செல்வன் மோகன், பி. எஸ்ஸியும் இல்லறம் ஏற்பதறிந்து மகிழ்ந்தேன்.

"மணமக்கள் கருத்தொருமித்த காதல் நெஞ்சினராய், ஆதரவு தழைக்கும் அகத்தினராய், அன்பும் இன்பும் ஓங்க, அறமும் பொருளும் தழைக்கப் பண்பும் பயனும் சிறக்க — வழி வழி ஒளிர, வாழ்க பல்லாண்டு; வள்ளுவர் வகுத்த நெறியில் இல்லறம் நடத்தி நெடிது" என உளமார வாழ்த்துகின்றேன்.

"வாழ்வார்க்கு வானம் பயந்தற்றுல்; வீழ்வார்க்கு
வீழ்வார் அளிக்கும் அளி" — என்னும் குறள் காட்டும் நல்லின்பத்தைப் பிரிவின்றியே பெற்று வாழ்க என வாழ்த்துகின்றேன்.

பேரறிஞர் அண்ணு கண்ட கல்விக் கூடமாய் இல்லறம் பொலிய, புரட்சிக் கவிஞர் கண்ட குடும்ப விளக்காகத் தலைவி திகழ்ந்து, அறிவறிந்த மக்கட் பேற்றை அளவாகப் பெற்று, வாழ்க என வாழ்த்தி மகிழ்கின்றேன்.

அன்பன்

(ஒ—ம்) க. அன்பழகன்

வேளாண்மைத்துறை அமைச்சர்

மாண்புமிகு மன்னை ப. நாராயணசாமி
அவர்கள் வழங்கும்

# உளம் நிறை வாழ்த்து

என் அன்புத் தம்பி இளஞ்சேர!

உன் மகளது திருமணச் செய்தி கேட்டு மகிழ்ந்தேன். மணமக்களுக்குப் பின்வரும், என் உள்ளத்தில் ஊறிய எண்ணத்தலை வாழ்த்தாகச் சொரிகின்றேன்.

மகள் செல்வி நிலவுவல்லியும், மருகன் செல்வன் மோகனும் நீ வாழ்ந்து காட்டிவரும் நாள்களைச் சொல்லி உன் தமிழ்த் தொண்டும், தமிழினத்தின் உணர்வும் பெருக வாழ்வாங்கு வாழ்க!

தமிழர்களுக்கு வழிகாட்டிகளாய், நல்லன செய்து நலம் பெற்று நீடு வாழ வாழ்த்துகிறேன்.

(ஒ—ம்) ப. நாராயணசாமி

சென்னை, 13-5-72

திருவண்ணாமலைச் சைவத் திருமடத்துத் தலைவர்

தவத்திரு குன்றக்குடி அடிகளார்

வழங்கும்

# புகழ் நிறை வாழ்த்து

மூவா உலகில் மூத்த தமிழர்
வாழ்வியற் கலையை வண்ண முறத்தேர்ந்(து)
ஈருடல் ஒருயி ராகச் செம்புலப்
பெயல்நீர் போலப் பெட்புறு காதலில்
ஒன்றிக் கலந்துநல் லுணர்வினிற் சிறந்து
வாழ்தலே தவம்எனத் தேறித் தெளிந்தனர்.
கண்ணுதற் பெருமானும் மலைவளர் மங்கையும்
ஒன்றிக் காதலித் துடனுறை வாகி
உயிரொன் றாகி உணர்வொன் றாகி
வேறுவே றுடலம் ஒருட லாகி
அம்மை யப்பன் ஆகிய அருமை
மாட்சியே, மாட்சி! காட்சியே காட்சி!

நந்தம் செல்வி நிலவு வல்லி
தமிழ் தழீஇய சாயலள், தண்ணிலவுக்(கு)
இயைபுடை இனமே மோக னாகும்;
மணமான் நிலவு வல்லி, வாழ்க்கைத்
துணையெனப் பெற்ற தோன்றல் நலங்கெழு
நம்பி மோகன் இருவரும் ஒருவராய்ப்
பெட்புறு காதலும், பீடுசால் புகழும்,
மங்கல மனையின் நன்கலப் பேறும்
இன்புற எய்தி இனிய நந்தம்
"கவிஞர்கோ" கோவை இளஞ்சேரன் ஈட்டிய
புகழினும் மிகுபுகழ் ஈட்டி
வளர்க, வளர்க; வாழ்க வாழ்கவே!

(ஒ—ம்) தெய்வசிகாமணி

# நன்றி; வணக்கம்

வருகை மலர்த்தி மணப்பித்தீர்
வாழ்க்கை மலர்த்தி மகிழ்வித்தீர்
பெருகை மலர்த்தி வாழ்த்துளித்தீர்.
முருகை மலர்த்தும் பரிசளித்தீர்.
ஒருகை உடையேமுக் கிருகையாய்.
உவகை மலர்த்தி ஒத்துழைத்தீர்.
இருகை மலர்த்தி நன்றியுடன்
இயல்பால் வணக்கம் மலர்வித்தோம்.

— கோவை. இளஞ்சேரன்
— சானகி இளஞ்சேரன்

அளவோடு பெற்று
வளமோடு வாழ்தல்
அளவிலா நன்மைக்
கழைப்பு.

## அறத்துப்பால்

இறை. இயற்கை, சான்றோர், அறம் ஆகிய நான்கும் வாழ்வியலின் முன்னுரை. இல்லறமும் துறவறமும் இயல்பாம் வாழும் வாழ்வியற் சிறபபுரை. இவற்றை விரிவுரையாக்குவதே.

இப்பதிப்பு,
அறம் படைத்த
380 அறமணிகளுள்
135 மணிகள்
எடுத்துக் கோத்த
**மணிக்கோவை.**

உலகத்து எழுத்துக்கள் எல்லாம் 'அ' என்னும் ஒலியை முதலாகக்கொண்டு ஒலிக்கின்றன. அது போன்று, உலகம் முழு முதல் இறைவனை முதலாகக் கொண்டுள்ளது. —தொடர் எண் 1

நினைப்பவர் மனம் என்னும் மலர்மேல் சென்று அமர்பவன் இறைவன். அவனை ஆழ்ந்து நினைப்பவர் உலகியல் வாழ்வில் நீண்ட காலம் வாழ்வர். 2

இறைவன் தனக்கு உவமை இல்லாதவன். அவனை நினைப்பவர்க்கு மனக்கவலை இல்லை. மற்றவர் மனக் கவலையை மாற்ற முடியாது. 3

மழை பெய்வதால் உலகம், உயிர்களுக்கு வாழ்வை வழங்கி வருகின்றது. வாழ்வைத் தருவதால் மழையை அமிழ்தமாகக் கருத வேண்டும். 4

மழைநீர் இன்றி உலகம் அமையாது. எனவே, எவர்க்கும் மழை இல்லாமல் தொடர்ந்த நடப்பு இல்லை. 5

## 1. இறை வாழ்த்து

### உலகமுதல்வன் இறைவன்

அகர முதல எழுத்தெல்லாம் ஆதி
பகவன் முதற்றே உலகு. கு. எ. 1 தொ. எ. 1

### நிலத்தில் நீண்ட வாழ்வு

மலர்மிசை ஏகினன் மாணடி சேர்ந்தார்
நிலமிசை நீடுவாழ் வார். 3—2

### மனக்கவலையை மாற்றலாம்

தனக்குவமை இல்லாதான் தாள்சேர்ந்தார்க்(கு)
மனக்கவலை மாற்றல் அரிது. [அல்லால் 7—3

## 2. வான் சிறப்பு

### மழையே அமிழ்தம்

வானின் றுலகம் வழங்கி வருதலால்
தான் அமிழ்தம் என்றுணரற் பாற்று. 11 —4

### மழையின்றி நட்பு இல்லை

நீர்இன்று அமையாது உலகுஎனின் யார்யார்க்கும்
வான்இன் றமையா தொழுக்கு. 20—5

செய்வதற்கு அருமையான செயல்களைச் செய்பவர் பெரியவர். செய்வதற்கு அருமையான செயல்களைச் செய்ய முடியாதவர் சிறியவர். 6

வாய்ச்சுவை, கண்ணொளி, உடல் உணர்ச்சி, செவி ஒலி, மூக்கு மணம் என்னும் ஐந்தின் பாகுபாட்டைத் தெளிவாக உணர்ந்தவன் அவற்றைக் கட்டுப் படுத்துவான். அவன் உலகத்தையே கட்டுப் படுத்து பவன் ஆவான். அதனால் உலகம் அவனிடம் அடங்கும் எனலாம். 7

நலம் நிறைந்த மொழிகளைக் கூறும் மாந்தர், பெருமை மிக்கவர். அவர் கூறும் மொழிகளே மறை மொழிகள். அவர் கூறுபவை நிறைவேறுவதால் அம்மொழி அவர் பெருமையைக் காட்டும். 8

குணம் என்பது ஒரு மலை. அதன் முகட்டில் ஏறி நிற்பவர் சான்றோர். அவர் சினங் கொள்ளார். கொண்டால், அதனைப் பிறரால் ஓர் இமை நேரமும் தாங்க இயலாது. 9

எல்லா உயிர்களுக்கும் அருள் செய்து வாழ்பவர் அறவோர். அதனால், அவரே அந்தணர் எனத்தக்கவர். 10

## 3. நீத்தார் பெருமை

பெரியரும் சிறியரும்

செயற்கரிய செய்வார் பெரியர் சிறியர்
செயற்கரிய செய்கலா தார். 26—6

உலக அடக்கம்

சுவைஒளி ஊறுஓசை நாற்றம்என் றைந்தின்
வகைதெரிவான் கட்டே உலகு. 27—7

நிறைமொழியே மறைமொழி

நிறைமொழி மாந்தர் பெருமை நிலத்து
மறைமொழி காட்டி விடும். 28—8

குணக்குன்றின் சினம்

குணம்என்னும் குன்றேறி நின்றார் வெகுளி
கணமேயும் காத்தல் அரிது. 29—9

செந்தண்மையாளரே அந்தணர்

அந்தணர் என்போர் அறவோர்மற் றெவ்வுயிர்க்கும்
செந்தண்மை பூண்டொழுக லான். 30—10

மனத்தில் குற்றம் இல்லாதவன் ஆதல் வேண்டும். அஃதே அறம். அந்த அளவே அறம். மனக்குற்றத்துடன் செய்யப்படும் பிற செயல்கள் எல்லாம் வெற்று ஆரவாரத் தன்மை கொண்டவை. 11

பொறாமை, பொறாமையால் முளைக்கும் அவா, அவாவால் எழும் சினம், சினத்தால் கூறப்படும் கடுஞ்சொல் ஆகிய நான்கும் மனக்குற்றங்கள். இவைகளை நீக்கிச் செய்யப்படுவதே அறம். 12

அறத்தை முடிந்த வகையில் எல்லாம் செய்க! நீக்காது தொடர்ந்து செய்க! வாய்ப்பு நேரும் இடங்களில் எல்லாம் செய்க! 13

பல்லக்கைச் சுமந்து செல்பவர் யாவரும் அறம் செய்யாதவர் ஆகார்; ஏறிச் செல்பவர் யாவரும் அறம் செய்தவர் ஆகார். எனவே, இந்நிலையைக் காட்டி இதுதான் அறத்தின் பயன் என்று கூற வேண்டா. 14

ஒருவன் செய்யத் தக்கது மனக்குற்றம் இல்லாத அறச்செயலே. செய்யாமல் நீக்கி உய்யத் தக்கது பழிச்செயலே. 15

## 4. அறவையுறுத்தல்

மாசில்லா மனமே அறம்

மனத்துக்கண் மாசிலன் ஆதல் அனைத்(து)அறன்;
ஆகுல நீர பிற. 34—11

நான்கையும் இழுக்கியது அறம்

அழுக்காறு அவாவெகுளி இன்னாச்சொல் நான்கும்
இழுக்கா இயன்றது அறம். 35—12

அறம் செய்க! செய்க!

ஒல்லும் வகையான் அறவினை ஓவாதே
செல்லும்வாய் எல்லாம் செயல்! 33—13

பல்லக்குக் காட்சி அறப்பயன் அன்று

அறத்தா(று) இதுஎன வேண்டா சிவிகை
பொறுத்தானோ(டு) ஊர்ந்தான் இடை. 37—14

செயற்பாலதும் உயற்பாலதும்

செயற்பாலதோறும் அறனே ஒருவற்(கு)
உயற்பால தோறும் பழி. 40—15

குடும்பத்தில் இயல்பாக அமைபவர் பெற்றோர், மனைவி, மக்கள், ஆகிய மூவர்ஆவர். இல்லறத்தில் வாழ்பவன் அம்மூவர்க்கும் நல்ல நெறியில் துணை நிற்பவன். 16

இல்லறத்தில் வாழ்பவன் அவர்களை விட்ட பொது நலத்தார்க்கும், ஏழையர்க்கும் துணையின்றி இறந்தவர்க்கும் துணைநிற்பவன். 17

தென்னாட்டுப் பொதுமக்கள், வாழ்வாங்கு வாழும் தெய்வம், விருந்தினர், சுற்றத்தார், தான் என்று ஐந்து முனைகளில் இல்லறக்கடமை ஆற்றல் சிறந்தது. 18

வாழ்க்கையில் அன்பு உணர்வைக் கொள்ளுதலே இல்லறப் பண்பு. அறச்செயலைச் செய்தலே இல்லறப் பயன். 19

உலகத்தில் வாழும் வகையறிந்து நிறைவான வாழ்வு வாழ்பவன் மாந்தத் தெய்வம். அவன், மேல் நிலையில் உறையும் தெய்வமாக வைத்து வணங்கப் படுவான். 20

## 5. இல்வாழ்க்கை

### இயல்பார் மூவர்க்கு இனிமைத் துணை

இல்வாழ்வான் என்பான் இயல்புடைய மூவர்க்கும்
நல்ஆற்றின் நின்ற துணை. *41—16*

### அயலார் மூவர்க்கு அருள் துணை

துறந்தார்க்கும் துவ்வா தவர்க்கும் இறந்தார்க்கும்
இல்வாழ்வான் என்பான் துணை. *42—17*

### ஐந்து முனையில் அன்புக் கடமை

தென்புலத்தார் தெய்வம் விருந்தொக்கல் தான் [என்றாங்கு
ஐம்புலத்தா(று) ஓம்பல் தலை. *43—18*

### அன்பே பண்பு; அறமே பயன்

அன்பும் அறனும் உடைத்தாயின் இல்வாழ்க்கை
பண்பும் பயனும் அது. *45—19*

### வையத்துத் தெய்வம்

வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவன் வானுறையும்
தெய்வத்துள் வைக்கப் படும். *50—20*

மனைவி வாழ்க்கைத் துணை. அவள் இல்லறத்திற்குத் தக்க நல்ல குணம், நல்ல செயல் உடையவள் ஆகவேண்டும். தன் கணவனது வருவாய்க்குத் தக்க செலவு செய்பவளாதல் வேண்டும். இன்றேல் அவள் வாழ்க்கைப் பகை. 21

வாழ்க்கைத் துணையாம் பெண் கற்பு என்னும் மன உறுதியைப் பெற்று வாழவேண்டும். பெற்றால், பெண்ணைப் போல் பெருந்தகுதி உடையவை உலகில் வேறு எவையும் இல்லை. 22

மனைவி சிறு தெய்வங்களைத் தொழமாட்டாள். கணவனையே தொழுது எழுவாள். அவள் வேண்டும் பருவத்தில் 'பெய்' என்றால் பெய்யும் மழை போன்று பயன் தருபவள். 23

இல்லறத்துப் பெண் கற்பு தவறாமல் தன்னைக் காத்துக் கொள்பவள்; தன் கணவனைப் போற்றிக் காப்பவள்; தகுதி உடைய புகழைக் காப்பவள்; மனத்தளர்ச்சி இல்லாதவள். 24

புகழை விரும்பி இல்லறத்தை நெறியுடன் நடத்தும் மனைவியைப் பெற்ற கணவன் பெருமிதம் உடையவன். அவன் தன்னை இகழ்பவர் முன்னும் அரிமா போல் பெருமிதமான நடை போடுவான். அத்தகைய மனைவியைப் பெறாதவர்க்கு அந்தப் பெருமித நடை இல்லை. 25

## 6. வாழ்க்கைத்துணை நலம்

### வரவு அறியும் வாழ்க்கைத் துணை

மனைத்தக்க மாண்புடையள் ஆகித்தன் கொண்டான்
வளத்தக்காள் வாழ்க்கைத் துணை. 51—21

### கற்புடைமை பொற்புடைத் தகுதி

பெண்ணிற் பெருந்தக்க யாவுள கற்பென்னும்
திண்மையுண் டாகப் பெறின். 54—22

### பெய்யும் மழை

தெய்வந் தொழாஅள் கொழுநன் தொழுதெழுவாள்
பெய்யெனப் பெய்யும் மழை. 55—23

### நல்லாளின் நற்கடன் நான்கு

தற்காத்துத் தற்கொண்டான் பேணித் தகைசான்ற
சொற்காத்துச் சோர்விலாள் பெண். 56—24

### இகழ்வார் முன் அரிமா

புகழ்புரிந்(த) இல்இலோர்க் கில்லை இகழ்வார்முன்
ஏறுபோல் பீடு நடை. 59—25

வாழ்வில் பெறவேண்டிய பேறுகள் பல. யாம் அறிந்தவரை அவற்றுள், தம் அறிவின் திறத்தை அறியும் மக்களைப் பெறுதலே நல்ல பேறு. பிற எல்லாம் சிறந்த பேறுகள் ஆகா. 26

தந்தை தன் மகனைச் சான்றோர் கூடிய அவையில் முதன்மைத் தகுதியில் அமையுமாறு அறிவும் பண்பும் தந்து ஆளாக்க வேண்டும். இஃதே தந்தை மகனுக்குச் செய்யும் நன்மை. 27

தம் மக்களது அறிவுடைமை தமக்கு இனிமை தருவது. அதனினும், தம்மைவிட உலகத்து உயிர்களுக்கு எல்லாம் இனிமை தருதலே சிறந்தது. 28

தன் மகன் அறிவும் பண்பும் நிறைந்தவன் என நல்லவர் கூறக் கேட்கும் தாய் உவப்பாள். அவனைப் பெற்றெடுத்த நேரத்தில் உவந்ததைக் காட்டிலும் மிக உவப்பாள். 29

'இவனை மகனாக அடைய இவன் தந்தை என்ன நோற்றானோ' என்று நல்லோர் புகழ வேண்டும். இதற்குத் தக்கவாறு ஒழுகுதலே மகன் தந்தைக்குச் செய்யும் நன்றி. 30

## 7. மக்கட்பேறு

வள்ளுவர் அறிந்த வளமான பேறு

பெறுமவற்றுள் யாம்அறிவ தில்லை அறிவறிந்த
மக்கட்பே(று) அல்ல பிற. 61—26

தந்தையின் கடமை

தந்தை மகற்(கு) ஆற்றும் நன்றி அவையத்து
முந்தி இருப்பச் செயல். 67—27

உலகத்து உயிர்க்கெல்லாம் இனிது

தம்மின்தம் மக்கள் அறிவுடைமை மாநிலத்து
மன்னுயிர்க்(கு) எல்லாம் இனிது. 68—28

அன்னையின் அரும் மகிழ்ச்சி

ஈன்ற பொழுதிற் பெரிதுவக்கும் தன்மகனைச்
சான்றோன் எனக்கேட்ட தாய். 69—29

தந்தைக்குத் தகவான மகன்

மகன்தந்தைக்(கு) ஆற்றும் உதவி இவன்தந்தை
என்நோற்றான் கொல்எனும் சொல். 70—30

அன்பு எவரிடமும் உறவாடும் ஆர்வத்தைத் தரும். அந்த ஆர்வம் நட்பு என்னும் தேடக் கிடைக் காத சிறப்பைத் தரும். 31

அன்பு இல்லாதவர் எல்லாவற்றையும் தமக்கே உரிமையாகக் கொள்ளும் அவாவுள்ளவர்; அன்பைப் பெற்றவர் தம் எலும்பையும் பிறர்க்கு உரிமையாக்கும் பிறர் நல உணர்வு உள்ளவர். 32

அன்பைப்பற்றி அறியாதவர் அன்பு அறத்திற்கு மட்டும் துணை என்பர். அன்பைப்பற்றி அறிந்தவர் அறத்திற்கு மாருன மறத்தைக் கெடுக்கவும் அன்பு துணை நிற்பதை அறிவர். 33

ஈரமற்ற வன்மை நிலத்தில் பட்டமரம் தளிர்க் காது. அது போன்று அன்பு இல்லாத உள்ளத்தைப் பெற்றவரது வாழ்வும் தழைக்காது. 34

அன்பு வழியில் செயலாற்றும் உடம்பே உயி ரோட்டம் உள்ள உடம்பாகும்; அன்பில்லாத உடம்பு எலும்பின் மேல் தோல் போர்த்தப்பட்ட இறைச்சி மூட்டையாகும். 35

## 8. அன்பு உடைமை

### நாடாச் சிறப்பளிக்கும் அன்பு

அன்புஈனும் ஆர்வம் உடைமை; அதுஈனும்
நண்பென்னும் நாடாச் சிறப்பு. 74—31

### என்பையும் பிறர்க் காக்கும் அன்பு

அன்பிலார் எல்லாம் தமக்குரியர்; அன்புடையார்
என்பும் உரியர் பிறர்க்கு. 72—32

### அறத்திற்கும் மறத்திற்கும் துணை

அறத்திற்கே அன்புசார்(பு) என்ப அறியார்;
மறத்திற்கும் அஃதே துணை. 76—33

### அன்பிலா மனம் வன்பால் நிலம்

அன்பகத் தில்லா உயிர்வாழ்க்கை, வன்பாற்கண்
வற்றல் மரந்தளிர்த் தற்று. 78—34

### இறைச்சி மூட்டை

அன்பின் வழிய(து) உயிர்நிலை; அஃதுஇலார்க்(கு)
என்புதோல் போர்த்த உடம்பு. 80—35

நெடுநாள் வாழ்வைத் தரும் அமிழ்தமே யானாலும் விருந்தினரை வீட்டின் புறத்தே வைத்துத் தான் மட்டும் உண்ணுதல் விரும்பத்தக்க செயல் அன்று. 36

நாள்தோறும் இல்லத்திற்கு வரும் விருந்தினரைப் போற்ற வேண்டும்; போற்றுபவனது வாழ்க்கை வருந்திக் கெடுவது இல்லை. 37

விருந்தோம்பல் ஒரு வேள்வியாகும். அவ்வேள்வி யின் பயன் 'இந்த அளவு' என்று ஓர் அளவை உடையது அன்று. விருந்தினரின் தகுதிக்கேற்ற அளவை உடையதாகும். 38

செல்வச் செழிப்புள்ளும் ஒரு வறுமை உண்டு. அது விருந்தோம்பல் செய்யாத அறியாமை. அது மடையர்களிடமே உண்டு. 39

விருந்தினர் அனிச்ச மலர் போன்றவர்; அனிச்ச மலரோ மோந்தால்தான் வாடும்; விருந்தினர், முகம் சுளித்துப் பார்த்த அளவில் வாடுவர். 40

## 9. விருந்து ஓம்பல்

### விருந்தில்லா அமிழ்தம்

விருந்து புறத்ததாத் தானுண்டல், சாவா
மருந்தெனினும் வேண்டற்பாற்(று) அன்று. 82—36

### விருந்துடை வாழ்க்கை வருந்திக் கெடாது

வருவிருந்து வைகலும் ஓம்புவான் வாழ்க்கை
பருவந்து பாழ்படுதல் இன்று. 83—37

### விருந்து ஒரு வேள்வி

இனைத்துணைத் தென்பதொன் றில்லை, விருந்தின்
துணைத்துணை வேள்விப் பயன். 87—38

### செல்வத்துள் வறுமை

உடைமையுள் இன்மை, விருந்(து) ஓம்பல் ஓம்பா
மடைமை மடவார்கண் உண்டு. 89—39

### பார்வையால் வாடும் அனிச்சம்

மோப்பக் குழையும் அனிச்சம்; முகம்திரிந்து
நோக்கக் குழையும் விருந்து. 90—40

மெய்ப்பொருளை அறிந்த நல்லவரது வாயினின்றும் வரும் சொல் அன்பு கலந்தது ; வஞ்சம் அற்றது. அதுவே இனிய சொல். 41

முகம் மலர்ந்து இனிய சொல்லைச் சொல்பவனாக வேண்டும். சொல்பவன், உள்ளம் விரும்பி ஈதலை விடச் சிறந்ததைச் செய்தவன் ஆவான். 42

எவரிடத்தும் இன்பத்தை மிகுதிப்படுத்தும் இனிய சொல்லைச் சொல்பவனுக்குத் துன்பத்தை மிகுதிப்படுத்தும் வறுமை இல்லாமற் போகும். 43

இனிய சொல் கேட்பவர்க்கும் பயன்தந்து, பண்பிலிருந்து நீங்காத சொல்லாகும். அது சொல்பவனுக்கும் மகிழ்வைத் தந்து நன்மையை உண்டாக்கும். 44

சுவையான பழம் கையில் இருக்கவும் சுவையில்லாத காயைத் திருடி உண்பது நகைக்கத் தக்கது. அதுபோன்று இயல்பாக இனிய சொல் இருக்கக் கடுஞ்சொல்லை வரவழைத்துக் கூறுவது நகைக்கத் தக்கது. 45

## 10. இனியவை கூறல்

அன்பு உண்டு ; வஞ்சம் இல்லை

இன்சொலால் ஈரம் அளைஇப் படி(று) இலவாம்
செம்பொருள் கண்டார்வாய்ச் சொல். 91—41

ஈகையினும் நன்று இன்சொல்

அகன்அமர்ந் தீதலின் நன்றே, முகனமர்ந்(து)
இன்சொலன் ஆகப் பெறின். 92—42

வறுமை இல்லை

துன்புறூஉம் துவ்வாமை இல்லாகும், யார்மட்டும்
இன்புறூஉம் இன்சொ லவர்க்கு. 94—43

இருவருக்கும் இன்பம்

நயன்ஈன்று நன்றி பயக்கும், பயன்ஈன்று
பண்பின் தலைப்பிரியாச் சொல். 97—44

கனியிருக்கக் காயோ ?

இனிய உளவாக இன்னாத கூறல்,
கனியிருப்பக் காய்கவர்ந் தற்று. 100—45

தக்க காலத்தில் செய்யப்பட்ட நல்ல உதவி பொருளால் சிறியதாகலாம் அந்த அளவை நோக்கக் கூடாது. செய்யப்பட்ட இன்றியமையாத காலத்தை நோக்க வேண்டும். அச்சிறிய உதவியே உலக அளவை விட மிகப் பெரியது ஆகும். 46

பின்னர் பயன் கிடைக்கும் என்று எண்ணி எதிர் பாராமல் செய்யப்படும் உதவி உள்ளன்போடு செய்யப்படுவது. அதனை ஆராய்ந்தால் அதன் நன்மை பரந்து கிடக்கும் கடலினும் பெரியது. 47

ஈடாகச் செய்யப்படும் உதவி முன்பெற்ற உதவி யின் அளவு ஆகாது. ஈடு செய்பவரது பெருந்தன்மை யின் அளவில் அமையும். 48

மனம் மாசற்ற அறவோரின் உறவு மறக்கக் கூடாதது. அதுபோன்று, துன்பத்தில் துணைநின்று உதவியவர் நட்பு கைவிடக் கூடாதது. 49

எவ்வகை நன்மையைக் கெடுத்தவர்க்கும் மீள வழியுண்டு; ஆனால், ஒருவர் செய்த நன்றியை மறந்த வர்க்கு உய்யும் வழி இல்லை. 50

## 11. செய்ந்நன்றி அறிதல்

உலகினும் பெரிது

காலத்தி னால்செய்த நன்றி சிறி(து)எனினும்
ஞாலத்தின் மாணப் பெரிது. 102—4

கடலினும் பெரிது

பயன்தூக்கார் செய்த உதவி நயன்தூக்கின்
நன்மை கடலிற் பெரிது 103—47

ஈடாகும் உதவி ஈடற்றது

உதவி வரைத்(து)அன்(று) உதவி உதவி
செயப்பட்டார் சால்பின் வரைத்து. 105—48

துன்பத்தில் துணையைத் துறத்தல் துன்பம்

மறவற்க மாசற்றார் கேண்மை; துறவற்க
துன்பத்துள் துப்(பு)ஆயார் நட்பு. 106—49

நன்றி கொன்றவர் என்றும் உய்யார்

எந்நன்றி கொன்றார்க்கு முய்வுண்டாம் உய்வில்லை
செய்ந்நன்றி கொன்ற மகற்கு 210—50

துலாக்கோலின் முள், முன்னர் தான் நடுவில் நின்று சமநிலையைக் காட்டும், பின்னர் தன்பால் வைக்கப்படும் பொருளை அளவிடும். அது போன்றதே நடுவுநிலை. அது சான்றோர்க்கு அழகு தரும் ஓர் அணிகலன். 51

நடுவுநிலைமையிலிருந்து நீங்கிப் பெறும் செல்வம் தீமையைத்தான் தரும். நன்மையைத் தருவதாகப் பட்டாலும், பட்ட அப்பொழுதே அச்செல்வத்தைக் கைவிடவேண்டும். 52

எவருக்கும் இறந்தபின் எஞ்சுவது புகழும் பழியு மாகிய இரண்டில் ஒன்றே. புகழைக்கொண்டு அவர் நடுவுநிலைமைத் தகுதி உள்ளவராக வாழ்ந்தார் என்றும், பழியைக்கொண்டு அத்தகுதியற்றவராக வீழ்ந்தார் என்றும் உலகோரால் அறியப்படும். 53

தன் மனம் நடுவுநிலைமையிலிருந்தும் நீங்கித்தீமை செய்தல் கூடாது. செய்தால், 'இதனால் யான் கெடு வேன்' என்பதை அறிந்து திருந்துதல் வேண்டும். 54

வாணிகம் என்பது வாங்குவோர் பொருளையும் தம் பொருள்போல் கவனமாகப் போற்றுதலாகும். அஃதே வாணிகர்க்கு நடுவுநிலை தவறாத வாணிக நெறியாகும். 55

## 12. நடுவு நிலைமை

நடுவு நிலை ஒருதுலாக்கோல்

சமன் செய்து சீர்தூக்கும் கோல்போ லமைந்தொரு
கோடாமை சான்றோர்க்(கு) அணி. [பால் 118—51

செல்வத்தைக் கைவிடுக!

நன்றே தரினும் நடுவிகந்(து)ஆம் ஆக்கத்தை
அன்றே ஒழிய விடல். 113—52

புகழும் பழியும் புகலும் தகவை

தக்கார் தகவிலர் என்ப(து) அவரவர்
எச்சத்தால் காணப் படும். 114—53

கேட்டை உணர்க

'கெடுவல்யான்' என்ப(து) அறிகதன் நெஞ்சம்
நடுவொரீஇ அல்ல செயின். 116—54

வாணிக நெறி

வாணிகம் செய்வார்க்கு வாணிகம் பேணிப்
பிறவும் தமபோற் செயின். 120—55

தனக்குரிய நிலையிலிருந்தும் மாறாது அடங்கி வாழ்பவன் தோற்றம் எளிமையாலும் காட்சியாலும் சிறியதாகலாம். அவன் உள்ளத்தே அடங்கியுள்ள உரிதியால் அத் தோற்றம் மலையைவிட மிகப் பெறுது. 56

பணிந்து அடங்குதல் எல்லார்க்கும் நன்று. அவருள்ளும் செல்வம் பெற்றவர்க்கு மேலும் அடக்கமாகிய ஒரு செல்வம் பெற்ற தகுதி அமையும். 57

ஐம்பொறிகளையும் அவற்றின் போக்கில் விடாமல் அடக்கிக் காக்க வேண்டும். அவற்றுள் எதைக் காக்கா விட்டாலும் நாவை அடக்கிக் காக்க வேண்டும். காவாது பேசினல் சொற் குற்றத்திற்கு ஆளாகிக் கலங்குவர். 58

தீய சொல்லின் பொருளால் பயன் உண்டாகாது. அந்நேரத்தில் ஏதேனும் ஒரு பயன் உண்டானலும், அது முடிவில் நன்மையாகாது தீமையாகிவிடும். 59

தீயினல் சுடுவது உடற்புண். நாவின் சுடு சொல்லால் சுடுவது உள்ளப் புண். உடற்புண் வடு ஆயினும் உள்ளே ஆறும். தீச்சொல் தரும் உள்ளப் புண் ஆருத வடுவாகும். 60

## 13. அடக்கம் உடைமை

மலையினும் பெரிது.

நிலையில் திரியாது அடங்கியான் தோற்றம்
மலையினும் மாணப் பெரிது. 124—56

செல்வர்க்கு மேலும் ஒரு செல்வம்.

எல்லார்க்கும் நன்றும் பணிதல் அவருள்ளும்
செல்வர்க்கே செல்வம் தகைத்து. 125—57

நா அடங்காமை.

யாகாவார் ஆயினும் நாகாக்க காவாக்கால்
சோகாப்பர் சொல்இழுக்குப் பட்டு. 127—58

தீயசொல் தீராத் தீமை

ஒன்றானும் தீச்சொல் பொருட்பயன் உண்டாயின்
நன்றாகா தாகி விடும். 128—59

தீச் சூடும் நாச் சூடும்.

தீயினால் சுட்டபுண் உள்ஆறும் ஆறாதே
நாவினால் சுட்ட வடு. 129—60

ஒழுக்கம் வாழ்வில் மேன்மையைத் தரும். அதனால் ஒழுக்கத்தை உயிரைவிட மேலானதாகப் போற்றிப் கடைப்பிடிக்கவேண்டும். 61

ஒழுக்கந்தவறி நடத்தலால் பழி உண்டாகும். மனவலிமையுள்ள நல்லோர் இதனை அறிவர். அறிந்து ஒழுக்கத்தைக் கடைப்பிடித்தலில் இருந்து தளர்ந்து தவறமாட்டார். 62

ஒழுக்கமுடைய நல்லவர் தீய சொற்களை வாய் தவறியும் சொல்லார்· தீய சொல் அவரிடம் எந்த நிலையிலும் அமையாது. 63

உலகத்து நல்லவர்களோடு பொருந்தி நடக்கும் ஒழுக்கத்தை அறிதல் வேண்டும். பல கலைகளைக் கற்றிருப்பினும் இதனைக் கற்றல் வேண்டும். கல்லாதவர் அறிவற்றவர் ஆவார். 64

பிறன் மனைவியை விரும்பி ஒழுக்கம் தவறுதல் கூடாது. தவறுபவனுக்குப் பகை தோன்றும், பாவம் உண்டாகும்; பழி நிலைக்கும், அச்சம் நடுக்கும். இவை நான்கும் அவனைவிட்டு நீங்காமல் நிலைக்கும். 65

## 14. ஒழுக்கம் உடைமை

உயிரினும் உயர்ந்தது ஒழுக்கம்.

ஒழுக்கம் விழுப்பம் தரலான், ஒழுக்கம்
உயிரினும் ஓம்பப் படும். *131—61*

ஒழுக்கம் இழுக்கின் பழுக்கும் பழி.

ஒழுக்கத்தின் ஒல்கார் உரவோர், இழுக்கத்தின்
ஏதம் படுபாக்(கு) அறிந்து. *136—62*

தவறியும் தகாத சொல்லாமை.

ஒழுக்கம் உடையவர்க்(கு) ஒல்லாவே தீய
வழுக்கியும் வாயாற் சொலல். *139—63*

சற்றும் அறிவில்லார்.

உலகத்தோ(டு) ஒட்டஒழுகல், பலகற்றும்,
கல்லார் அறிவிலா தார். *140-64*

## 15. பிறன் இல் விழையாமை

நான்கு குற்றம் நீங்கா.

பகைபாவம் அச்சம் பழிஎன நான்கும்
இகவாவாம் இல்இறப்பான் கண். *146—64*

பிறர் மனைவியைக் காமக் கண்ணுடன் நோக்காமல் ஒழுகுதல் சிறந்த ஆண்தன்மையாகும். அன்புடைய நல்லவர்க்கு அது அறன் மட்டும் அன்று; ஒழுக்க நிறைவும் ஆகும். 66

அச்சுறுத்தும் கடல் நீர் சூழ்ந்த உலகத்தில் நன்மைக்கெல்லாம் உரியவர் யார்? யாரெனில், பிறனுக்குரிய மனைவியது தோளைத் தழுவாதவரே ஆவார். 67

நிலம் தன்னை ஓர் இடத்தில் தோண்டுபவரையும் வெறுத்துத் தள்ளாது மறு இடத்தால் தாங்கிக் கொள்ளும். அது போன்று தம்மை இகழ்ந்து பேசு பவரையும் கடிந்து வெறுக்காது பொறுத்துக் கொள்ளுதல் சிறந்த பண்பாகும். 68

நிறை என்பது முழு மாந்தன் தன்மை, அந்த நிறை உடைமை நீங்கக் கூடாது. நீங்காமையை விரும்பினுல் பொறுமையை விடாது காத்து ஒழுக வேண்டும். 69

தமக்குத் துன்பம் செய்தவர்க்கும் பொறுமை யின்றித் துன்பம் செய்தல் கூடாது. செய்தவர்க்கு அந்த ஒரு நாளே மன இன்பம் உண்டு. பொறுத்துக் கொண்டவர்க்கு உலகம் அழியும்வரை புகழ் உண்டு. 70

சிறந்த ஆண் தன்மை.

பிறன்மனை நோக்காத பேராண்மை சான்றோர்க்கு
அறனொன்றோ ஆன்ற ஒழுக்கு. 148

உலக நன்மைக் கெல்லாம் உரியவர்.

நலக்குரியார் யாரெனின் நாமநீர் வைப்பின்
பிறற்குரியாள் தோள்தோயா தார். 149

## 16. பொறை உடைமை

நிலம் போல உளம்.

அகழ்வாரைத் தாங்கும் நிலம்போலத் தம்மை
இகழ்வார்ப் பொறுத்தல் தலை. 151

நிறை வேண்டினால் பொறை வேண்டும்.

நிறைஉடைமை நீங்காமை வேண்டின் பொறை
போற்றி ஒழுகப்படும். [உடைமை 154

உலகம் அழியும் வரை உயர் புகழ்.

ஒருத்தார்க்(கு)ஒருநாளை இன்பம் பொறுத்தார்க்குப்
பொன்றும் துணையும் புகழ். 156

ஒருவன் தன் உள்ளத்தில் பொருமை கொள்ளாத் தன்மையைப் பெறுதல் வேண்டும். அத்தன்மையைத் தன் ஒழுக்க நெறியாகக் கொள்வாளுக! 71

மற்றவரது வளர்ச்சி கண்டு பொருமை கொள்ளுதல் ஒரு தவருன உணர்வு. அவ்வுணர்வால் துன்பம் உண்டாகும், நல்லோர் அதனை அறிந்து பொருமை கொள்ளார்; தீமைகளைச் செய்யார். 72

பொருமை என்பது ஓர் ஒப்பில்லாத பாவி. அது தன்னைக் கொண்டவரது செல்வத்தையும் அழகையும் கெடுக்கும்; தீய இடத்தில் கொண்டு செலுத்தும். 73

மனத்தில் பொருமைக்கு இடமளித்தவன் வாழ்வில் மேம்பாட்டை அடையான். பொருமைக்கு இடமளிக்காதவன் வாழ்வில் கேட்டை அடையான். இவற்றிற்கு முரண்பாடாக பொருமையன் மேம்பாடும். தூயவன் கேடும் பெற்ருல் அனுபவிக்கத் தக்கன. அவற்றின் காரணம் சான்ருேரால் ஆழ்ந்து ஆராயத்தக்கன. 74

பொருமைகொண்டு வாழ்வில் மேம்பாட்டை அடைந்தவரும்இலர். பொருமையை விட்டு வாழ்வில் தாழ்ந்தவரும் இலர். 75

## 17. அழுக்காறுமை

அழுக்காறு இல்லாமை ஓர் ஒழுக்க ஆறு.

ஒழுக்காறுக் கொள்க ஒருவன்தன் நெஞ்சத்(து)
அழுக்கா(று) இலாத இயல்பு. 161

அழுக்காறு ஓர் இழுக்கு ஆறு

அழுக்காற்றின் அல்லவை செய்யார், இழுக்காற்றின்
ஏதம் படுபாக்(கு) அறிந்து. 164

பொறாமை ஒரு பாவி.

அழுக்கா(று) எனஒரு பாவி திருச்செற்றுத்
தீயுழி உய்த்து விடும். 168

முரண்பாடு ஆராயத் தக்கது.

அவ்விய நெஞ்சத்தான் ஆக்கமும் செவ்வியான்
கேடும் நினைக்கப் படும். 169

பொறாமை பொலிவு ஆகாது.

அழுக்கற்(று) அகன்றாரும் இல்லை அஃதில்லார்
பெருக்கத்தில் தீர்ந்தாரும் இல். 170

பின்னர் நேர்வதை நினைந்து பார்க்காமல் பிறன் கைப்பொருளைக் கவர்ந்துகொள்ள விரும்பக்கூடாது. விரும்பினால், அது அழிவையே தரும். பிறன் பொருளை விரும்பாத தன்மை என்பது ஒரு தனிப்பெருமை. அது வாழ்வில் வெற்றியைத் தரும். 76

மற்றவரை அவர் இல்லாதபோது குறைத்துப் பேசி அவர் முன்னே பொய்யாகப் புகழ்ந்து பேசி வாழ்தல் இழிவு: அதைவிடச் சாதல் அறநூல்கள் சொல்லும் வாழ்வு வளர்ச்சியைத் தரும். 77

ஒருவன் கண்ணுக்கு முன்னே நின்று கண்ணோட்டம் இல்லாமல் கண்டிப்பாகப் பேசினும் பேசுக! அவன் முன்னே இல்லாத இடத்துப் பின்னர் நேர்வதை நினைந்து பார்க்காத பேச்சை விடுதல் வேண்டும். 78

கேட்பவர் மகிழும்படி பேசி நண்பராக அளவளாவும் பேச்சைத் தேர்ந்து கொள்ளுதல் வேண்டும். கொள்ளாதவர், புறம் பேசிப் பிரிக்கும் பேச்சால் நெருங்கிப் பழகும் உற்றாரையும் பிரித்துவிடுவர். 79

அயலாரைப் புறம்பேசுபவன் அவரது குற்றங்களைக் கூர்ந்து காண்பான். அதுபோன்றே தன் குற்றங்களையும் தானே கூர்ந்து காணவேண்டும் கண்டால், புறம்பேசான். அதனால், அவனது நிலைபெற்ற உயிருக்குத் தீங்கு இல்லை. 80

## 18. வெஃகாமை

வெற்றியைத் தருவது

இறல்ஈனும் எண்ணாது வெஃகின் விறல்ஈனும்
வேண்டாமை என்னும் செருக்கு. 180—76

## 19. புறம் கூறாமை

ஆக்கம் தரும் சாவு

புறம்கூறிப் பொய்த்துயிர் வாழ்தலின் சாதல்
அறம்கூறும் ஆக்கம் தரும். 183—77

பின்நோக்காச் சொல்

கண்நின்று கண்அறச் சொல்லினும் சொல்லற்க
முன்இன்று பின்நோக்காச் சொல். 184—78

உற்றாரையும் பிரிக்கும்

பகச்சொல்லிக் கேளிர்ப் பிரிப்பர் நகச்சொல்லி
நட்பாடல் தேற்றா தவர். 187—79

உயிர்க்குத் தீங்கு இல்லை

ஏதிலார் குற்றம்போல் தம்குற்றம் காண்கிற்பின்
தீதுண்டோ மன்னும் உயிர்க்கு? 190—80

பயனில்லாத சொற்களைப் பலரும் வெறுப்பர். அதனால் பயனில்லாத சொல்லுமவன் எல்லாராலும் தாழ்வாக எள்ளி நகையாடப்படுவான். 81

பயனில்லாதவற்றை மேலும் மேலும் மேலும் விரும்பிப் பேசுபவனை மாந்தர் இனத்தில் பிறந்த நன்மகன் என்று சொல்ல வேண்டாம். நெற்கதிருள் தோன்றிய பதர் போன்று மக்கள் இனத்துள் பிறந்த 'பதடி' என்று சொல்லவேண்டும். 82

தீய செயல்கள் தீமையையே தரும். சுட்டுத் தீய்க்கும் தீயைவிடக் கடுமையான தீமையையே தரும். அதனால், தீக்கு அஞ்சுவதைவிடக் கடுமையாக் அஞ்சவேண்டும். 83

'யான் செல்வம் இல்லாதவன்' என்று அதைப் போக்கிக் கொள்ளத் தீய செயல்களைச் செய்யக் கூடாது. செய்வதால், அக்காலத்தில் ஏழ்மையைப் போக்கிக்கொண்டாலும் பின் விளைவால் மீண்டும் ஏழையாகவேண்டி நேரும்.

ஒருவனது நிழல் அவனை விட்டு நீங்காது. தொடர்ந்து அவனது காலடியில் தங்குவது உறுதி. அதுபோன்று தீய செயல் தன்னைச் செய்பவனை விட்டு நீங்காது. அவனிடமே வந்து அமைந்து அவன் வாழ்வைக் கெடுத்தல் உறுதி. 85

## 20. பயன் இல சொல்லாமை

எல்லாராலும் எள்ளப்படுபவன்

பல்லார் முனியப் பயன்இல சொல்லுவான்
எல்லாரும் எள்ளப் படும். 191 – 81

பதர்போன்ற பதடி

பயன்இல்சொல் பாராட்டு வானை மகன்எனல்
மக்கள் பதடி எனல். 196—82

## 21. தீவினை அச்சம்

தீயினும் கடுமை

தீயவை தீய பயத்தலால் தீயவை
தீயினும் அஞ்சப் படும். 202—83

மீண்டும் ஏழை

இலன்என்று தீயவை செய்யற்க செய்யின்
இலன் ஆகும் மற்றும் பெயர்த்து. 205—84

நிழலும் தீயதும்

தீயவை செய்தார் கெடுதல் நிழல்தன்னை
வீயா(து) அடிஉறைந் தற்று. 208—85

தன் வாழ்வு நிலையைப் போன்றே பிறரது வாழ்வு நிலைக்கும் உதவுவது ஒப்புரவு எனப்படும் அதனைச் செய்து வாழ்பவன் உயிரோட்டமான வாழ்க்கை வாழ்பவன் ஆவான். உதவி செய்து வாழாதவன் இறந்தவர் பட்டியலில் இணைக்கப்படுவான். 86

குடிநீரைக் கொண்டது ஊருணி. அதில் நீர் நிறைந்தால் அது ஊர் மக்களுக்கெல்லாம் பயன்படும். அதுபோன்று சிறந்த அறிவுடன் ஒப்புரவு செய்பவனிடம் நிறையும் செல்வம் உதவி வேண்டுவோர்க்கெல்லாம் பயன்படும். 87

பயன்தரும் பழங்களைத் தரும் மரம் ஊரின் நடுவே பழுத்தால் ஊரார் உண்டு சுவைக்கப் பயன்படும். அதுபோன்று அன்புடன் ஒப்புரவு செய்பவனிடம் நிறையும் செல்வம் வறுமையாளர்க்கெல்லாம் பயன்படும். 88

வேர், தளிர் முதலிய தன் உறுப்புக்கள் எல்லாம் மருந்தாகி, எளிதில் மக்களுக்குக் கிட்டும் மரம் உலகோர் பிணியைத் தீர்க்கும். அதுபோன்று பேருள்ளத்துடன் ஒப்புரவு செய்பவனிடம் நிறையும் செல்வம் உலகோர் துன்பம் தீர்க்கப் பயன்படும். 89

ஒப்புரவு செய்வதால் கேடு வராது. கேடுபோல் தோன்றினும் முடிவில் நன்மையையே தரும் அதனால், அக்கேட்டை என்ன விலை கொடுத்தேனும் வாங்கலாம். பொருள்இல்லாது போனால் தன்னையே விற்றுப் பொருள் பெற்றுக்கொடுத்தாவது வாங்கலாம். 90

## 22. ஒப்புரவு அறிதல்

### இறந்தவர் பட்டியலில் இணைபவன்

ஒத்த(து) அறிவான் உயிர்வாழ்வான் மற்றையான்
செத்தாருள் வைக்கப் படும். 214—86

### ஊருணிச் செல்வன்

ஊருணி நீர்நிறைந் தற்றே உல(கு) அவாம்
பேர்அறி வாளன் திரு. 215—87

### பழுத்த மரச் செல்வன்

பயன்மரம் உள்ளூர்ப் பழுத்தற்றால் செல்வம்
நயன்உடை யான்கண் படின். 216–88

### மருந்து மரச் செல்வன்

மருந்து(து) ஆகித் தப்பா மரத்தற்றால் செல்வம்
பெருந்தகை யாண்கன் படின். 217–89

### விற்றும் விலைக்குப் பெறவேண்டியது

ஒப்புரவி னால்வரும் கே(டு) எனின் அஃ(து) ஒருவன்
விற்றுக்கோள் தக்க(து) உடைத்து. 220–90

ஒன்றும் அற்ற ஏழையர்க்கு அவர் விரும்பும் பொருளை மன மகிழ்வோடு கொடுப்பதே ஈகை. பிற கொடை எல்லாம் அளந்து கொடுத்துத் திரும்பப் பெற்றுக்கொள்ளும் பண்டமாற்றுத் தன்மையை உடையதாகும். 91

எவ்வகை நல்ல வழியில் வருவதாயினும் பிறர் ஈவதை இல்லறத்தார் பெற்றுக்கொள்வது நல்ல தன்று. ஆனால், இல்லாதவர்க்கு ஈவதால் மேம்பட்ட நிலையைத் தரும் ஓர் உலகம் கிடைக்காமற் போவதானாலும் ஈதலே சிறந்தது. 92

வறுமையால் ஒன்றும் அற்ற ஏழையரது அழிக்கும் பசியை ஈகையால் தீர்த்து வைத்தல் வேண்டும். அது செல்வம் பெற்ற ஒருவன் தன் செல்வத்தைச் சேமித்து வைக்கும் சேமிப்பு இடமாகும். 93

பொருளைச் சேர்த்துவைத்து இறுதியில் இழந்து விடும் அன்பற்றவர் உளர். அவர் ஏழையர்க்கு ஈந்து அதனால் உவப்படையும் இன்பத்தை அறியாதவர் போலும். 94

சாதலைவிடத் துன்பமானது வாழ்வில் வேறு ஒன்றும் இல்லை. ஆனால், ஏழையர் விரும்பும் பொருளை ஈய முடியாத துன்ப நிலையில் கொடிய சாவும் இனியதாம். 95

## 23. ஈகை

இத்தான் ஈகை

வறியார்க்கொன் றீவதே ஈகை,மற் றெல்லாம்
குறியெதிர்ப்பை நீர துடைத்து. 221—91

கொளல் தீது; ஈதல் நன்று

நல்லாறு எனினும் கொளல் தீது; மேலுலகம்
இல்லெனினும் ஈதலே நன்று. 222—92

செல்வத்திற்குச் சேமிப்பு இடம்

அற்றார் அழிபசி தீர்த்தல்; அஃதொருவன்
பெற்றான் பொருள்வைப் புழி 226—93

இன்பம் அறியாதவர்

ஈத்துவக்கும் இன்பம் அறியார்கொல், தாமுடைமை
வைத்திழக்கும் வன்க ணவர். 228—94

இனிய சாவு

சாதலின் இன்னாத தில்லை; இனிததூஉம்
ஈதல் இயையாக் கடை. 230—95

ஏழையர்க்கு ஈதல் வேண்டும். அதனால் புகழ்
பெற்று வாழ்தல் வேண்டும். அந்தப் புகழ்தான் ஒரு
வனது உயிர்க்கு ஊதியம். உயிர்க்குப் புகழல்லாத
ஊதியம் வேறு ஒன்றும் இல்லை. 96

புகழ் வளர்வது போன்றே அதன் வளர்ச்சிக்காக
வாழ்வில் சில கேடுகளும் வளரும். அப்புகழ் நிலைப்
பதற்குச் சாக்காடும் நேரும். கேட்டையும் சாக்
காட்டையும் புகழ்கருதி ஏற்பவர் வித்தகர். மற்று
எளியவர் ஏற்பது அரிது. 97

ஒரு செயலில் தலையிட்டு முன்வருபவர் அச்
செயலில் புகழ் பெறுவதற்குரிய திறமையோடு முற்
படுக. புகழுக்குரிய திறமை இல்லாதவர் ஒன்றில்
தலையிடுவதைவிட வாளாதிருத்தலே அவர்க்கும் மற்ற
வர்க்கும் நன்று. 98

புகழ் பெறாதவன் உடம்பு மிக இழிவானது.
குறையில்லாத விளைச்சலை வழங்கிவரும் வளமுடைய
நிலமும் அவனைத் தாங்குவதால் உண்டாகும் தாழ்
வால் விளைச்சலில் குன்றும். 99

வாழ்வில் பழிநேராமல் வாழ்பவரே உண்மை
வாழ்க்கை வாழ்பவர். புகழ் பெறாது வாழ்பவர் சிறந்த
வாழ்வு வாழாதவர் ஆவார். 100

# 24. புகழ்

### உயிருக்கு ஊதியம் புகழ்

ஈதல் இசைபட வாழ்தல், அதுவல்லது
ஊதியம் இல்லை உயிர்க்கு. 231–96

### வித்தகரது கேடும் சாக்காடும்

நத்தம்போல் கேடும் உளதாகும் சாக்காடும்
வித்தகர்க் கல்லால் அரிது. 235—97

### புகழோடு தோன்றுக

தோன்றின் புகழொடு தோன்றுக; அஃதிலார்
தோன்றலின் தோன்றாமை நன்று. 236—98

### வளங்குன்றும் வளமான நிலம்

வசையிலா வண்பயன் குன்றும், இசையிலா
யாக்கை பொறுத்த நிலம். 239—99

### உண்மை வாழ்வினர்

வசைஒழிய வாழ்வாரே வாழ்வார்; இசையொழிய
வாழ்வாரே வாழா தவர். 240—100

அருள் குணத்தைக்கொண்டு அருள் வாழ்வாம் ஆட்சி செய்பவர்க்குத் துன்பம் இல்லை. அதற்குக் காற்று மண்டலமாம் அருளால், உயிர்களைப் பெற்றுத் தொடர்ந்து இயங்கி வருகின்ற இந்த வளப்பமான நிலமென்னும் கோளே சான்றாகும். 101

தெளிந்த அறிவில்லாதவன் அறநூல்களின் உள்ளமைந்த உண்மைப்பொருளைக் காண முடியாது. அதுபோன்றே ஆராய்ந்தால், அருள் இல்லாதவன் செய்யும் அறத்தால் ஒரு பயனையும் காண முடியாது. 102

தன்னைவிட எளியவர் மேல் அருள் இல்லாமல் கடுமையாக நடந்துகொள்ளும் போது ஒன்றை நினைக்க வேண்டும். அது தன்னைவிட வலியவர்க்கு முன் தான் நடுங்கி நிற்கும் நிலையாம். அந்த நினைவால் அருட்குணம் உண்டாகும், 103

புலால் மற்றொரு உடம்பின் புண். புலாலை உண்கின்றவர் 'மற்றொரு உடம்பின் புண்ணை உண்கின்றோம்' என்பதை உணரவேண்டும். அவ்வாறு உணர்ந்தபின் புலால் உண்ணாமையைக் கடைப்பிடிக்க வேண்டும்.

உயிரைக் கொல்லாமல், புலால் உண்பதையும் கைவிட்டவன் மேம்பட்டவன் ஆவான். அவனுக்கு உணவாவதினின்றும் பிழைப்பதால் எல்லாம் உயிர்களும் கைகுவித்துத் தொழும். 105

## 25. அருள் உடைமை

அருளாளருக்கு அல்லல் இல்லை

அல்லல் அருளாள்வார்க் கில்லை வளிவழங்கும்
மல்லல்மா ஞாலம் கரி. 245–101

அருளாதான் செய்யும் அறம்

தெருளாதான் மெய்ப்பொருள் கண்டற்றால்தேரின்
அருளாதான் செய்யும் அறம். 949–102

வலியவன் முன் தான்

வலியார்முன் தன்னை நினைக்கத்தான் தன்னின்
மெலியார்மேல் செல்லும் இடத்து. 250–103

## 26. புலால் மறுத்தல்

புலால் ஒரு புண்

உண்ணாமை வேண்டும் புலாஅல் பிற(து)ஒன்றன்
புண்அ(து) உணர்வார்ப் பெறின். 257–104

உயிர்களெல்லாம் தொழும்

கொல்லான் புலாலை மறுத்தானைக் கைகூப்பி
எல்லா உயிரும் தொழும். 260–105

தனக்கு நேரும் துன்பத்தைத் தன் மனவலிமையால் தாங்குதலும், எவ்வுயிர்க்கும் சிறு இடையூறும் செய்யாதிருத்தலுமே தவம். தவத்தின் வடிவத்திற்கு இவையே அளவு, 106

துறவி தன்மனத்தில் வஞ்சத்தைக் கொண்டால் தன் நிலைக்குக் கூடாத ஒழுக்கத்தைக் கொள்வான். அந்தக் கூடாத ஒழுக்கத்தை அவனது உடலின் மூலப் பொருள்களான ஐந்து பூதங்களும் கண்டுகொள்ளும். அவை தன்னகத்தே அவனை எண்ணி ஏளனமாக நகைக்கும். 107

தீயஎண்ணங்களை மனத்தில் கொண்டதுறவிகளும் உளர். அவர் அவற்றை மறைக்க நீராடி உடலால் தூயராய் ஒழுக்க சீலர்போல் நடிப்பர். இத்தகைய துறவிகள் உலகில் பலராய் மலிந்துள்ளனர்.

கோணலின்றி நேராகத் தோற்றமளிக்கும் அம்பு தன் கொலைச்செயலால் கொடியது. கோணலாய்த் தோற்றமளிக்கும் யாழின் தண்டு இசைதருவதால் இனியது. இவற்றைக்கொண்டு, மக்களது துறவிகளது தோற்றத்தை விட்டு அவரது செயல்களைக்கொண்டே அவரது பெருமையை அறிய வேண்டும். 109

உலகத்துச் சான்றோர் பழித்துக் கூறும் தீய ஒழுக்கங்களை ஒழிக்கவேண்டும். ஒழித்தால், மழுங்க மொட்டையடித்துக்கொள்ளுதலும், சடை, தாடி வளர்த்துக் கொள்ளுதலுமாகிய வெளிக் கோலங்கள் கொள்ள வேண்டா. 110

## 27. தவம்

### தவத்திற்கு வடிவம்

உற்றநோய் நோன்றல் உயிர்க்குறுகண் செய்யாமை
அற்றே தவத்திற்(கு) உரு. 261–106

## 28. கூடா ஒழுக்கம்

### ஐந்தும் நகைக்கும்

வஞ்ச மனத்தான்படிற்(று) ஒழுக்கம் பூதங்கள்
ஐந்தும் அகத்தே நகும். 271–107

மனத்தில் குற்றமும் உடலில் தூய்மையும்

மனத்தது மாசு ஆக மாண்டார்நீர் ஆடி
மறைந்(து) ஒழுகும் மாந்தர் பலர். 278–108

### அம்பும் யாழும் அறிவிப்பன

கணைகொடி(து) யாழ்கோடு செவ்விதாங் கன்ன
வினைபடு பாலால் கொளல். 279–109

### மொட்டையும் தாடியும்

மழித்தலும் நீட்டலும் வேண்டா உலகம்
பழித்த(து) ஒழித்து விடின். 280–110

மற்றவனுடைய கைப்பொருளை லஞ்சமாகக் கவர்ந்துகொள்வோம் என்று மனத்தால் நினைப்பதும் தீமையே. நினைப்பு தீமையை நிறைவேற்றிவிடும். எனவே, பிறன் கைப்பொருளைக் வெர நினைக்கவும் கூடாது. 111

வாய்ச்சொல்லால் வெளிப்படும் உண்மை வாய்மை எனப்படும். அந்த வாய்மையின் நன்மை யாகச் சான்றோர் சிறப்பித்துக் கூறுவது யாது? யாது எனில், எந்தச் சிறு அளவிலும் மற்லர்க்குத் தீமை இல்லாத சொற்களைச் சொல்லுதலே பிகும். 112

பொய்யும் வாய்மையாகலாம். அந்தப் பொய் எக்காலத்திலும், எல்வகையிலும் குற்றமற்ற தன்மை யைத் தருதல் வேண்டும். அது வாய்மை என்று கூறத்தக்க தகுதியைப் பெறும். 113

தன் உள்ளம் உண்மையைப் பொய்த்துப் பேசக் கூடாது, பொய்யென்று மற்றவர்க்குத் தெரியாது போகலாம். பொய் என்பதைத் தன் உள்ளம் அறியும், அறிந்த உள்ளம் பின்னர் சுடுவது போன்று தருந்தும். 114

உலகில் யாம் உள்ளன உள்ளபடி அறிந்த பண்புகள் பல. அவற்றுள் எல்லாம் வாய்மையே சிறப்பாகக் குறிக்கத் தக்க பண்பு. பிற பண்புகளில் உண்மைபோன்று சிறந்தது இல்லை என்போம். 115

## 29. கள்ளாமை

நினைப்பும் தீமையே

உள்ளத்தால் உள்ளலும் தீதே பிறன்பொருளைக்
கள்ளத்தால் கள்வேம் எனல். 282-111

## 30. வாய்மை

வாய்மை யாது ;

வாய்மை எனப்படுவ(து) யா(து)எனின்
தீமை இலாத சொலல் [யாதொன்றும் 291-112

பொய்யும் வாய்மையாம்

பொய்மையும் வாய்மை இடத்த புரைதீர்ந்த
நன்மை பயக்கும் எனின். 292-113

தன்னைச்சுடும் தன்னுள்ளம்

தன்நெஞ்(சு) அறிவது பொய்யற்க பொய்த்தபின்
தன்நெஞ்சே தன்னைச் சுடும். 293-114

யாம் கண்ட வாய்மை

யாம்மெய்யாக் கண்டவற்றுள் இல்லை எனைத்(து)
வாய்மையின் நல்ல பிற. [ஒன்றும் 300—115

தன் சினம் தன்னைவிட வலிமை உள்ளவனிடம் செல்லுபடியாகாது. அவ்விடத்துச் சினத்தைக் காட்டினால் தனக்குத்தான் துன்பம். செல்லுபடியாகும் மெலியவரிடம் காட்டும் சினத்தால் அவர்க்கும் தனக்கும் துன்பம் நேரும். அதனால் செல்லும் இடத்துச் சினம் போன்ற தீது வேறு ஒன்றும் இல்லை. 116

ஒருவன் தனக்குத் துன்பம் வராமல் தன்னைத் தானே காத்துக்கொள்ள விரும்பினால் சினம் கொள்ளாமல் நீக்குவானாக! நீக்காது போனால், அச்சினம் நரம்புத் தளர்ச்சி கொடுத்துத் தன்னையே கொன்று விடும். 117

நெருப்பு தன்னைச் சேர்ந்தவரைக் கொல்லும், சினமும் அந்நெருப்பே. அது, நீரில் பாதுகாக்கும் துணையான மிதவைபோன்று துன்பத்தில் துணையாகும் நல்லினத்தாரையும் சுட்டுத் தீர்ப்பது போன்று கெடுக்கும். 118

தனக்குத் துன்பம் செய்தவரை ஒறுக்க (தண்டிக்க) எண்ணம் எழுதல் இயல்பு. எழுந்தால் அவரை ஒறுக்க ஒரு வழி உண்டு. அது, அவர்க்கு நல்ல உதவியைச் செய்து, அவர் செய்த தீமையை மறந்து விடுதலாகும். அதனால் அவரே நாணங் கொள்வார். அது தனக்கு வெற்றியாகும். 119

மற்ற உயிருக்கு நேரும் துன்பத்தைத் தனக்கு நேர்வதாக எண்ணவேண்டும். தன் துன்பத்திலிருந்து தன்னைக் காத்துக்கொள்வதுபோல், மற்ற உயிரையும் காக்கவேண்டும். இதுதான் மாந்தனது அறிவினால் ஆகவேண்டியது. இஃதில்லாத அறிவால் பயன் ஒன்றும் இல்லை. 120

## 31. வெகுளாமை

சினம் தீது.

செல்லா இடத்துச் சினம்தீது; செல்இடத்தும்
இல்அதனின் தீய பிற. 302—116

சினம் கொல்லும்.

தன்னைத்தான் காக்கின் சினம்காக்க; காவாக்கால்
தன்னையே கொல்லும் சினம். 305—117

சேர்ந்தாரைக் கொல்லி.

சினம் என்னும் சேர்ந்தாரைக் கொல்லி இனம்என்னும்
ஏமப் புணையைச் சுடும். 306—118

## 32. இன்னா செய்யாமை

தீமை செய்தவர்க்கு நன்மை.

இன்னாசெய் தாரை ஒறுத்தல், அவர் நாண
நன்னயம் செய்து விடல். 314—119

அறிவினான் ஆகுவது.

அறிவினான் ஆகுவ துண்டோ, பிறிதின்நோய்
தன்நோய்போல் போற்றாக் கடை. 315—120

அறச்செயல் எது? எது என்ருல், எவ்வுயிரையும் கொல்லாத செயல் புரிதலே. கொலைச் செயல், அறம் அல்லாப் பிற செயல்களை யெல்லாம் செய்ய வைக்கும். 121

உலகிலே நல்லதாக ஒன்றைக் கூற வேண்டு மாஞல், அது கொல்லாமையே. அதற்கு அடுத்த நல்லது ஒன்றைக் கூறின் அது பொய் சொல்லாமையே. 122

கூத்து நடக்கும் இடத்தில் ஒவ்வொருவராக வந்து பெருங்கூட்டமாகக் கூடுவர். அதுபோன்றே, செல்வமும் சிறுகச் சிறுகச் சேர்ந்து பெருஞ்செல்வமாகும். கூத்து முடித்ததும் சிறு நேரத்தில் கூட்டம் கலைந்துவிடும். அது போன்றே, பெருஞ்செல்வமும் திடீரென்று சென்று விடும். இதனை அறிந்து செல்வம் இருக்கும்போதே நல்லன செய்ய வேண்டும். 123

பகல், இரவு இரண்டும் கூடி நாள் என்று ஒரு காலத் தைக் காட்டும். அது நாள் அன்று; பாய்ந்தும் மீண்டும் அறுக்கும் வாள். அந்தவாள் உயிரை அறுக்கும் என்னும் உணர்வைப் பெற்று அன்றன்று நல்லன செய்ய வேண்டும். 124

இந்த உலகு ஒரு பெருமையை உடையது. அப் பெருமை நேற்று உயிரோடு உலவிய ஒருவன் இன்று இல்லாமற் போஞன் எனப்படுவதே. எனவே, நாளை என்று தள்ளாமல் நல்லன செய்யவேண்டும். 125

## 33. கொல்லாமை

அறவினை யாது?

அறவினை யாதுஎனின் கொல்லாமை; கோறல்
பிறவினை எல்லாம் தரும். 321—121

ஒன்றும் இரண்டும்

ஒன்றாக நல்லது கொல்லாமை; மற்று அதன்
பின்சாரப் பொய்யாமை நன்று. 323—122

## 34 நிலையாமை

கலையும் கூத்து மன்றம்.

கூத்தாட்டு அவைக்குழாத் தற்றே, பெருஞ்செல்வம்
போக்கும் அதுவிளிந் தற்று. 332—123

நாள் என்னும் வாள்.

நாள்என ஒன்றுபோல் காட்டி உயிர்ஈரும்
வாள்அது உணர்வார்ப் பெறின் 334—124

உலகிற்கு ஒரு புதுமை.

'நெருநல் உளன்ஒருவன்; இன்றில்லை' என்னும்
பெருமை உடைத்திவ் வுலகு. 336—125

ஒருவன் எந்த எந்தப் பொருளின் பற்றை எந்தெந்த அளவில் துறக்கின்றானோ, அந்தந்தப் பொருளால் அந்த அந்த அளவில் தன்னைத் துன்பத்திலிருந்து நீக்கிக் கொள்வான். முடிவில் துன்பமே இல்லாதவன் ஆவான். 126

ஒவ்வொரு பொருளின்மேலும் கொள்ளும் பற்றை இறுகப் பற்றிக்கொண்டு பற்றைத் துறக்காதவனைத் துன்பம் இறுகப் பற்றிக்கொள்ளும். பற்றிக்கொண்டு விடாமல் துன்புறுத்தும். 127

ஒவ்வொரு பொருளும் ஒவ்வொரு தன்மையில் தோற்றமளிக்கும். எத்தன்மையில் தோற்றமளித்தாலும் அந்தந்தப் பொருளின் உண்மையான உள்ளீட்டைக் கண்டு உணர்தலே மெய்யறிவாம். 128

தான் சார்ந்து கடைப்பிடிக்கத் தக்க தன்மைகளை உணர வேண்டும். சார விடாமல் கெடுக்கவேண்டியவற்றைக் கெடுத்து ஒழுக வேண்டும். ஒழுகினால், தன்னைச் சார்வதற்கு வாய்ப்பாகும் துன்பங்களும் சாரா. 129

கூடாதவற்றின்மேல் கொள்ளும் அவா, அவாவால் எழும் சினம், சினம் தரும் அறிவுக் கலக்கம் ஆகிய மூன்றின் பெயர்களும் நினைவிலிருந்தும் கெடவேண்டும். கெட்டால் தன்னை நோக்கும் துன்பமும் தானே கெடும். 130

## 35. துறவு

நோதல் இல்லாதவன்.

யாதனின் யாதனின் நீங்கியான் நோதல்
அதனின் அதனின் இலன். 341—126

இறுகப் பற்றும் இன்னல்.

பற்றி விடாஅ இடும்பைகள், பற்றினைப்
பற்றி விடாஅ தவர்க்கு. 347—127

## 36. மெய்யுணர்தல்

அறிவு மெய்ப்பொருள் காண்பது.

எப்பொருள் எத்தன்மைத் தாயினும் அப்பொருள்
மெய்ப்பொருள் காண்பது அறிவு. 355—128

சார்பு உணர்தல்.

சார்புணர்ந்து சார்பு கெடஒழுகின் மற்றழித்துச்
சார்தரா சார்தரும் நோய். 359—129

மூன்றும்கெட நோய்கெடும்.

காமம், வெகுளி, மயக்கம் இவைமூன்றன்
நாமம் கெடக்கெடும் நோய். 360—130

அவாக் கொள்ளா உள்ளம் ஒரு சிறந்த செல்வமாகும். அதுபோன்ற சிறந்த செல்வம் இந்நிலவுலகில் வேறு ஒன்றும் இல்லை; பிற கோள்களிலும் இல்லை எனலாம். 131

தூய்மை எனப்படுவது அவா இல்லாமை. இந்தத் தூய்மை மெய்யான தன்மைகளை விரும்புவதால் வந்து அமையும். 132

அவா என்பது எக்காலத்தும் நிறைவு கொள்ளாதது. அதை நீக்க வேண்டும். நீக்கிய அந்நிலையிலேயே தன்னைவிட்டுப் பெயர்ந்து செல்லாத நிறைந்த வாழ்வைத் தரும். 133

எவனுக்கும் பிறவியின் இயற்கையால் அமைந்த அறிவே உண்மை அறிவு. அவன் நுணுக்கமான பொருள்களை விளக்கும் நூல்கள் பலவற்றைக் கற்றாலும் அவற்றையும் மீறி அவ்வுண்மை அறிவே மேற்பட்டு நிற்கும். 134

நன்மை உண்டாகும் போது 'இது என் நற்செயலின் அமைப்பாம் ஊழால் உண்டானது' என்று ஊழைக் கண்டு மகிழ்பவன், தீங்கு உண்டாகும்போது துன்பப்பட்டுக் கலங்குவது ஏன்? அதனையும் ஊழாகக் கருதி அமைதி கொள்ளவேண்டும். 135

## 37. அவா அறுத்தல்

### எங்கும் இல்லாச் செல்வம்.

வேண்டாமை அன்ன விழுச்செல்வம் ஈண்டில்லை;
யாண்டும் அஃதுஒப்பது இல். 363—131

### வாய்மையும் தூய்மையும்.

தூஉய்மை என்பது அவாஇன்மை; மற்றஅது
வாஅய்மை வேண்ட வரும். 364—132

### பெயர்ந்து செல்லா நிறைந்த வாழ்வு.

ஆரா இயற்கை அவாநீப்பின் அந்நிலையே
பேரா இயற்கை தரும். 307—133

## 38. ஊழ்

### உண்மை அறிவே மிகும்.

நுண்ணிய நூல்பல கற்பினும், மற்றும்தன்
உண்மை அறிவே மிகும். 373—134

### அல்லலிலும் அமைதி.

நன்றாங்கால் நல்லவாக் காண்பவர்; அன்றாங்கால்
அல்லல் படுவது எவன். 379—135

'அறம்பாடிற்' றென்றே
அருங்குறளை அறமாய்ப்
புறம்பாடிற் றன்றே
புகழ்ந்து.

# பொருட்பால்

[அரசு, அமைச்சு, அரண், கூழ், படை, நட்பு, குடிமை எனும் பொருட் கூறுபாடுகளை விளக்கும் பகுதி]

இப்பதிப்பில், இவ்விதழ் :
பொருள் படைத்த
750 பொருட்குவையுள்
305 பொருள்கள் எடுத்து அடுக்கப்பட்ட

பொருட்பேழை

நாட்டை ஆளும் தலைவனுக்குக் காலந் தாழ்த்தாமை, கல்வியறிவு, துணிவு ஆகிய இவை மூன்றும் நீங்காதனவாய் நிலைத்திருக்க வேண்டிய தன்மைகளாகும். 136

அரசுக்குரிய வருவாயைப் பல வழிகளில் இயற்றுவதும், அவற்றை ஒன்றுகூட்டித் தொகுத்தலும், தொகுத்தவற்றைப் பாதுகாத்தலும், காத்தவற்றை மக்கள் நலனுக்கெனத் திட்டமிட்டு வகையாய்ச் செலவு செய்தலும் வல்லதே அரசின் இலக்கணம். 137

கற்கவேண்டிய நூல்களைக் கற்பாயாக! அவற்றை மனக்கசடு நீங்கும் அளவில் கற்பாயாக! கற்றபின் கற்ற கல்விக்குத் தக்க வழியில் நிலைத்து நடப்பாயாக! 138

மணற்பாங்கில் அமைந்த கேணி தோண்டத் தோண்டப் புதுப் புது நீர் தோண்டிய அளவிற்கு ஏற்ப ஊறும். அதுபோன்றே, மக்களுக்கு அறிவும் கற்கக் கற்கக் கற்கும் அளவிற்கு ஏற்பப் புதுமை புதுமையாகச் சுரக்கும். 139

கற்றவன் எந்த நாட்டிற்குச் சென்றாலும் அவன் நாடு போன்றே பயன்கொள்வான். அவன் ஊர் போன்றே பழகுவான். இது கண்கூடு. இதனை அறிந்தும் கற்காமலே இறக்கும் வரை காலம் கடத்தல் ஏனோ? 140

## 39 அரசமாட்சி

ஆள்பவர்க்கு மூன்று.

தூங்காமை, கல்வி, துணிவுடைமை இம்மூன்றும்
நீங்கா நிலனாள் பவற்கு. 383—136

வல்ல அரசு.

இயற்றலும் ஈட்டலும் காத்தலும் காத்த
வகுத்தலும் வல்லது அரசு. 385—137

## 40. கல்வி

கற்க; நிற்க!

கற்க கசடறக் கற்பவை; கற்றபின்
நிற்க அதற்குத் தக! 391—138

ஊறும் அறிவு.

தொட்டனைத் தூறும் மணற்கேணி மாந்தர்க்குக்
கற்றனைத் தூறும் அறிவு. 396—139

நாடும் ஊரும் நமதாம்.

யாதானும் நாடாமால் ஊராமால் என்ஒருவன்
சாந்துணையும் கல்லாத வாறு. 397—140

கட்டமிட்டு அரங்கு அமைக்காமல் தாய ஆட்டம் ஆட முடியாது. அதுபோன்று கருத்து நிறைந்த நூல்களைக் கற்காமல் அறிஞர் கூட்டத்தில் கலந்து உரையாட முடியாது. 141

கொங்கை இரண்டு தோன்றிப் பருவம் அடையாத பெண் பெண்ணுக்கு இயல்பான காதல் இன்பத்தை அடைய முடியாது. அதுபோன்றே, கல்வியையும், நூலறிவையும் அடையாதவன் கற்றவர் குழுவில் சொல்லாடும் மகிழ்ச்சியைப் பெற முடியாது. 142

கல்லாத ஒருவனுக்கு ஒரு தகுதியும் இல்லை. இருப்பதாகக் கருதப்பட்டால் அவன் கற்றவர் குழுவில் நின்று பேசும்போது ஏற்படும் சொற்சோர்வு அவன் தகுதியின்மையைக் காட்டிவிடும். 143

கல்வியை நுணுக்கமாக, மாட்சிமையுடன் ஆராயும் அறிவுநலத்தைப் பெறவேண்டும். பெருமல் உடல் அழகு நலம் பெற்றிருப்பது பெருமையன்று. உடல் அழகு நலம் மட்டும் பெற்றவன் மண்ணால் அழகு மிளிரச் செய்யப்பட்ட பெண் பொம்மையைப் போன்றவன் ஆவான். 144

வாழ்வை விளங்கவைக்கும் நூல்களைக் கற்றவரே மக்கள் இனத்தவர். கற்காத மற்றவர் விலங்கு இனத்தவர் மக்கள் வாழ்வுக்கும் விலங்கு வாழ்வுக்கும் உள்ள வேறுபாடு போன்றதே இவர்கள் வேறுபாடும் ஆகும். 145

# 41. கல்லாமை

### அரங்கில்லா வட்டாட்டம்.

அரங்கின்றி வட்டாடி யற்றே நிரம்பிய
நூலின்றிக் கோட்டி கொளல். 401—141

### கல்லாதான் சொல்லின்பம்.

கல்லாதான் சொல்கா முறுதல் முலையிரண்டும்
இல்லாதாள் பெண்காமுற் றற்று. 402—1

### தகரும் தகுதி.

கல்லா ஒருவன் தகைமை, தலைப்பெய்து
சொல்லாடச் சோர்வு படும். 405—14

### மண்பொம்மை-பெண்பொம்மை.

நுண்மாண் நுழைபுலம் இல்லான் எழில்நலம்,
மண்மாண் புனைபாவை அற்று. 407—144

### விலங்கொடு மக்கள்.

விலங்கொடு மக்கள் அனையர், இலங்குநூல்
கற்றாரோடு ஏனை யவர். 410—145

செவிக்கு உணவாகிய கேள்வி அறிவு கிடைக்காத போது தாழ்ந்த வயிற்றுக்குச் சிறிதளவு வழங்கப்பட வேண்டும். கேள்வியறிவை மிகுதியாகவும், உணவைக் குறைவாகவும் கொள்ளவேண்டும். 146

அறிஞர் கூறும் அறிவுரையாம் கேள்வியை நுணுக்கமாகக் கேட்டு உணர வேண்டும். உணர்ந்து மறவாமல் தொகுத்துக் கொள்ளவேண்டும். இத்தகைய கேள்வியறிவைப் பெற்றவர் உணர்ச்சி தவறிய நேரத்தும் அறிவற்றவற்றைச் சொல்லார். 147

அறிவு, உணர்ச்சி செல்லும் இடத்தில் உள்ளத்தைச் செல்ல விடாமல் தடுப்பது; தீய உணர்விலிருந்து நீக்குவது; நல்ல செயல்களில் செலுத்துவதாகும். 148

தான் பிறர்க்குச் சொல்லுங்கால் எளிதிற் புரியும் பொருளாக உள்ளத்தில் சென்று பதியுமாறு சொல்லி, பிறர் வாய்ச்சொற்களில் நுண்ணிய பொருள்களைக் காண்பதே அறிவுடைமையாகும். 149

எதிர்கால நடப்புகளை எண்ணி அறிந்து அவற்றிற்கேற்பத் தன் செயல்களை வகுத்துக் காத்துக்கொள்பவர் சிறந்த அறிவுடையவர். அவர்க்கு அதிர்ச்சியால் வரும் ஒரு நோயும் இல்லை. 150

## 42. கேள்வி

வயிற்றுக்குச் சிறிது.

செவிக்குணவு இல்லாத போழ்து சிறிது
வயிற்றுக்கும் ஈயப் படும். 412—146

ஈண்டிய கேள்வி.

பிழைத்துணர்ந்தும் பேதைமை சொல்லார்,
ஈண்டிய கேள்வி யவர். [இழைத்துணர்ந்து
417—147

## 43 அறிவுடைமை

அறிவு.

சென்ற இடத்தால் செலவிடாது தீதுஒரீஇ
நன்றின்பால் உய்ப்பது அறிவு. 422—148

காணும் அறிவு.

எண்பொருள வாகச் செலச்சொல்லித் தான்பிறர்வாய்
நுண்பொருள் காண்ப தறிவு. 424—149

அதிரும் நோய் இல்லை.

எதிரதாக் காக்கும் அறிவினார்க் கில்லை
அதிர வருவதோர் நோய். 429—150

துன்பம் வருவதற்கு முன்னர் அதற்குக் காரண மாகும் குற்றத்தை நீக்கிப் பாதுகாப்பு செய்துகொள்ள வேண்டும். செய்து கொள்ளாதவன் வாழ்க்கை கெடும்; தீயின் முன்னர் வைக்கோல் போர் பாதுகாப்பற்று எரிந்து கெடுவதுபோன்று விரைந்து கெடும். 151

எக்காலத்தும் தன்னைத் தானே புகழ்ந்து வெற்று மதிப்புக் கொள்ளாது விடுக! அதுபோன்றே நன்மை தராத குற்றமுள்ள செயல்களை விரும்பாமல் கடிந்து நீக்கிவிடுக ! 152

தான் விரும்பிய விருப்பம் ஈடேறும்வரை பிறர் அறி யாதபடி அமைதியாக ஆரவாரமின்றிக் கொண்டு செலுத்தினால் குற்றமற்றதாக முடியும், அப்படிச் செலுத் தின் பகைவரது சூழ்ச்சி நிறைந்த திட்டங்களாலும் இடையூறு செய்ய இயலாது. 153

அறத்தை அறிந்தவராய், ஆண்டாலும் அறிவாலும் மூத்தவரே பெரியார். அவரைத் துணையாகக் கொள்ளும் திறனை அறிந்து ஆராய்ந்து கொள்ளவேண்டும். 154

நல்ல நட்பாகக்கொண்ட பெரியாரது துணையைக் கைவிடக்கூடாது. கைவிடுதல் பலரது பகையைக் கொள்ளுவதைவிடப் பத்து மடங்கு தீமையைத் தரும். 155

## 44. குற்றம் கடிதல்

### வருமுன்னர் காவாதவன்

வருமுன்னர்க் காவாதான் வாழ்க்கை, எரிமுன்னர்
வைத்தூறு போலக் கெடும். 435—151

### தன்னை வியவற்க

வியவற்க எஞ்ஞான்றும் தன்னை; நயவற்க
நன்றி பயவா வினை. 439—152

### பகைவர் சூழ்ச்சி பயன்தராது

காதல காதல் அறியாமை உய்க்கிற்பின்
ஏதில ஏதிலார் நூல் 440—153

## 45. பெரியாரைத் துணைக்கோடல்

### திறனறிந்து தேரல்

அறன்அறிந்து மூத்த அறிவுடையார் கேண்மை
திறன்அறிந்து தேர்ந்து கொளல் 441—154

### பத்தடுத்த தீமை

பல்லார் பகைகொளலின் பத்தடுத்த தீமைத்தே
நல்லார் தொடர்கை விடல் 450—155

நீர், தான் சேரும் நிலத்தின் தன்மையால், தன் நிறமும் சுவையின்மையும் மாறி நிலத்தின் நிறத்தையும், சுவையையும் பெறும். அதுபோன்றே, மாந்தரது அறிவு தான் சேரும் இனத்தின் தன்மைகளை உடையதாகும். எனவே, தாழ்ந்தவரோடு சேரக்கூடாது. 156

மாந்தரது இயல்புகள் அவரவரது மனத்தின் இயல்பால் உண்டாகும். இவன் இத்தகையவன் என்று மதிப்பிட்டுக் கூறும் உரை அவன் சேர்ந்த இனத்தால் அமையும். 157

ஒரு செயலுக்குத் திட்டமிடும்போது அச்செயலால் நேரும் அழிவை ஆராய வேண்டும்; ஆகும் பயனை ஆராய வேண்டும்; பயன் தொடர்ந்து விளைவிப்பதை ஆராய வேண்டும்; இறுதியில் உருவாகும் ஊதியத்தை ஆராய வேண்டும். இவ்வாறு ஆராய்ந்து திட்டமிட்டுத் தெரிந்து செயல்வேண்டும். 158

ஒரு செயலைச் செய்யும் முன் அச்செயலின் தொடர்புகள் யாவற்றையும் எண்ணிப் பார்த்துத் துணிதல் வேண்டும். துணிந்து இறங்கிப் பின்னர் பார்த்துக்கொள்வோம் என்று செய்வது இழுக்கைத் தரும். 159

எவருக்காக நல்லது ஒன்றைச் செய்கிறோமோ அவரது குணநலன்களையும், குணக்குறைகளையும்அறிந்து செய்ய வேண்டும். அவ்வாறு செய்யாத இடத்து நல்ல செயலும் தவறாகித் தீமையைத் தந்துவிடும். 160

## 46. சிற்றினம் சேராமை

### நீரும் அறிவும்

நிலத்தியல்பால் நீர்திரிந் தற்றாகும், மாந்தர்க்கு
இனத்தியல்ப தாகும் அறிவு. 452—156

### நண்பனைக்கொண்டு நல் மதிப்பீடு

மனத்தானும் மாந்தர்க்கு உணர்ச்சி; இனத்தானும்
இன்னான் எனப்படும் சொல் 453—157

## 47. தெரிந்து செயல்வகை

### திட்டமிடும் திறன்

அழிவதூஉம் ஆவதூஉம் ஆகி வழிபயக்கும்
ஊதியமும் சூழ்ந்து செயல் 461—158

### எண்ணித் துணிக

எண்ணித் துணிக கருமம்; துணிந்தபின்
எண்ணுவம் என்பது இழுக்கு 467—159

### நன்றும் தவறாகும்

நன்றாற் றலுள்ளும் தவறுண்டு அவரவர்
பண்பறிந்து ஆற்றாக் கடை 469—160

தன் சூழ்நிலையின் வலிமைக்கு ஏற்பத் தன்னை அமைத்துக்கொண்டு ஒழுகவேண்டும். தன் வலிமையின் அளவையும் அறிய வேண்டும். இரண்டையும் அறியாதவனாய்த் தன் வலிமையைத் தவருகக் கணக்கிட்டுத் தன்னையே வியந்துகொள்பவன் விரைந்து கெடுவான். 161

தன் செல்வ நிலைமையின் அளவறிந்து வாழாதவனது வாழ்க்கை வளமாக உள்ளதுபோன்று தோன்றும். போகப் போக வளம் இல்லையாகிப் பிற்காலத்தும் வளம் தோன்ற முடியாத அளவில் கெடும். 162

எடுக்கும் செயலுக்கு ஏற்ற கருவியுடன் செய்யத் தக்க காலத்தை அறிந்து செயலாற்ற வேண்டும். அவ்வாறு செய்தால், செய்து முடிப்பதற்கு முடியாத செயல்கள் என எவையும் இல்லை. 163

உலகத்தையும் தன் உரிமையாக்கிக்கொள்ளக் கருதுபவர் 'தன் கருத்து அரியது' என்று கலங்கமாட்டார். கலங்காமல், நிறைவேற்றுவதற்குரிய காலத்தை எதிர்நோக்கியிருப்பர். தக்க காலத்தில் முடிப்பர். 164

அறிவு நிரம்பிய திறனுளர் எடுத்த செயலில் தடை தோன்றினுல் உடனே உணர்ச்சி வயப்பட்டுப் பொங்கி எழமாட்டார். தடையை நீக்கிச் செயலாற்றத் தக்க காலத்தை எதிர்பார்த்து உள்ளத்தில் பொங்கிக்கொண்டிருப்பர். 165

## 48. வலியறிதல்

### வியப்பவன் விரைந்து கெடுவான்

அமைந்தாங்கு ஒழுகான் அளவறியான் தன்னை
வியந்தான் விரைந்து கெடும். 474—161

### உள்ளதுபோலக் கெடும்

அளவறிந்து வாழாதான் வாழ்க்கை, உளபோல
இல்லாகித் தோன்றாக் கெடும். 479—162

## 49. காலம் அறிதல்

### முடியாது என்பது இல்லை

அருவினை என்ப உளவோ, கருவியான்
காலம் அறிந்து செயின். 484—163

### உலகத்தை உரிமையாக்குபவர்

காலம் கருதி இருப்பர், கலங்காது
ஞாலம் கருது பவர். 485—164

### காலம் பார்த்து வேர்ப்பவர்

பொள்ளென ஆங்கே புறம்வேரார், காலம்பார்த்து
உள்வேர்ப்பர் ஒள்ளி யவர். 487—165

முதலை தன் இருப்பிடமாகிய கடலில் பிறவற்றை வெல்லும். தன்னிடமாகிய — தன்னினும் வலிமை வாய்ந்த ஆழமான நீரைவிட்டு நீங்கினுல் அதனைப் பிற எளிய விலங்கும் வெல்லும். இதை எடுத்துக்காட்டாகக் கொண்டு தன் நிலைக்குரிய தக்க இடத்தில் செயலாற்றினுல் வெற்றி பெறலாம் என்பதை உணர வேண்டும். 156

ஒருவனைப்பற்றித் தெரிந்து தெளிவடைவதற்கு அவனது நற்குணங்களையும் ஆராய வேண்டும்; குற்றங்களையும் ஆராய வேண்டும். குணம் மிகுதியாக இருப்பின் அவனைத் தக்கவனுகத் தெரிந்து தெளிவடைய வேண்டும். குற்றம் மிகுதியாக இருப்பின் தகாதவனுகத் தெரிந்து விடவேண்டும். 167

ஒருவனது குண உயர்வுக்கும், குற்றத் தாழ்விற்கும் உரைகல் உண்டு. அக் கல் அவன் ஆராய்ந்து அறிவுத் தெளிவோடு செய்யும் செயலாகும். 168

தன் பணிக்கு அறியவேண்டிய அறிவை அறியாதவரை எதற்கும் தேர்ந்தெடுக்கக் கூடாது. தன் அன்புக்கு உரியவர் என்ற ஒரு பற்றுக்கோட்டாலேயே பணிக்குத் தேர்ந்தெடுத்தல் அறியாமையால் விளையும் தீமைகளை எல்லாம் தந்துவிடும். 169

ஒருவன் தகுதியை ஆராயாமல் அவனைப் பற்றித் தெளிவுகொள்ளுதல் தீராத துன்பத்தைத் தரும். ஆராய்ந்து தெளிவுகொண்ட ஒருவனிடம் பின்னர் ஐயம் கொள்ளுதலும் தீராத துன்பத்தைத் தரும். 170

## 50 இடன் அறிதல்

### முதலை ஒரு எடுத்துக்காட்டு

நெடும் புனலுள் வெல்லும் முதலை; அடும்புனலின்
நீங்கின் அதனைப் பிற. 495—166

## 51 தெரிந்து தெளிதல்

### மிகுதியைக் கொள்ளுதல்

குணம் நாடிக் குற்றமும் நாடி அவற்றுள்
மிகைநாடி மிக்க கொளல் 504—167

### ஓர் உரைகல்

பெருமைக்கும் ஏனைச் சிறுமைக்கும் தத்தம்
கருமமே கட்டளைக் கல். 505—168

### அன்பு ஒன்றே அருமை செய்யாது

காதன்மை கந்தா அறிவறியார்த் தேறுதல்
பேதைமை எல்லாம் தரும். 507—169

### தீராத் துன்பம்

தேரான் தெளிவும் தெளிந்தான்கண் ஐயுறவும்
தீரா இடும்பை தரும் 510—170

வருவாயைப் பெருக்கி, அதனால் நிலையான வளத்தை உண்டாக்கி, இடையில் நேரும் தடைகளையும் ஆராய்ந்து செய்வதே தெரிந்து செயலாற்றுதல் ஆகும். இவ்வாறு ஆராய்பவனே வினையைப் பயனுள்ள வகையில் செய்யும் செயலாளன். 171

ஒரு செயலைச் செய்ய எல்லா வகையாலும் ஆராய்ந்து தெளிந்த போதும், அதனை நடைமுறைப் படுத்திச் செயலாற்றும் வகையால் பலர் தம் தெளிந்த நிலையிலிருந்தும் வேறுபட்டுப் போகின்றனர். எனவே, தெளிந்தத்ற் கேற்பக் கவனமாய்ச் செயலாற்ற வேண்டும். 172

இந்தச் செயலால், இந்தத் திறமையால், இதனை இன்னவன் நிறைவேற்றுவான் என்று ஆராயவேண்டும். ஆய்ந்தபின் அதன் முழுப்பொறுப்பையும் அவனிடமே ஒப்படைத்து விடவேண்டும். 173

வாழ்வின் பற்றுக்கோடாகிய செல்வம் இல்லாது ஏழையானபோதும் பழைய உறவை மதித்தலும், பெருமைப்படுத்துதலும் சுற்றத்தாரிடத்தே உள்ள அன்புப் பண்புகளாம். எனவே, செல்வம் உள்ளபோது சுற்றத்தாரைத் தழுவி வாழவேண்டும். 174

குளம் பரந்த பரப்பை உடையதானாலும் உயர்ந்த கரையில்லாமல் நீர் நிறைய முடியாது. அதுபோன்றே, ஒருவன் செல்வ வளம் உள்ளவன் ஆனாலும், சுற்றத் தாருடன் அளவளாவிப் பழகாதுபோனால் அவனது வாழ்க்கை நிறைவடையாது. 175

## 52 தெரிந்து வினையாடல்

### சிறந்த செயலாளன்

வாரி பெருக்கி வளம்படுத்து, உற்றவை
ஆராய்வான் செய்க வினை. 512—171

### தெளிந்ததற் கேற்ப செயல்

எனைவகையான் தேறிய கண்ணும் வினைவகையான்
வேறாகும் மாந்தர் பலர். 514—172

### இடையே தலையிடக் கூடாது

இதனை இதனால் இவன்முடிக்கும் என்றாய்ந்து
அதனை அவன்கண் விடல். 517—173

## 53 சுற்றம் தழால்

### சுற்றத்தாரின் பண்புகள்

பற்றற்ற கண்ணும் பழமைபா ராட்டுதல்
சுற்றத்தார் கண்ணே உள. 521—174

### கரையில்லாக் குளம்

அளவளா வில்லாதான் வாழ்க்கை குளவளாக்
கோடின்றி நீர் நிறைந் தற்று. 523—175

மனச்சோர்வாகிய மறதி பொச்சாப்பு எனப்படும். அப்பொச்சாப்பு கிடைத்த புகழையும் கெடுத்துவிடும். நாள்தோறும் வரும் வறுமை நல்ல அறிவையும் கெடுப்பதுபோன்று கெடுத்துவிடும். 176

பின்னர் நேரும் இடையூறுகளை முன்னரே நினைந்து பார்த்துச் சவனமாய், மறதியால் தவறுதல் கூடாது. தவறுவதால். இடையூறு வந்த பின்னர் தன் தவற்றை எண்ணித் தனக்குத்தானே இரங்கவேண்டி நேரும். 177

தாம் தமக்கு உண்டான மகிழ்ச்சியால் பெருமிதம் கொள்ளும்போது ஒன்றை மறந்துவிடக்கூடாது. அதுபோது, மறதி என்னும் இகழ்ச்சிற்குரிய தன்மையால் கெட்டுப்போனவரை மறவாமல் நினைக்கவேண்டும். 178

ஆட்சியில் செங்கோல் முறை என்பது நிகழ்ந்தவை களை ஆராய்தல்; ஆராய்ந்து எவரிடமும் கண்ணோட்டம் காட்டாமை; காட்டாது நேர்மையை விரும்பல்; விரும்பித் தீர்ப்பைத் தேர்ந்தறிதல். இவற்றின் தொகுப்பே செங்கோல் முறையாம். 179

ஆட்சித் தலைவன் குடிமக்களைப் பகை முதலிய வற்றால் துன்பம் நேராமல் காக்கவேண்டும்; காத்து வாழ்வில் வளந்தந்து பேணவேண்டும். இவற்றுடன் குற்றங்களைத், தக்க ஒறுத்தல் மூலம் போக்குதல் வேண்டும். ஒறுப்பது பழியாகாது; ஆட்சித்தலைவன் தொழிலாகும். 180

## 54. பொச்சாவாமை

### மறதி ஒரு வறுமை

பொச்சாப்புக் கொல்லும் புகழை அறிவினை
நிச்ச நிரப்புக்கொன் றாங்கு. 532—176

### முன்னர் திருந்தாது பின்னர் வருந்தல்

முன்னுறக் காவாது இழுக்கியான் தன்பிழை
பின்னூறு இரங்கி விடும். 535—177

### மறக்கக் கூடாத ஒன்று

இகழ்ச்சியின் கெட்டாரை உள்ளுக தாம்தம்
மகிழ்ச்சியின் மைந்துறும் போழ்து. 539—178

## 55. செங்கோன்மை

### செங்கோல் முறைகள்

ஓர்ந்துகண் ணோடாது இறைபுரிந்து யார்மாட்டும்
தேர்ந்துசெய் வஃதே முறை. 541—179

### பழி அன்று தொழில்

குடிபுறம் காத்தோம்பிக் குற்றம் கடிதல்
வடுவன்று வேந்தன் தொழில். 549—180

அதிகாரக் கோலை ஏந்தி மக்களால் செலுத்த இயலாத வரியைக் கடுமையாக வாங்கல் கூடாது. அது காட்டு வழியில் வேலோடு நிற்கும் வழிப்பறிக்காரன் 'இருப்பதை எடுத்து இடு' என்று கொள்ளையடிப்பதைப் போன்றதாம். 181

ஆட்சித் தலைவன் நேர்மையான ஆட்சிமுறை தவறிக் கடுமையான ஆட்சி நடத்தக்கூடாது. நடத்தினால் பழி உண்டாகும். பருவ மழை பொருத்தமாகப் பெய்யாத இயற்கைக் குறையும் அவன் குறையாய்ப் பழியாகிவிடும். 182

நீண்ட காலம் தன் செல்வமும் புகழும் தன்னை விட்டு நீங்காதிருக்க விரும்பும் ஆட்சித் தலைவன் மக்கள் நடுங்கி அஞ்சத்தக்க செயலைச் செய்யக்கூடாது. குற்றங்களுக்காக ஒறுக்க நேரும்போதும் கடுமைபோல் தொடங்கி எளிய அளவாய் ஒறுப்பானாக! 183

ஆட்சித் தலைவனது வெற்றியைத் தேய்த்துக் குறைக்கும் அரம் இரண்டு. அவை கடுமையான சொல்லும், அளவு மீறிய ஒறுத்தலும் ஆகும். எனவே, இவற்றை விட வேண்டும். 184

அரச பதவிக்கு, இனத்தார் அமைச்சரும் கருமகாரர் முதலியோரும் ஆவர். ஆட்சித் தலைவன் அவர்களை எதற்கும் கலந்து ஆராயவேண்டும். கலக்காதவன் ஆட்சி தடைபடும். தடையால் சினங்கொண்டு சீறுவான், சீறி அஞ்சத்தக்க செய்வான். செய்வதால் செல்வமும் பெருமையும் சுருங்கும். 185

## 56. கொடுங்கோன்மை

### வரி வழிப்பறியாதல் கூடாது

வேலொடு நின்றான் 'இடு' என் றதுபோலும்,
கோலொடு நின்றான் இரவு. 552—181

### மழை பெய்யாமை தலைவன் பழி

முறைகோடி மன்னவன் செய்யின் உறைகோடி
ஒல்லாது வானம் பெயல். 559—182

## 57. வெருவந்த செய்யாமை

### கடுமையில் தொடக்கம் எளிமை முடிவு

கடிதோச்சி மெல்ல எறிக; நெடிதாக்கம்
நீங்காமை வேண்டு பவர். 562—183

### தேய்க்கும் அரம் இரண்டு

கடுமொழியும் கையிகந்த தண்டமும் வேந்தன்
அடுமுரண் தேய்க்கும் அறம். 567—184

### செல்வம் சுருங்கும்

இனத்தாற்றி எண்ணாத வேந்தன் சினத்தாற்றிச்
சீறின் சிறுகும் திரு. 568—185

முகத்தை முறிக்காமல் கண் நோக்கை ஓடவிடல் கண்ணோட்டம் (தாட்சணியம்.) இவ்வாறு சிறப்பித்துக் கூறப்படுவது மக்களுக்குச் சிறந்த அழகு ஆகும். இது மக்களிடம் உள்ள காரணத்தால்தான் இவ்வுலகு இயக்கம் கெடாமல் நிலைத்து இயங்குகின்றது. 186

உலக நடைமுறை ஒருவருக்கொருவர் கொள்ளும் கண்ணோட்டத்தில்தான் உள்ளது. எனவே, அக்கண்ணோட்டம் இல்லாதவர் உலகியலுக்குப் பயன்படாதவர். அவர் இந்நிலத்திற்கு உண்மையிற் சுமையே ஆவார். 187

கண்ணால் அளவளாவும் பார்வையோடு பொருந்திக் கண்ணோட்டம் செலுத்தவேண்டும். அவ்வாறு கண்ணோடாதவர் மண்ணோடு பொருந்திய பட்ட மரம் மட்கிப் போவது போன்று வாழ்வில் வீணாவார். 188

கண்ணோடுவதால் எடுத்த செயல் சிதையக் கூடாது. இது ஒரு வல்லமை. இவ்வல்லமை உடையவருக்கு இவ்வுலகம் உரிமையாகும். 189

கண்ணோட்டம் மிக நயம் வாய்ந்த நாகரிகம். அதனை விரும்புபவர் தம்பால் அன்புடையவர் நஞ்சை ஊற்றி வழங்குவதைக் கண்டும் முகத்தை முறிக்காமல் அதனை உண்டு மகிழ்வர். இது மிக மிக மேம்பட்ட பெருந்தன்மையாகும். 190

## 58. கண்ணோட்டம்

### உலகம் உண்டு

கண்ணோட்டம் என்னும் கழிபெரும் காரிகை
உண்மையான் உண்டிவ் வுலகு. 571—186

### உண்மையான சுமை

கண்ணோட்டத் துள்ளது உலகியல்; அஃதிலார்
உண்மை நிலக்குப் பொறை. 572—187

### மனிதருள் மட்கும் மரம்

மண்ணோடு இயைந்த மரத்தனையர் கண்ணோடு
இயைந்துகண் ணோடா தவர். 576—188

### உலகமே உரிமையாகும்

கருமம் சிதையாமல் கண்ணோட வல்லார்க்கு
உரிமை உடைத்திவ் வுலகு. 578—189

### நயம் நிறைந்த நாகரிகம்

பெயக்கண்டும் நஞ்சுண்டு அமைவர், நயத்தக்க
நாகரிகம் வேண்டு பவர். 580—190

ஆட்சித் தலைவன் ஒற்றரை அமைத்து அவரால் பகைவரது அன்றன்றைய நடவடிக்கைகளைத் தெரிதல் வேண்டும் தெரியாதவன் ஆட்சி, வெற்றிகொள்வதற்கு வகையில்லாது போகும். 191

ஒற்றன் மறைவாகச் செய்யும் குற்றங்களை அததற் கேற்ற மறைவாகவே கேட்டும் கண்டும் அறிய வல்லவன் ஆக வேண்டும். கேட்டுக் கண்டவற்றை ஐயப்பாடு இல்லாமல் துணிந்து கொள்ளவேண்டும். 192

ஓர் ஒற்றன் கேட்டுக் கண்டு கொடுத்த கருத்தை எல்லாம் வேறு ஓர் ஒற்றனால் மேலும் ஒற்றி அறிய வேண்டும். அறிந்து இரண்டையும் ஆய்ந்து உண்மை யைக் கொள்ளவேண்டும். 193

ஊக்கம் கையிலுள்ள செல்வமாகும். அச்செல் வத்தைத் தன்னைவிட்டு நீங்காமல் காத்துக்கொள்ள வேண்டும். கொண்டவர் பெற்ற பெருஞ்செல்வத்தை இழந்தாலும் இழந்து விட்டோமே' என்று சோர்ந்து கலங்க மாட்டார். 194

சோர்வு இல்லாத ஊக்கம் உடையவனிடம் செல்வ மும் மேம்பாடும் அவன் இருக்கும் வழியை உசாவி அறிந்துகொண்டு சென்று சேரும். 195

## 59. ஒற்றாடல்

### ஒற்று ஒரு வெற்றி

ஒற்றினான் ஒற்றிப் பொருள் தெரியா மன்னவன்
கொற்றம் கொளக்கிடந்த தில். 583—191

### ஐயப்பாடு இல்லாமை

மறைந்தவை கேட்கவற் றாகி அறிந்தவை
ஐயப்பாடு இல்லதே ஒற்று. 587—192

### ஒற்றால் ஒற்றைப் பற்றுதல்

ஒற்றொற்றித் தந்த பொருளையும் மற்றுமோர்
ஒற்றினால் ஒற்றிக் கொளல். 588—193

## 60. ஊக்க முடைமை

### இழப்பிற்கு இரங்காதவர்

ஆக்கம் இழந்தேமென்று அல்லாவார் ஊக்கம்
ஒருவந்தம் கைத்துடை யார். 593—194

### வழிகேட்டு வந்தடையும் செல்வம்

ஆக்கம் அதர்வினாய்ச் செல்லும் அசைவிலா
ஊக்கம் உடையான் உழை. 594—195

குடும்பம் என்பது ஒளி மங்காத விளக்காகும். அக் குடியிற் பிறந்தவன் சோம்பல் இல்லாமல் தன் குடி உயரப்பாடுபடவேண்டும். சோம்பல் என்னும் மாசு கவ்வுமானால் குடும்ப விளக்கு அணைந்துவிடும். 196

வாழ்வில் கெடும் தன்மைகொண்டவர் விரும்பி அணியும் அணிகலன் நான்காம். அவை, எச்செயலையும் செய்யக் காலந் தாழ்த்தல், மறதி, சோம்பல், பகல் தூக்கம் ஆகியவையாகும். 197

உலகையே உடைமையாகக் கொண்ட திருவாளனது நெருக்கமான உறவு அமைந்த இடத்துச் சிறந்த நலன்களைப் பெறலாம். ஆனால் சோம்பல் உடையவன் அவரிடமிருந்து எந்த நலனையும் பெற முடியாமற் போகும். 198

தம்மால் செய்வதற்கு முடியாதது என்று எச்செயலிலும் சோர்வு கொள்ளக் கூடாது, முயற்சி எச்செயலையும் செய்வதற்கு ஏற்ற பெருந் தகுதியைத் தரும். 199

முனைந்து கொள்ளும் முயற்சி பெருமையையும் செல்வத்தையும் வளர்க்கும். முயற்சி இல்லாமை சிறுமையிலும் வறுமையிலும் கொண்டு புகுத்திவிடும். 200

## 61. மடியின்மை

### குடும்ப விளக்கு அணையும்

குடி என்னும் குன்றா விளக்கம் மடிஎன்னும்
மாசுஊர மாய்ந்து கெடும். 601—196

### அணிகலன் நான்கு

நெடுநீர் மறவி மடிதுயில் நான்கும்
கெடும்நீரார் காமக் கலன். 605—197

### சோம்பல் வளத்தைத் தடுக்கும்

படியுடையார் பற்றமைந்தக் கண்ணும், மடிஉடையார்
மாண்பயன் எய்தல் அரிது. 606—198

## 62. ஆள்வினையுடைமை

### முடியாதது இல்லை

அருமை உடைத்தென்று அசாவாமை வேண்டும்;
பெருமை முயற்சி தரும். 611—199

### சிறுமையிலும் வறுமையிலும் புகுத்தும்

முயற்சி திருவினை ஆக்கும்; முயற்றின்மை
இன்மை புகுத்தி விடும். 616—200

ஐம்பொறிகளில் ஒன்றோ பலவோ இல்லாமை எவர்க்கும் வாழ்வில் பழி ஆகாது. உள்ள பொறிகளின் வழியாக அறிய வேண்டியவற்றை அறிந்து அதற்கேற்ற முயற்சி இல்லாதிருத்தலே பழி ஆகும். 201

தெய்வத்தின் துணையால் ஆகாத செயல்களாய் இருப்பினும் முயற்சி அதனை முடிக்கும். முயற்சி உடலை வருத்தி உழைக்கச் செய்வதால் உழைப்பிற்குரிய ஊதியத்தைத் தரும். 202

காலந் தாழ்த்தாமல்—உரிய காலத்தில் சோர்வு பாராமல் முயற்சி செய்பவர் பெரும் வலிமையுடைய ஊழையும் புறங்காண்பர். 203

எடுத்த முயற்சியில் துன்பம் நேர்ந்தால் மனங் கலங்கக்கூடாது. அத்துன்பத்தைத் துணிவுடன் தாங்கி அதை எள்ளி நகைக்கவேண்டும். அந்த நகைப்பைப் போன்று துன்பத்தைத் தாங்கித் தள்ளி அதன்மேல் ஏறி ஊர்ந்து செல்வது வேறு ஒன்றும் இல்லை. 204

எருது தடை உண்டாகும் இடமெல்லாம் தளராது ஊன்றி இழுக்கும் அதுபோன்று தடைகளை எதிர்த்துத் தகர்ப்பவனை அடைந்த துன்பம் துன்பப்படும். 205

### உறுப்புக்குறை உண்மைப் பழியன்று

பொறிஇன்மை யார்க்கும் பழியன்று; அறிவறிந்து
ஆள்வினை இன்மை பழி. 618—201

### தெய்வத்தையும் மீறிய திறன்

தெய்வத்தான் ஆகாது எனினும் முயற்சிதன்
மெய்வருத்தக் கூலி தரும். 619—202

### ஊழையும் புறங்காணல்

ஊழையும் உப்பக்கம் காண்பர், உலைவுஇன்றித்
தாழாது உஞற்று பவர். 620—203

## 63. இடுக்கணழியாமை

### துன்பம் ஓர் ஊர்தி

இடுக்கண் வருங்கால் நகுக! அதனை
அடுத்தூர்வது அஃதொப்பது இல். 621—204

### பகடு போன்றவன்

மடுத்தவாய் எல்லாம் பகடுஅன்னான் உற்ற
இடுக்கண் இடர்ப்பாடு உடைத்து. 624—205

ஆளும் செயலுக்கேற்ற, கருவியும், தக்க காலமும், செயல் திறமையும், அருமையான செயலும் மாண்பு, உடையனவாய்க் கொள்பவன் மாண்புமிகு அமைச்சன் ஆவான். 206

அஞ்சாமை, குடிப்பெருமை, மக்களைக் காத்தல் கற்று அறிதல், முயற்சி என்னும் ஐந்துடன் அமையின் அமைச்சனது திறன் மாண்புடையதாகும். 207

அமைச்சன் எதிரிகளுக்குள் பிரிவை உண்டாக்கிப் பிரித்தலும், நண்பர் பிரியாமல் காத்துக்கொள்ளுதலும், பிரிந்து சென்று நொதுமல் ஆனவரை மீண்டும் தம் முடன் பொருத்திக்கொள்ளுதலும் ஆகிய திறன்களில் வல்லவன் ஆகவேண்டும். 208

அமைச்சன் தன் கடமைகளை ஆராய்ந்து தேர்தல் வேண்டும். தேர்ந்த கடமைகளை ஆராய்ந்து செய்தல் வேண்டும், ஆட்சிக்குரிய கருத்தை உறுதியாகச் சொல்ல வேண்டும். இவற்றில் தேர்ந்தவனே வல்லமையுள்ள அமைச்சன் ஆவான். 209

இயற்கை அறிவாம் மதி நுட்பத்தைச் செயற்கை அறிவாம் நுலறிவோடு பெற்ற அமைச்சனுக்கு முன் எதிர்நிற்பவையாக எவை உள்ளன? மாறுபாடு மிக நுட்பமான சூழ்ச்சிகளும் அவனுக்கு முன் வராமலே அழியும். 210

## 64. அமைச்சு

### மாண்புமிகு அமைச்சன்

அருவியும் காலமும் செய்கையும் செய்யும்
கருவினையும் மாண்டது அமைச்சு. 631—206

### அமைச்சனுக்கு மாட்சிமை ஐந்து

வன்கண் குடிகாத்தல் கற்றறிதல் ஆள்வினையோடு
ஐந்துடன் மாண்டது அமைச்சு. 632—207

### அமைச்சன் திறன் மூன்று

பிரித்தலும் பேணிக் கொளலும் பிரிந்தார்ப்
பொருத்தலும் வல்லது அமைச்சு. 633—208

### வல்லமை உள்ள அமைச்சன்

தெரிதலும் தேர்ந்து செயலும் ஒருதலையாச்
சொல்லலும் வல்லது அமைச்சு. 634—209

### இயற்கை அறிவும் செயற்கை அறிவும்

மதிநுட்பம் நூலோடு உடையார்க்கு அதிநுட்பம்
யாவுள முன்நிற் பவை. 636—210

நாவன்மை ஒரு நலம். அந்நலமே நல்ல உடைமையாம் செல்வம் என்று நூல்கள் கூறும். அந்த நாவன்மையால் விளையும் நலம் வேறு எந்த நலத்துள்ளும் உள்ளது அன்று. 211

சொல்வன்மை என்பது தன் பேச்சைக் கேட்டாரை வயப்படுத்தும் தகுதியை அவாவிக் கேளாதவரும் ஆர்வத்தோடு கேட்க விரும்புமாறு சொல்லப்படுவதாகும். 212

மாற்றானிடம் தன் சொல்லை வெல்லும் சொல் இல்லாததை அறிய வேண்டும், அறிந்து அத்தகைய திறனுள்ள சொல்லைச் சொல்ல வேண்டும். 213

சொல்லுகின்ற கருத்திற்கேற்ற சொற்களை ஒழுங்கு படுத்திக் கேட்போருக்கு நயமாகச் சொல்லும் வல்லமையைப் பெறவேண்டும். பெற்றால் அவன் இடும் ஏவலை உலகத்தவரே விரைந்து கேட்டுச் செய்வர். 214

நூல்களைக் கற்றவர் தாம் கற்றதை மற்றவர் உணரும் வகையில் விரித்துரைக்கும் வன்மையைப் பெறுதல் வேண்டும். பெறாதவர் அரும்புக்கொத்து மலர்ந்தும் மணக்காத மலர் போன்று பயனற்றவர் ஆவார். 215

## 65. சொல்வன்மை

### நாநலம்

நாநலம் என்னும் நலன்உடைமை அந்நலம்
யாநலத்து உள்ளதூஉம் அன்று. 641—211

### சொல்வன்மை

கேட்டார்ப் பிணிக்கும் தகையவாய்க் கேளாரும்
வேட்ப மொழிவதாம் சொல். 643—212

### வெல்லும் சொல்

சொல்லுக சொல்லைப் பிறிதோர்சொல் அச்சொல்லை
வெல்லும்சொல் இன்மை அறிந்து. 645—213

### உலகம் விரைந்து தொழில் கேட்கும்

விரைந்து தொழில்கேட்கும், ஞாலம் நிரந்தினிது
சொல்லுதல் வல்லார்ப் பெறின். 648—214

### மணமில்லா மலர்க்கொத்து

இணர்ஊழ்த்தும் நாறா மலர்அனையர், கற்றது
உணர விரித்துஉரையா தார். 650—215

தனக்கு அமைந்த துணைவர்களால் உண்டாகும் நலம் ஆக்கத்தைத் தரும். ஆனால், தான் செய்யும் தூய்மையான வினைதான் விரும்பிய எல்லாவற்றையும் தரும். எனவே, துணைநலத்தை விட வினைநலம் சிறந்தது. 216

இத்தகைய இழிவான செயலைச் செய்தோமே என்று தனக்குத் தானே இரங்குவதற்குக் காரணமான செயலைச் செய்யக்கூடாது. தவறிச் செய்துவிட்டால் மீண்டும் அதுபோன்ற தூய்மையில்லாத செயலைச் செய் யாது விடுதல் நலம். 217

தூய்மையற்ற செயல்கள் என்று நல்லவரால் விலக்கப்பட்டவைகளைத் தம் செயலிலிருந்து விலக்கி நீக்கவேண்டும். நீக்காமல் செய்தவர்க்கு அவை நிறை வேறினாலும் முடிவில் தாழ்வையே தரும். 218

பிறர் மனம் கலங்குமாறு பழிச்செயலைச் செய்து பெற்ற பொருள் எல்லாம் தன் மனம் கலங்குமாறு போய்விடும் தூய்மையான செயலோடு நல்ல நெறி யில் வந்த பொருள்களை இழந்தாலும் பின் நன்மை யைப் பயந்தே தீரும். 219

சுடப்படாத பச்சை மண் குடத்தில் நீரை ஊற்றித் தேக்கிவைத்திருந்தால், மண் கரைந்து நீரும் ஓடிவிடும். அதுபோன்று தூய்மையில்லாத வஞ்சனைச் செயல்களைச் செய்வதால் பொருளை ஈட்டிச் சேர்த்துப் பாதுகாத்தல் இழப்பையே தரும். 220

## 66 வினைத்தூய்மை

### துணை நலமும் வினை நலமும்

துணைநலம் ஆக்கம் தரூஉம்; வினைநலம்
வேண்டிய எல்லாம் தரும். 651—216

### மீண்டும் செய்தல் கூடாது

எற்றென்று இரங்குவ செய்யற்க; செய்வானேல்
மற்றன்ன செய்யாமை நன்று. 655—217

### விலக்காது போனால் வீழ்வையே தரும்

கடிந்த கடிந்துஒரார் செய்தார்க்கு அவைதாம்
முடிந்தாலும் பீழை தரும். 658—218

### இழந்தாலும் நன்மையே

அழக்கொண்ட எல்லாம் அழப்போம்; இழப்பினும்
பின்பயக்கும் நற்பா லவை. 659—219

### சுடப்படாத மண்குடம்

சலத்தால் பொருள்செய்து ஏமார்த்தல், பசுமண்
கலத்துள் நீர் பெய்து இரீஇ யற்று. 660—220

செயல் உறுதி என்பது அவனது மன உறுதியே ஆகும். மன உறுதி இல்லாமல் செய்யப்படும் பிற எல்லாம் நிலைத்து நிற்காது விரைந்து மறையும் பயனையே தரும். 221

எடுத்த செயல் முடிவடையும் இறுதிவரை அதன் நோக்கம் வெளிப்படாமல் காக்க வேண்டும். அஃதே ஆண்மை. இடையில் நோக்கம் வெளிப்பட்டால் தள் ள முடியாத இழிவான மனத் துன்பத்தைத் தரும். 222

இச்செயலை இத்துணைச் சிறப்பாகச் 'செய்து விடுவேன்' என்று வாயால் சொல்லுதல் எவருக்கும் எளிதாகும். சொல்லிய முறையில் செய்து நிறைவேற்று தல் அருமையாகும். 223

ஒரு செயலைச் செய்ய எண்ணியவர் அச்செயலில் ஊன்றிய மன உறுதி உடையவர் ஆகவேண்டும். உடையவராகச் செயலாற்றினால் பெற நினைத்தவற்றை எலலாம் நினைத்த பாங்கிலேயே பெறுவர். 224

உருண்டு ஓடும் மிகப்பெரிய தேருக்கு மிகச்சிறிய அச்சாணி இன்றியமையாதது. அதுபோன்று மிகப் பெரும் செயலுக்கு உருவத்தில் மிகச் சிறியவர் இன்றிய மையாதவராக இருப்பர். எனவே, ஒருவரது சிறிய உருவத்தைக் கண்டு அவரை எளியவராக நினைத்தல் கூடாது. 225

## 67 வினைத் திட்பம்

### மன உறுதியே செயல் உறுதி

வினைத்திட்பம் என்பது ஒருவன் மனத்திட்பம்;
மற்றைய எல்லாம் பிற. 661—221

### உள்நோக்கம் விளம்பேல்

கடைக்கொட்கச் செய்தக்க தாண்மை: இடைக்கொட்
எற்ரு விழுமம் தரும். [கின் 663—222

### எளிதும் அரிதும்

சொல்லுதல் யார்க்கும் எளிய; அரியவாம்
சொல்லிய வண்ணம் செயல். 664—223

### நினைத்த பாங்கிலேயே பெறுதல்

எண்ணிய எண்ணியாங்கு எய்துப, எண்ணியார்
திண்ணியர் ஆகப் பெறின். 666—224

### அச்சாணியும் சிறியவரும்

உருவுகண்டு எள்ளாமை வேண்டும்; உருள்பெருந்
அச்சாணி அன்ஞர் உடைத்து. [தேர்க்கு 667—225

பலவற்றையும் சூழ்ந்து ஆராய்ந்து எடுத்த செயல் முடிவடைவதற்கு மனத்துணிவு வேண்டும். அத்துணிவோடு விரைந்து செயலாற்றவேண்டும். காலங்கடத்தித் தேங்கியிருத்தல் தோல்வியைத் தரும். 226

வினைசெயல் ஐந்து வகைகளோடு அமைவதாகும். அவை, வினைக்குப்பயன்படும் பொருள், பொருத்தமான கருவி, தக்க காலம், செயல் திறன், செய்யும் இடம் என்னும் ஐந்துமாம். இவற்றை மயக்கத்திற்கு இடமில்லாமல் எண்ணி எண்ணிப் பார்த்துச் செய்தல் வேண்டும். 227

மதநீரால் நனைந்த கன்னத்தை உடைய சிறந்த யானையால் யானையைப் பிடித்துக் கட்டுவர். அதுபோன்று செய்யும் ஒரு செயலைக்கொண்டே மற்றொரு செயலையும் நிறைவேற்றிக் கொள்ளுதல் வேண்டும். 228

ஆட்சி நலம் கருதித் தூது செல்பவன் நுண்ணறிவு, கவர்ச்சியான தோற்றம், உளநூலை ஆராய்ந்த கல்வி, ஆகிய இம்மூன்றிலும் நிறைந்த தகுதி உடையவனாக அமைய வேண்டும். அத்தகையவனே தூது செல்லும் வினையை மேற்கொள்வானாக! 229

தூதுச் செய்தியாகச் சொல்லவேண்டியவற்றைத் தொகுத்துச் சொல்லி, பயன் தராதவற்றை நீக்கிக் கேட்போர் மகிழ்வோடு கேட்குமாறு சொல்லி நாட்டுக்கு நன்மையை விளைவிப்பதே தூது ஆகும். 230

## 68 வினை செயல் வகை

### சூழ்ச்சியும் தாழ்ச்சியும்

சூழ்ச்சி முடிவு துணிவெய்தல்; அத்துணிவு
தாழ்ச்சியுள் தங்குதல் தீது. 671—226

### வினைசெயல் வகை ஐந்து

பொருள்கருவி காலம் வினையிடனொடு ஐந்தும்
இருள்தீர எண்ணிச் செயல். 675—227

### யானையால் யானை

வினையால் வினையாக்கிக் கோடல் நனைகவுள்
யானையால் யானையாத் தற்று. 678—228

## 69 தூது

### தூதுவன்

அறிவுஉரு ஆராய்ந்த கல்விஇம் மூன்றன்
செறிவுடையான் செல்க வினைக்கு. 684—229

### நாட்டுக்கு நலத் தூது

தொகச்சொல்லித் தூவாத நீக்கி, நகச்சொல்லி
நன்றி பயப்பதாம் தூது. 685—230

ஆட்சித் தலைவரைச் சேர்ந்து ஒழுகுகின்றவர் ஆட்சித் தலைவர் எம்மைவிட இளையவர் என்றும், இன்ன முறை உறவினர் என்றும் கருதித் தாழ்வாக்கிப் பழகக் கூடாது அவரது புகழ் பொருந்திய தகுதிக் கேற்பப் பணிவாகப் பழக வேண்டும். 231

பளிங்குக் கல் தன்னை அடுத்து எதிரே அமைந்த பொருளின் உருவை அவ்வாறே காட்டும். அதுபோன்று உள்ளத்தில் உண்டான உணர்ச்சியையும் முகம் குறிப் பாகக் காட்டும். அதுகொண்டு மனக்குறிப்பை அறிதல் வேண்டும். 232

முகக்குறிப்பு, பார்வைக் குறிப்பு, சொற்குறிப்பு முதலிய குறிப்புகளால் மனக்குறிப்பை உணர்பவர் கிடைத்தற்கு அருமையானவர். அவரைத் தனது முகம் கண் வாய் முதலிய உறுப்பினுள் எதைக் கொடுத் தாகிலும் துணையாகக் கொள்ளுதல் வேண்டும். 233

தனக்கு மேலுள்ளவர் ஒன்றை வாய்ச் சொல்லால் வெளியிட்டுச் சொல்லுமுன், முகக்குறிப்பால் அறிந்து செயலாற்ற வேண்டும். அவ்வாறு குறிப்பறிந்து செய லாற்றுபவன் திறனுளன். அவன் கடல் சூழ்ந்த இந்த வையத்திற்கு மாற்ற வேண்டாத அணிகலனாய் அழகு தருவான். 234

தன் தலைவனது மனக்கருத்து இதுதான் என்று ஐயம் இல்லாமல் குறிப்பால் அறிந்து உணர்பவன் மிகச் சிறந்த திறனுளன். அவனைத் தெய்வத்தோடு ஒப்பாக வைத்துப் போற்ற வேண்டும். 235

## 70. மன்னரைச் சேர்ந்தொழுகல்

### ஒளியோடு ஒழுகல்

இளையர் இனமுறையர் என்றிகழார் நின்ற
ஒளியோடு ஒழுகப் படும். 698—231

## 71. குறிப்பு அறிதல்

### பளிங்கியும் முகமும்

அடுத்தது காட்டும் பளிங்குபோல் நெஞ்சம்
கடுத்தது காட்டும் முகம். 706—232

### உறுப்பையும் வழங்குக

குறிப்பிற் குறிப்புணர் வாரை உறுப்பினுள்
யாது கொடுத்துங் கொளல். 703—233

### உலகத்திற்கு அணிகலன்

கூறாமை நோக்கிக் குறிப்பறிவான் எஞ்ஞான்றும்
மாறாநீர் வையக்கு அணி. 701—234

### தெய்வத்தோடு ஒப்பவன்

ஐயப் படாஅது அகத்தது உணர்வானைத்
தெய்வத்தோ டொப்பக் கொளல். 702—235

சான்றோர் சொல்லின் தொகுப்பெல்லாம் அறிந்த தூய்மையானவர். அவர் குழுமியுள்ள அவை பெருமை மிக்கது. அதிற் புகுவோர் அப்பெருமையை நினைவிற் கொள்ளல் வேண்டும். கொண்டு அந்த அவைக்கேற்ற கருத்துகளை ஆராய்ந்து சொல்லுவாராக! 236

அறிவுள்ள அறிஞர் குழுமியுள்ள அவையில் தானும் அறிவுள்ள அறிஞனாகவே அமையவேண்டும். அறிவற்றவர் வெள்ளியார் எனப்படுவர். அவர் சேர்ந்த அவையில் அவர்க்குமுன் மிகச் சிறந்த சுதைச் சிற்பம் தன் மேல் பூசப்படும் எந்த வண்ணத்தையும் ஏற்றுக் கொள்வதுபோன்று அவர் நிலையிலேயே அமைய வேண்டும். 237

தம்மை ஒத்த குழுவினர் கூடிய அவையைத் தமக்குத் தக்க அவையாகக் கொள்ளவேண்டும். தமக்கேற்ற குழுவினர் அல்லார் அவையில் நின்று தன் கருத்தைக் கூறுதல் கழிவுநீர் வாரியுள் சிந்திய பாலைப் போன்று பயனற்றுப் போகும். 238

பகைகொண்ட போர்க்களத்தில் அஞ்சாமல்சென்று இறப்பவர் பலராகையால் அவரெல்லாரும் எளியவர். சான்றோர் குழுமிய அவையில் அஞ்சாமல் உரையாற்றுபவர் மிகச் சிலராகையால் அவர் கிடைத்தற்கு அரியர். 239

நன்கு கற்றவர் அவையில் தாம் கற்றவை பாராட்டுப் பெறுமாறு சொல்லுதல் வேண்டும். தம்மை விட நன்கு கற்ற மேம்பட்டவர் குழுமிய அவையில் மேம்பட்ட கருத்துக்களை அஞ்சாமற் கேட்டுப் பெறல் வேண்டும். 240

## 72. அவை அறிதல்

### அவையறிந்து சொல்லுக

அவையறிந்து ஆராய்ந்து சொல்லுக, சொல்லின்
தொகையறிந்த தூய்மை யவர். 711—236

### மடையன் முன் மடையன்

ஒளியார்முன் ஒள்ளிய ராதல்; வெளியார்முன்
வான்சுதை வண்ணம் கொளல். 714—237

### கழிவு நீர் வாரியுள் கலக்கும் பால்

அங்கணத்துள் உக்க அமிழ்தற்றால், தங்கணத்தர்
அல்லார்முன் கோட்டி கொளல். 720—238

## 73. அவை அஞ்சாமை

### போருக்கு அஞ்சாரும் அவைக்கு அஞ்சாரும்

பகையகத்துச் சாவார் எளியர்; அரியர்
அவையகத்து அஞ்சா தவர். 723—239

### சொல்லுதலும் கொள்ளுதலும்

கற்றார்முன் கற்ற செலச்சொல்லித் தாம்கற்ற
மிக்காருள் மிக்க கொளல். 724—240

குறையாத விளை பொருள்களும், தகுதி வாய்ந்த சான்றோரும், தாழ்ந்த குணம் இல்லாத பெருஞ் செல்வரும் பொருந்தியுள்ள நிலமே நாடு எனப்படும். 241

மற்றைய எளிய நாட்டின் மக்களைத் தாங்கும் பொறுப்பு தன்மேல் வரும்போது தாங்கிக் காத்து, ஆட்சித் தலைவனுக்குரிய இறைக்கடனாகிய வரியையும் நிறைவாகத் தரும் வாய்ப்புள்ளது சிறந்த நாடாகும். 242

வருத்துகின்ற மிகுதியான பசியும், தணியாத நோயும் அழிக்கும் பகையும் சேராமல் இயங்குவதே நலம் மிக்க நாடாகும். 243

நாட்டில் பல் மாறுபாடுகளையுடைய குழுக்கள் இருத்தல் கூடாது. கூடியிருந்தே கெடுக்கும் உட்பகை இருக்கக் கூடாது. ஆட்சித் தலைவனைக் கலக்குகின்ற கொலைகாரக் குறும்பர்கள் உலவக்கூடாது. இவை யற்றது தீங்கற்ற நாடாகும். 244

சிறப்பித்துக் கூறப்படும் நாடு பிற நாட்டிடம் எப் பொருளையும் நாடிச் செல்லாத வளத்தையுடையதாகும். மற்ற நாட்டினை உதவிக்கு நாடி உதவிபெற்று மக்களுக்கு வளத்தைத் தருகின்ற நாடு சிறப்பித்துச் சொல்லத் தக்க நாடு ஆகாது. 245

## 74. நாடு

### நாடு

தள்ளா விளையுளும் தக்காரும் தாழ்விலாச்
செல்வரும் சேர்வது நாடு. 731—241

### சிறந்த நாடு

பொறையொருங்கு மேல்வருங்கால் தாங்கி இறைவற்கு
இறை யொருங்கு நேர்வது நாடு. 733—242

### நலமிக்க நாடு

உறுபசியும் ஓவாப் பிணியும் செறுபகையும்
சேரா தியல்வது நாடு. 734—243

### தீங்கற்ற நாடு

பல் குழுவும் பாழ்செய்யும் உட்பகையும் வேந்தலைக்கும்
கொல்குறும்பும் இல்லது நாடு. 735—244

### தகுதி வாய்ந்த நாடு

நாடென்ப நாடா வளத்தன: நாடல்ல
நாட வளந்தரு நாடு. 739—245

ஒரு நாட்டிற்கு அரண் என்பது காவலுக்கு சிறு முயற்சியோடு பெரும் இடத்தை உடையதாக அமைய வேண்டும். அத்தகைய அரண் நாட்டைத் தாக்கும் பெரும் பகையின் ஊக்கத்தையும் அழிக்கும். 246

செல்வம் என்பது எக்காலத்தும் அணையா விளக்கு. அவ்விளக்கம் தன்னை உடையவர் நினைக்கும் இடமெல்லாம் சென்று வறுமையாகிய இருளை அறவே போக்கும். 247

இறைக்கடனும் வரியாகக் கிடைக்கும் பொருளும், சுங்கப் பொருளும், பகைவரைத் தாக்கி வென்று பெறும் பொருளும் ஆட்சித் தலைவனது ஆட்சிக்குரிய பொருள்களாம். 248

அருள் அன்பு என்னும் அன்னை பெற்றெடுத்த குழந்தை. அக்குழந்தையை வளர்க்கும் செவிலித் தாய் செல்வப் பொருளாகும். எனவே, அருள் பொருளால் வளரும். 249

குன்றின்மேல் ஏறி நின்று கண்டால் யானைப் போரை அச்சமின்றிக் கண்டு மகிழலாம். அது போன்றே, தான் ஈட்டிய கைப்பொருள் ஒன்று தன்னிடம் அமையப் பெற்றவன் செயல்களைக் கலங்காமல் செய்து மகிழ்வான். 250

## 75. அரண்

### காவலில் சிறுமை இடத்தில் பெருமை

சிறுகாப்பிற் பேரிடத்த தாகி உறுபகை
ஊக்கம் அழிப்பது அரண். 744—246

## 76. பொருள் செயல்வகை

### அணையா விளக்கு

பொருளென்னும் பொய்யா விளக்கம் இருளறுக்கும்
எண்ணிய தேயத்துச் சென்று. 753—247

### ஆட்சிக்குரிய செல்வம்

உறுபொருளும், உல்கு பொருளும், தன் ஒன்னார்த்
தெறுபொருளும் வேந்தன் பொருள். 756—248

### அருள் என்னும் குழந்தை

அருளென்றும் அன்பீன் குழவி, பொருளென்னும்
செல்வச் செவிலியால் உண்டு. 757—249

### யானைப்போர் காணல்

குன்றேறி யானைப்போர் கண்டற்றால், தன்கைத்
உண்டாகச் செய்வான் வினை. [தொன்று 758—250

போர்ப்படை போர்க்களத்தில் கலங்காததாய் எதிரிகளது கீழறுப்புச் செயல்களுக்கும் ஆட்படாதது. இவ்வல்லமையோடு விடாது தொடர்ந்து வரும் அஞ்சாமையைக் கொண்டதுவே படை. 251

ஆற்றலுள்ள படை எத்தகையது என்றால், கூற்றுவனே சினத்தால் கொதித்துத் தன்மேல் படையெடுத்து வந்தாலும் அஞ்சாமல், ஒன்றுகூடி எதிர்த்து நிற்கும் ஆற்றல் உடையதாகும். 252

முயலாம் எளிய விலங்கை எய்து கொன்ற அம்பைவிட வலிய யானையைக் குறிவைத்துக் குறிதவறிய வேலைக் கையில் ஏந்துதல் பெருமைக்குரியதாம். அது போன்று எளிய நாட்டைத் தாக்கிப் பெறும் வெற்றியைவிட வலிய நாட்டைத் தாக்கிப் பெறும தோல்வி ஒரு படைக்குப் பெருமையாகும். 253

போர்க்களத்தில் மேம்பட்ட வீரனை எதிர்க்கும் வீரத்தைச் சிறந்த ஆண்தன்மை என்று சொல்லுவர். அந்த ஆண்தன்மைக்கு ஓர் எஃகுக் கூர்மை உண்டு. அது, தான் எதிர்த்த வீரனுக்குக் களத்தில் ஓர் இடையூறு நேருமானால் அவனுக்கு உதவி செய்தல் ஆகும். 254

தன்னைக் காத்துப் பயிற்சி தந்து வீரனாக்கிவிட்ட தலைவனது கண்களிலிருந்து கண்ணீர் பெருகி வழியுமாறு போரிட்டுச் சாகவேண்டும். அத்தகைய சாக்காடு பெருமையுடையது. அந்தச் சாக்காட்டை மிக இழிந்த தொழிலாகிய இரத்தலைச் செய்தேனும் பெற்றுக் கொள்ளலாம். 255

## 77. படை மாட்சி

### இதுவே படை

அழிவின்று அறைபோகா தாகி, வழிவந்த
வன்கண் அதுவே படை. 764—251

### கூற்றுவனுக்கும் எதிர்ப்பு

கூற்றுடன்று மேல்வரினும் கூடி எதிர்நிற்கும்
ஆற்ற லதுவே படை. 765—252

## 78. படைச் செருக்கு

### வெற்றியிலும் தோல்வி இனிது

கான முயலெய்த அம்பினில் யானை
பிழைத்தவேல் ஏந்தல் இனிது. 772—253

### ஆண்மைக்குக் கூர்மை

பேராண்மை என்ப தறுகண்;ஒன் றுற்றக்கால்
ஊராண்மை மற்றதன் எஃகு. 773—254

### சாக்காட்டுக்குக் கையேந்துதல்

புரந்தார்கண் நீர்மல்கச் சாகிற்பின் சாக்காடு
இரந்துகோள் தக்கது உடைத்து. 780—255

செயல்களில் அருமையானது நட்பு. நட்புக் கொள்ளல் போன்ற அருமை உலகில் வேறு எவையும் இல்லை. அந்த நட்பைப்போன்று எடுத்துக்கொள்ளும் வினைக்கு அருமையான பாதுகாப்பு உலகில் வேறு எவையும் இல்லை. எனவே, நட்பு அருமையானது. 256

நல்ல நூலைப் படிக்கப் படிக்கப் புதிது புதிதான சுவை தோன்றும். அதுபோன்று, நல்ல பண்புடைய நண்பரோடு பழகப் பழகப் புதிது புதிதான மகிழ்ச்சி தோன்றும். 257

நண்பராகக் கூடுவதற்கு முன் தொடர்பும், பழக்கமும் வேண்டுவதில்லை. உள்ளம் ஒத்த உணர்ச்சிதான் நட்பை உண்டாக்கும். உரிமையைத் தரும். 258

இடுப்பில் கட்டிய உடை அவிழ்ந்தால் கை இயல்பாய் விரைந்து சென்று பற்றிக் காக்கும். அது போன்று, நண்பனுக்கு ஓர் இடையூறு நேர்ந்தால் உணர்வோடு விரைந்து அதனைப் போக்குவதே நட்பாகும். 259

நட்பினுக்குச் செம்மாப்பான மேம்பட்ட நிலை ஒன்று உண்டு. அது யாது? யாதெனில் 'அவன்' 'தான்' என்ற வேறுபாடு இன்றி, வாய்ப்பு நேரும் போதெல்லாம் அவனுக்கு உதவியாய்க் கைகொடுக்கும் நிலையாகும். 260

## நட்பே காவல்

செயற்கரிய யாவுள நட்பின்? அதுபோல்
வினைக்கரிய யாஉள காப்பு? 781—256

## நட்பு ஒரு நூல்

புணர்ச்சி பழகுதல் வேண்டா; உணர்ச்சிதான்
நட்பாம் கிழமை தரும். 785—258

## நட்பு நயக்கும் கை

நவில்தொறும் நூல்நயம் போலும், பயில்தொறும்
பண்புடை யாளர் தொடர்பு. 783—257

## நட்பு ஓர் உணர்ச்சி

உடுக்கை இழந்தவன் கைபோல, ஆங்கே
இடுக்கண் களைவதாம் நட்பு. 788—259

## நட்பின் செம்மாப்பு

நட்பிற்கு வீற்றிருக்கை யாதெனின் கொட்பின்றி
ஒல்லும்வாய் ஊன்றும் நிலை. 789—260

ஒருவனது குணம், குடி, குற்றம், இனம் முதலிய வற்றைப் பல முனைகளிலும் ஆய்ந்து ஆய்ந்து நட்புக் கொள்ளுதல் வேண்டும். அல்லாதவனுடைய நட்பு முடிவாகத் தான் இறக்குமளவு துயரத்தைத் தரும். 261

குற்றம் செய்தவிடத்து நண்பர் தன்னைக் கண்ணீர் விடும் அளவு வருந்தவைத்து அறிவுரை சொல்பவராக வேண்டும். அன்றியும், உள்ளத்தில் உறுத்தும்படி சொல்லித் திருத்த வேண்டும். உலக வழக்குகளை அறிப வராகவும் அமைய வேண்டும். அத்தகைய வல்லமை உள்ளவரையே நண்பராகக் கொள்ளவேண்டும். 262

மனத்தில் பொறுமை முதலிய குற்றம் அற்றவரது நட்பைத் தேடியும் தழுவிக்கொள்ள வேண்டும். தனக்கு ஒத்த தன்மை இல்லாதவரது தொடர்பை ஏதேனும் ஒன்றை ஈடாகக் கொடுத்தேனும் நீக்கிவிட வேண்டும். 263

பழைமை என்று சிறப்பித்துக் கூறப்படுவது யாது? யாதெனில் நெடுநாள் நட்பால் கொள்ளும் உரிமை யைக் கீழாகக் கருதாமல் மதித்துப் போற்றும் நட்பே யாகும். 264

நட்புக் கொண்டவர் தம் நண்பர் துன்பப்படத்தக்க செயலைச் செய்யமாட்டார். செய்தால், அறியாது தவறிச் செய்தார் என்று உணர்க! அன்றிப் பழைமை யான நட்பு என்னும் உரிமையால் செய்தார் என்று உணர்க! 265

## 80. நட்பாராய்தல்

### ஆய்ந்து ஆய்ந்து கொள்க!

*ஆய்ந்தாய்ந்து கொள்ளாதான் கேண்மை கடைமுறை*
*தான்சாம் துயரம் தரும்.* 792—261

### வல்ல நட்பைக் கொள்க!

*அழச்சொல்லி அல்லது இடித்து வக்கறிய*
*வல்லார்நட்பு ஆய்ந்து கொளல்!* 795—262

### கொடுத்தும் கைவிடுக!

*மருவுக மாசற்றார் கேண்மை;ஒன்று ஈத்தும்*
*ஒருவுக ஒப்பிலார் நட்பு.* 800—263

## 81. பழைமை

### பழைமை யாது?

*பழைமை எனப்படுவது யாதெனின், யாதும்*
*கிழமையைக் கீழ்ந்திடா நட்பு.* 801—264

### பெரிய உரிமை

*பேதைமை ஒன்றோ, பெருங்கிழமை என்றுணர்க,*
*நோதக்க நட்டார் செயின்.* 805—265

நண்பர் ஆனவர் வேட்கையால் நீரைப் பருகுபவர் போன்று அன்புடன் ஆர்வம் காட்டினாலும் பண்புள்ளவ ராகவும் அமையவேண்டும். பண்பில்லாத நண்பரது நட்பு வளர்வதை விடக் குன்றுதல் நன்மையைத் தரும், 266

செல்வம் உற்றபோது நட்புக்கொண்டு செல்வம் அற்றபோது நீங்கிவிடுபவர் உள்ளம் ஒத்த நட்பில்லாத வர். அவர் நட்பு எதற்கு? அதைக்கொள்வதாலும் நன்மை இல்லை; இழப்பதாலும் தீமை இல்லை. 267

பரத்தையர் உள்ளன்பு இல்லாமல் பொருளைப் பெறும் நோக்குடனேயே தொடர்பு கொள்பவர். கள்வர் களவாகப் பொருளைக் கொள்பவர். என்ன பயன் கிடைக்கும் என்று கணக்குப் பார்த்துப் பழகும் நண்பர் பரத்தையரும் கள்வரும் போன்றவரே ஆவர். 268

சொல்வேறு செயல்வேறுபட்டவர் நட்பு துன்ப மானது. அந்நட்பு கனவிலும் துன்பத்தைத் தரும் தீய நட்பு. 269

இல்லத்தில் இருக்கும்போது மிக நெருக்கமாகப் பழகிப் பாராட்டிப் பேசி, பலர் கூடிய பொதுமன்றில் பழித்துப் பேசுவோர் நட்பை விடுக! எந்த வகையிலும் மீண்டும் அணுக விடாமல் அவர் நட்பை நீக்கிப் பாது காத்துக் கொள்க! 270

## 82. தீ நட்பு

### பெருகுவதினும் குறைதல் இனிது

பருகுவார் போலினும் பண்பிலார் கேண்மை
பெருகலின் குன்றல் இனிது. 811—266

### பெற்றாலும் இழந்தாலும் பயனற்றது

உறின்நட்டு அறின்ஒரூஉம் ஒப்பிலார் கேண்மை
பெறினும் இழப்பினும் என்? 812—267

### இரவலர்க்கும் கள்வருக்கும் நேரானவர்

உறுவது சீர்தூக்கும் நட்பும், பெறுவது
கொள்வாரும், கள்வரும் நேர். 813—268

### கனவிலும் துன்பமாகும் தொடர்பு

கனவிலும் இன்னாது மன்னோ, வினைவேறு
சொல்வேறு பட்டார் தொடர்பு. 819—269

### பழிப்பவர் நட்பை ஒழிப்பது நலம்

எனைத்தும் குறுகுதல் ஓம்பல், மனைக்கெழீஇ
மன்றில் பழிப்பார் தொடர்பு. 820—270

முகமலர்ச்சியால் இனிமையாக மகிழ்வைத் தந்து, மனத்தில் துன்பம் செய்யும் எண்ணங் கொண்டவர் நண்பராகார்; வஞ்சகர். அவர் நட்பு கூடா நட்பு. 271

கூடா நட்பினர் உள்ளம் பொருந்திய நண்பர் போன்று நல்லவற்றைச் சொல்லுவர். சொல்லினும் உள்ளம் பொருந்தாத அவரது சொல்லின் பொய்மை விரைவில் உணரப்படும் அளவில் வெளிப்படும். 272

வில் வணங்குவது போன்று வளைவது தீங்கின் அறிகுறியாகும். அதனால், அதுபோன்ற பகைவரது பணிவான சொல்லைக் கொண்டு நண்பராகத் தொடர்பு கொள்ளக்கூடாது. அத்தொடர்பு கூடா நட்பாகும். 273

குவித்துத் தொழுத கைக்குள் கொல்லும் படை மறைக்கப்பட்டிருக்கலாம். அதுபோன்றே, பகைவர் அழுது வடிக்கும் கண்ணீரும் நம்மை அழிக்கும் எண்ணத்தை மறைத்துக்கொண்டு வருவதாகும். எனவே அக்கண்ணீரைக் கொண்டு நண்பர் என நம்பக் கூடாது. 274

பகைவரும் பயன்கருதி நண்பராக முன்வருவர். அந்நிலையில் உடன் ஒதுக்கிவிடாமல் அது கூடா நட்பு என்று உணர்ந்து முகத்தளவில் நட்புக் காட்டவேண்டும். உள்ளத்தளவில் நட்பைப் பொருத்தாமல் நீக்கிவிட வேண்டும். 275

## 83. கூடா நட்பு

### முகத்தில் கொஞ்சுதல்; நெஞ்சத்தில் வஞ்சம்

முகத்தின் இனிய நகாஅ, அகத்துஇன்னா
வஞ்சரை அஞ்சப் படும். 824—271

### ஒட்டாதவர் சொல்

நட்டார்போல் நல்லவை சொல்லினும், ஒட்டார்சொல்
ஒல்லை உணரப் படும். 826—272

### வில்லும் சொல்லும்

சொல்வணக்கம் ஒன்னார்கண் கொள்ளற்க, வில்
தீங்கு குறித்தமை யான். [வணக்கம் 827—273

### தொழுத கைக்குள் படை

தொழுதகை யுள்ளும் படைஒடுங்கும், ஒன்னார்
அழுதகண் ணீரும் அனைத்து. 828—274

### பகை நட்பானால்...

பகைநட்பாம் காலம் வருங்கால் முகம்நட்டு
அகம்நட்பு ஒரீஇ விடல். 830—275

பேதைமை என்று சொல்லப்படுவது யாது? யாதெனில் தனக்குத் தீங்கை உண்டாக்கிக்கொண்டு நன்மைதரும் வருவாயை இழந்துவிடுவதாகும். 276

நாள்தோறும் நல்ல நூல்களைக் கற்று உணர்வர்; உணர்ந்தவற்றைப் பிறர்க்கெல்லாம் எடுத்து விளக்கி உரைப்பர். கற்று உணர்ந்தபடி தாம் ஒழுகி அடங்கார். அவர் போன்ற பேதையர் உலகில் வேறு எவரும் இலர். 277

பேதை ஒழுக்கத்தை அறியாதவன். அவன் ஒரு செயலை மேற்கொண்டால் அது நிறைவேறாமல் பொய் யாகும். பொய்யாவது மட்டும் அன்று. குற்றத்தை விளைத்தவனாய் அச்செயல் மூலம் விலங்கு பூட்டப் படுவான். 278

நன்மை தீமைகளை அறியும் அறிவு இல்லாதவன், பிறர்க்கு மனமுவந்து ஒரு பொருளையும் ஈய மாட்டான். ஈவானாகில், அதற்குக் காரணம் அறிவைக் கையாண்டு செய்த நல்ல தன்மை என்று ஒன்றும் இல்லை. பெறுபவன் செய்த தவம் என்றுதான் சொல்லவேண்டும். 279

நன்மையை அறியாத பேதையர் இதைச் செய் என்று ஏவினாலும் நன்மையைச் செய்துகொள்ள மாட்டார். தாமாகவும் நன்மையைத் தெளிவாக உணரமாட்டார். அதுதான் புல்லறிவாண்மை. அஃது ஒரு நோய். அஃது உயிர்போகும் வரை அவருக்கு ஒரு தொழுநோய். 280

84. பேதைமை

## இதுதான் பேதைமை

பேதைமை என்பதொன்று யாதெனில், ஏதம்கொண்டு
ஊதியம் போக விடல். 831—276

## பேதையினும் பேதை

ஓதி உணர்ந்தும் பிறர்க்குரைத்தும் தானடங்காப்
பேதையின் பேதையார் இல். 834—277

## பொய்யும் விலங்கும் பூணுபவன்

பொய்படும் ஒன்றோ? புனைபூணும் கையறியாப்
பேதை வினைமேல் கொளின். 836—278

85. புல்லறிவாண்மை

## பெறுபவன் தவம்

அறிவிலான் நெஞ்சுஉவந்து ஈதல், பிறிதுயாதும்
இல்லை; பெறுவான் தவம். 842—279

## உயிர்போகுவரை போகாத நோய்

ஏவவும் செய்கலான், தான்தேறான், அவ்வுயிர்
போஒம் அளவும்ஓர் நோய். 848—280

எவருடனும் முரண்படுவது இகல். அந்த இகல் மிக இனிமையானது என்று கொள்பவரது வாழ்க்கை தவறுதலும், அடியோடு கெட்டுப் போதலும் மிக அண்மைக்காலத்தில் நிகழக் கூடியனவாம். 281

தன்னைவிட வலியவர் தன்னோடு மாறுபட்டுப் பகை கொண்டு தாக்குங்கால் அப்பகையை ஏற்றுக்கொள்ளு தலைப் பாதுகாப்போடு செய்க! தன் நட்பைப் போற்றாத மெலியவர்மேல் தானே பகைகொண்டு மேவுக! இவை இரண்டும் பகைகொளலின் மாண்பு. 282

தன்னைச் சேர்ந்து வாழ்ந்து தனக்குப் பெருமை தராதவற்றைச் செய்பவன் பகைவன். அவன் விரும்பத் தக்கவன் ஆகான். அவன் மேல் பகை கொள்ளல் நன்று. எவ்வளவு பொருள் கொடுத்தாவது அப்பகையைக் கொள்ளலாம். 283

தன்னைத் தாக்கும் பகைவனது திறன் தெரிந்து அவனையும் நண்பனாகக் கொள்ளுதல் பெருந்தன்மை யான பண்பு. அப்பண்பை உடையவர் ஒரு தனித் தகுதியுள்ளவர். அத்தகுதியின் கீழ் இவ்வுலகமே அடிமையாய்த் தங்கும். 284

முள்ளுள்ள மரத்தை முளைத்து வரும் செடி அளவி லேயே சீவித் தள்ள வேண்டும்: அதுபோன்று, பகை வரின் தீய திறனறிந்து தொடக்கத்திலேயே தாக்கி அழித்துவிடவேண்டும். முள்மரம் முற்றினால் வெட்டு பவர் கையைக் கொல்லும். அதுபோன்று, பகையை முற்றவிட்டால் அழிவைத் தரும். 285

## 86. இகல்

### இகல் இனிதோ?

இகலின் மிகல்இனிது என்பவன் வாழ்க்கை
தவலும் கெடலும் நணித்து. 856—281

## 87. பகை மாட்சி

### மாண்பான பகைகள்

வலியார்க்கு மாறுஏற்றல் ஓம்புக! ஓம்பா
மெலியார்மேல் மேக பகை! 861—282

### கொடுத்தும் பகை கொள்க!

கொடுத்தும் கொளல்வேண்டும் மன்ற, அடுத்(து)
மாணாத செய்வான் பகை. [இருந்து 867—283

## 88. பகைத்திறம் தெரிதல்

### உலகே அடிமை

பகைநட்பாக் கொண்டொழுகும் பண்புடை யாளன்
தகைமைக்கண் தங்கிற்று உலகு. 874—284

### பகை ஒரு முள்மரம்

இளைதாக முள்மரம் கொல்க! களையுநர்
கைகொல்லும் காழ்த்த இடத்து 879—285

வாள்போன்று கொடுமையான பகைவர் நேருக்கு நேர் வெளிப்படையாக எதிர்ப்பர். எனவே, எப்போதும் அவர் பகைபற்றி அஞ்ச வேண்டாம் ஆனால், உறவினர் போன்று பழகிக்கொண்டே உள்ளே பகை செய்யும் உட்பகைவர் எவ்விடத்தும் எந்நேரத்தும் நேர்மையின்றித் தீங்கு விளைப்பர். அவரை எண்ணி அஞ்சிக் கவனமாக இருத்தல் வேண்டும். 286

செப்பினது அடியும் முடியும் கூடி, இணைந்திருப்பது போன்று தோற்றம் அளிக்கும். ஆனால், இரண்டும் வேறு வேறே. அதுபோன்று உட்பகை உண்டான குடும்பம் ஒற்றுமை போன்று தோற்றமளிக்கும், உள்ளம் பொருந்தாததால் வேறு வேறாகிப் பிளவு படும். 287

சிறு குடிசைக்குள் பாம்புடன் இணைந்து வாழ்தல் இயலாது. அது உள்ளே கொண்ட நச்சுக் குணத்தை எந்நேரத்தும் காட்டும். அதுபோன்று, உட்பகை கொண்டு மனம் ஒத்துப் போகாதவருடன் கூடி வாழ்தல் இயலாது. அவர் எந்த நேரத்திலும் பகையை வெளிப்படுத்திக் கேடு செய்வர். 288

நுண்ணறிவிலும், நூலறிவிலும், பட்டறிவிலும் சிறந்தவர் பெரியார். அவரது அறிவுரைகளைப் போற்றிக் கடைப்பிடிக்க வேண்டும். அவரை மதிக்காமல் நடந்தால் அந்த நடத்தை அவர்க்குப் பிழை செய்த காரணமாக மாற்றமுடியாத துன்பத்தைத் தரும். 289

அறிவுத் தகுதியில் மாட்சிமைப்பட்ட பெரியாரை மதிக்காத பிழையைச் செய்தால், அவர் சினங்கொள்வர். அச்சினத்தின் முன் பல வகையால் மாட்சிமையுள்ள வாழ்க்கையும், நிறைந்த செல்வமும் என்னாகும்? விரைந்து கெடும். 290

## 89. உட்பகை

### அஞ்சத்தக்க பகைவர்

வாள்போல் பகைவரை அஞ்சற்க! அஞ்சுக
கேள்போல் பகைவர் தொடர்பு! 882—286

### உட்பகை ஒரு செப்பு

செப்பின் புணர்ச்சிபோல் கூடினும் கூடாதே
உள்பகை உற்ற குடி 887—287

### பாம்புடன் பழகேல்

உடம்பாடு இலாதவர் வாழ்க்கை, குடங்கருள்
பாம்போடு உடன்உறைந் தற்று. 890—288

## 90. பெரியாரைப் பிழையாமை

### மாற்ற முடியாத துன்பம்

பெரியாரைப் பேணாது ஒழுகின், பெரியாரால்
பேரா இடும்பை தரும். 892—289

### வாழ்க்கையும் வான்பொருளும் வீழும்

வகைமாண்ட வாழ்க்கையும் வான்பொருளும் என்ஆம்,
தகைமாண்ட தக்கார் செறின். 897—290

காம இன்பத்துக்காக மனைவி இட்ட வழிச் செல்வது பெண்வழிச் சேறலாம். அவ்வாறு மனைவி இட்ட ஏவலைச் செய்து நடப்பவன் ஆண் தன்மை இல்லாதவன். அவனைவிட நாணம் கொள்ளும் பெண் தன்மையே பெருமையுடையது. 291

நல்ல நெற்றியழகு வாய்ந்த மனைவியின் விருப்பம் போல் அவள் இட்ட வழி நடப்பவர் தன்னோடு நட்புக் கொண்டவரது குறைகளையும் தீர்க்கமாட்டார்; நல்ல பயனுள்ளவற்றைச் செய்யும் வலிமையைப் பெறவும் மாட்டார். 292

பரத்தையர் பொருளுக்காகவே பொருள் தருவோரைத் தழுவுவர். அது அன்புத் தழுவல் ஆகாது; பொய்த் தழுவல். அவளைக் கூடித் தழுவுதல் எந்த வகைத் தொடர்பும் இல்லாத பிணத்தைத் தழுவுவது போன்றதே ஆகும். 293

திருமணம் பெற்றுத் தம் வாழ்வை நல்ல ஒழுக்க எல்லைக்குள் நிறுத்தாத பரத்தையர் சிறந்த அணிகலன்களை அணிந்து அழகோடு விளங்கினாலும், அவர்களது மெல்லிய தோள் ஒரு சேறு. அது மேன்மையற்ற கயவர்கள் அழுந்தித் தவிக்கும் சேறு ஆகும். 294

செல்வத்தால் நீக்கப்படுபவர்க்குத் தொடர்பு மூன்றாகும். அவை, வேறுபடும் இருமனம் படைத்த பரத்தையரும், மயக்கும் கள்ளும், கவிழ்க்கும் சூதாட்டமும் ஆகும். 295

## 91. பெண்வழிச் சேறல்

### பெண்மை ஆண்மையிற் பெருமை

பெண்ஏவல் செய்தொழுகும் ஆண்மையின் நாணுடைப்
பெண்ணே பெருமை உடைத்து. 907—291

### நல்லன செய்யார்

நட்டார் குறைமுடியார் நன்றாற்றார் நல்நுதலாள்
பெட்டாங்(கு) ஒழுகு பவர். 908—292

## 92. வரைவின் மகளிர்

### இருட்டறையில் பிணம் தழுவல்

பொருள்பெண்டிர் பொய்ம்மை முயக்கம்,
ஏதில் பிணம்தழீஇ யற்று. [இருட்டறையில் 913—293

### தோள் ஆழ்த்தும் சேறு

வரைவிலா மாண்இழையார் மென்தோள், புரைஇலாப்
பூரியர்கள் ஆழும் அளறு. 919—294

### செல்வத்தைக் கொல்லும் மூன்று

இருமனப் பெண்டிரும் கள்ளும் கவறும்
திருநீக்கப் பட்டார் தொடர்பு. 920—295

ஈன்றெடுத்த தாய் தன் சேய் தவறு செய்தாலும் வெறுப்புக் கொள்ளாள். தன் சேய் கள் குடித்ததைக் காணின் அவள் முகத்திலும் துன்பக் குறியான வெறுப்புத் தோன்றும். தாயே வெறுப்பின் கள் குடித்த வனைக் காணின் சான்றோர் முகத்தில் எத்தகைய துன்ப வெறுப்புத் தோன்றும்? 296

"ஒரு முறைகூட யான் கள் குடித்ததில்லை"— என்று வாயால் சொல்லுவதையும் விடுக! வாய்ச்சொல் லாக வருவதற்குரிய எண்ணம் ஆர்வமாகப் பெருகிக் கள்ளைக் குடிக்கச் செய்துவிடும் 297

நீருக்குள் மூழ்கி மறைந்திருப்பவனை எரியும் விளக் கைக்கொண்டு தேடிக் காண முடியாது, அது போன்றே, கள் குடித்து மயங்கி இருப்பவனைக் கார ணங்கள் காட்டித் தெளிவு பெறச் செய்ய முடி யாது. 298

இரை கிடைத்தது என்று கருதி மீன், தூண்டில் முள்ளை விழுங்கி அழியும். அதுபோன்றே, வெற்றி கிடைப்பதாயினும் சூதாட்டம் வெற்றி ஆர்வத்தை மூட்டி அழித்துவிடும் என்பதை உணர்ந்து கைவிட வேண்டும். 299

சூதாட்டம் தம் கைப்பொருளை அழிக்கும்; பொய்யை மேற்கொள்ளச் செய்யும்; அருளைக் கெடுக் கும்; துன்பத்தில் ஆழ்த்தும். எனவே, சூதை விரும் பாது விடுக! 300

## 93. கள்ளுண்ணாமை

### அன்னை முகத்திலும் இன்னாதது

ஈன்றாள் முகத்தேயும் இன்னாதால்; என்மற்றுச்
சான்றோர் முகத்துக் களி 923—296

### நினைப்பு குடியனுக்கும்

களித்(து) அறியேன் என்பது கைவிடுக! நெஞ்சத்து
ஒளித்ததூஉம் ஆங்கே மிகும். 928—297

### குடியனிடம் காரணம் விடியுமோ?

களித்தானைக் காரணம் காட்டுதல், கீழ்நீர்க்
குளித்தானைத் தீத்துரீஇ யற்று. 929—298

## 94. சூது

### தூண்டிலை விழுங்கும் மீன்

வேண்டற்க வென்றிடினும் சூதினை; வென்றதூஉம்
தூண்டில்பொன் மீன்விழுங்கி யற்று. 931—299

### சூது அல்லல்

பொருள்கெடுத்துப் பொய்மேற் கொளீஇ
அல்லல் உழப்பிக்கும் சூது. [அருள்கெடுத்து 938—300

உண்ட உணவு செரித்ததை அறிந்து செரிக்கத் தக்க உணவைப் பக்குவமாய்ப் போற்றி உண்ண வேண்டும். அவ்வாறு உண்டால் நோய் வராது. நோய் இன்மையால் உடம்பிற்கு மருந்து வேண்டிய தில்லை. 301

செரிக்கச் செய்யும் வயிற்றுத் தீயின் அளவை அறிந்து அளவான உணவை உண்ண வேண்டும். அந்தத் தீயின் அளவிற்கு அதிகமாக உண்டால் நோயும் அளவில்லாமல் உண்டாகி உடம்பு கெடும். 302

மருத்துவ நூலைக் கற்ற மருத்துவன், நோய் கொண்டவனது உடலின் வலி, பித்தம், கபம் ஆகியவற் றின் அளவை நாடிபார்த்து அறிய வேண்டும். பற்றிய நோயின் அளவை அறியவேண்டும் நோயின் காலத்தை யும் அறிய வேண்டும். மூன்றையும் நினைந்து உரிய வற்றை நினைந்து பார்த்து மருத்துவம் செய்ய வேண் டும். 303

நல்ல குடும்பத்திற்கேற்ற தன்மை உள்ளவர் மூன்றி லிருந்து தவறமாட்டார். அவை, நல் ஒழுக்கத்தை நினைத்தல், உண்மை பேசுதல், தம் தவறுக்குத் தாமே நாணங்கொண்டு ஒழுகுதல் ஆகியனவாம். 304

நிலத்தில் முளைத்த விதையின் முளை நிலத்தின் வளத் தைக் காட்டும். அதுபோன்று ஒருவனது வாயிலிருந்து வரும் சொல் அவன் பிறந்த குடும்பத்தின் உயர்வு தாழ்வைக் காட்டிவிடும். 305

## 95. மருந்து

### மருந்து வேண்டா

மருந்(து) எனவேண்டாவாம் யாக்கைக்கு அருந்தியது
அற்றது போற்றி உணின். 942—301

### அளவிலா நோய்

தீஅளவு அன்றித் தெரியான் பெரிதுண்ணின்
நோய்அளவு இன்றிப் படும். 947—302

### மருத்துவன் செயல்

உற்றான் அளவும் பிணிஅளவும் காலமும்
கற்றான் கருதிச் செயல். 949—303

## 96. குடிமை

### குடிப்பிறந்தார்

ஒழுக்கமும் வாய்மையும் நாணும்இம் மூன்றும்
இழுக்கார் குடிப்பிறந் தார். 952—304

### மூளையும் சொல்லும்

நிலத்தில் கிடந்தமை கால்காட்டும்; காட்டும்
குலத்தில் பிறந்தார்வாய்ச் சொல். 959—305

செல்வம் பெருகும் காலத்தில் எவருக்கும் பணிந்து நடத்தல் வேண்டும். செல்வம் மிகச் சுருங்கி வறுமை நேர்ந்த காலத்தில் தன்மானத்தை விடாமல் பெருமையைக் காப்பாற்ற வேண்டும். 306

தலையில் இருக்கும்போது போற்றிப் பேணப்படும் தலைமயிர் தலையிலிருந்து விழுந்தால் குப்பையென்று தள்ளப்படும். தன் நிலையிலிருந்து தாழ்ந்து மானம் இழந்தவர் அந்த மயிர் போன்று உமிழப்படுவார். 307

ஒருவன் தன்னை மதிக்காதவன் பின்னே தன் மானத்தை இழந்து உயிர் வாழ்வது மிக இழிவு. அதை விட "மானமிழந்த அந்த நிலை வந்த உடனேயே இறந்தான்" என்று கூறப்படுதல் சிறந்தது. 308

மாந்தருக்கு மானமே பெருந்தகுதி. அப்பெருந் தகுதியினது பெருமை கெடும் நிலை வந்தபோது இறத்தலே மேல். அதன்பின்னும் இவ்வுடம்பைக் காத்து வாழ்வது உயிர் அழியாமைக்கு மருந்து ஆகுமோ? ஆகாது. 309

தன்மானத்திற்குச் சிறிது தாழ்வு வந்தாலும் வாழாது இறப்பவனே பெருமை உடையவன். அவனது தன்மானப் புகழை உலகத்து நல்லோர் போற்றுவர். 310

## 97. மானம்

### வறுமைத் தாழ்வில் தன்மான வாழ்வு

பெருக்கத்து வேண்டும் பணிதல்; சிறிய
சுருக்கத்து வேண்டும் உயர்வு. 963—306

### மானம் இழந்த மாந்தர்

தலையின் இழிந்த மயிர்அனையர் மாந்தர்
நிலையின் இழிந்தக் கடை. 964—307

### கெடுதல் நல்லது

ஒட்டார்பின் சென்றொருவன் வாழ்தலின், அந்நிலையே
கெட்டான் எனப்படுதல் நன்று. 967—308

### மானமிழத்தல் மருந்து ஆகாது

மருந்தோமற்(று) ஊன்ஓம்பும் வாழ்க்கை
பீடழிய வந்த இடத்து. [பெருந்தகைமை 968—309

### உலகம் ஏத்தும்

இளிவரின் வாழாத மானம் உடையார்
ஒளிதொழுது ஏத்தும் உலகு. 970—310

மற்ருெரு ஆடவனை மனத்தில் கொள்ளாத ஒருமை மனப்பாங்குடைய மகளிர் கற்புடைய மகளிர். அம் மகளிர் போன்றே, ஆடவனும் மனைவியல்லாத மற்ருெரு பெண்ணை நினையாது தன்னைத்தானே நிறைவுடன் காத்துக்கொள்ளவேண்டும். அதனுல் வாழ்வில்பெருமை உண்டு. 311

பெருமை என்றும் பணிவுடன் நடக்கச் செய்யும். சிறுமை தன்னைத் தானே வியந்து தற்புகழ்ச்சியை அணிந்து கொள்ளச் செய்யும். 312

சான்ருண்மை என்பது ஓர் ஐந்துகால் மண்டபம். அம்மண்டபத்தை ஊன்றித் தாங்கி நிற்கும் தூண்கள் ஐந்து. அவை, அன்பு, நாண், ஒப்பரவு, கண்ணோட்டம், வாய்மை என்பனவாம். இவ்வைந்து குணங்களின் தொகுப்பே சான்ருண்மை. 313

உயிர்க்கொலை செய்யாத நன்மையை உடையதே நோன்பு எனப்படும். அதுபோன்று, பிறரது தீமைகளை எடுத்துச் சொல்லாதிருப்பதே ஆண்மைக்குரிய சான்ருகும்; சான்ருண்மையாகும். 314

சான்ருண்மையின் தகுதியை மதிப்பிடும் ஓர் உரைகல் உண்டு. அது யாதெனில், தமக்கு ஒப்பாகாத எளியவரிடத்தும் தாம் பெற்ற தோல்வியை ஒப்புக் கொள்வதாகும். 315

## 98. பெருமை

### ஒருமை ஆடவர்

ஒருமை மகளிரே போலப் பெருமையும்
தன்னைத்தான் கொண்டொழுகின் உண்டு. 974—311

### பெருமை பணியும்

பணியுமாம் என்றும் பெருமை: சிறுமை
அணியுமாம் தன்னை வியந்து. 978—312

## 99. சான்றாண்மை

### ஐந்து கால் மண்டபம்

அன்புநாண் ஒப்புரவு கண்ணோட்டம் வாய்மையோடு
ஐந்துசால்பு ஊன்றிய தூண். 983—313

### தீமை சொல்லாச் சால்பு

கொல்லா நலத்தது நோன்மை; பிறர்தீமை
சொல்லா நலத்தது சால்பு. 984—314

### ஓர் உரைகல்

சால்பிற்குக் கட்டளை யாதெனின், தோல்வி
துலைஅல்லார் கண்ணும் கொளல், 986—315

மாந்தனுக்குரிய உறுப்புக்கள் ஒத்திருப்பது மட்டும் மக்கட் பிறப்போடு ஒத்ததாக ஆகிவிடாது. மக்கட் பிறப்பிற்குரிய நிறைந்த பண்பால் ஒத்திருப்பதே மக்க ளினத்திற்கு ஒத்த ஒப்பு ஆகும். 316

சிரித்துப் பொழுதுபோக்காகப் பேசும் பேச்சிலும் பிறரைப் பழித்துப் பேசுவது துன்பமானதாகும். பகை வரிடத்தும் உள்ள பெருமைகளை அறிபவரிடம் பண் பாட்டுச் செயல்கள் உண்டாகும். எனவே நண்பரை யும் பழிக்காமல், பகைவரையும் மதித்து ஒழுகுதல் பண்புடைமை ஆகும். 317

தான் உராயும் பொருள்களைக் கூர்மையாக்கித் தன் கூர்மையிலும் மழுங்காதது அரம். அதுபோன்று கூர்த்த அறிவுள்ளவரானாலும், மக்கட்பண்பு உள்ளராக வேண்டும். இல்லாதவர் மரம் போன்றவரே யாவார். 318

மிக அழகுவாய்ந்த குமரிப்பெண் திருமணம் பெறாது தனியளாய் மூப்பு அடைதல் பயனற்ற வாழ் வாகும். அதுபோன்றே, செல்வம் அற்ற ஏழையர்க்கு உதவி செய்யாதவன் செல்வம் நன்மை இல்லாத செல்வம். அது பயனற்று வீணாக அழியும். 319

ஊரின் நடுவே நச்சுத் தன்மையுள்ள பழங்களைத் தரும் மரம் பழுத்தால் மக்களுக்குப் பயன்படாமல் தீமையையும் தரும். அதுபோன்று. மக்களால் விரும் பப்படாதவன் பெற்ற செல்வமும் பயன்படாமல் தீமையையும் தரும். 320

## 100. பண்புடைமை

### மக்கள் ஒப்பு பண்பே

உறுப்புஒத்தல் மக்கள்ஒப்பு அன்றால்; வெறுத்தக்க
பண்புஒத்தல் ஒப்பதாம் ஒப்பு. 993—316

### பகையிடத்தும் பண்பாடு

நகையுள்ளும் இன்னாது இகழ்ச்சி; பகையுள்ளும்
பண்புள பாடுஅறிவார் மாட்டு. 995—317

### அரமும் மரமும்

அரம்போலும் கூர்மைய ரேனும் மரம்போல்வர்
மக்கள்பண்பு இல்லா தவர் 997—318

## 101. நன்றியில் செல்வம்

### மூத்த குமரி

அற்றார்க்கொன்று ஆற்றாதான் செல்வம், மிகநலம்
பெற்றாள் தமியள்மூத் தற்று. 1007—319

### நடுஊருள் நச்சுமரம்

நச்சப் படாதவன் செல்வம், நடுஊருள்
நச்சு மரம்பழுத் தற்று. 1008—320

தான் செய்த தவற்றுக்குத் தலைகுனிதல் ஆண்கள் கொள்ளத் தக்க நாணம். அந்த நாண் உடைமை சான்றோர்க்கு ஓர் அழகு! அங்ஙனமின்றித் தவறு செய்து தலை நிமிர்ந்து நடக்கும் பெருமித நடை ஒரு வகை நோய் ஆகும். 321

மரத்தால் செய்யப்பட்ட பொம்மையைக் கயிற்றைக் கட்டி ஆட்டுவதால் உயிர் உள்ளது போன்று இயங்கிக் காண்போரை மயங்க வைக்கும். அது போன்றே, உள்ளத்தில் நாணங் கொள்ளாதவர் இயக்கமும் உயிரோட்டமற்றதாக மயங்கவைக்கும். 322

தான் பிறந்த குடும்பத்தை நற்பெயரோடு ஆளும் ஆண்மையை உண்டாக்கிக்கொள்ள வேண்டும். அஃதே ஒருவனுக்கு நல்ல ஆண்மை என்று சிறப்பித்துக் கூறப்படும். 323

தான் பிறந்த குடியை மேம்படுத்த இந்தப் பருவத்தில்தான் செயலாற்ற வேண்டும் என்று ஒரு பருவம் இல்லை. எப்பருவத்திலும் செயலாற்றலாம். சோம்பல் கொண்டு வீண் தன்மானத்தைக் கருதினால் குடி கெடும். 324

ஒரு குடிக்கு இடையூறு நேர்ந்தபோது அடுத்திருந்து இடையூறு போக்கித் தாங்கவல்ல நல்ல ஆண் வேண்டும். அத்தகைய ஆள் இல்லாத குடியை. வந்த இடையூறு குடும்பத்தின் ஆணிவேரைக் கொல்லும்; குடி வீழும். 325

## 102. நாணுடைமை

### நோய் நடை

அணிஅன்றோ நாணுடைமை சான்றோர்க்கு?
பிணிஅன்றோ பீடு நடை. [அஃதின்றேல் 1014—312

### மயக்கும் மரப்பொம்மை

நாண்அகத் தில்லார் இயக்கம், மரப்பாவை
நாணால் உயிர்மருட்டி யற்று. 1020—322

## 103. குடிசெயல் வகை

### நல் ஆண்மை, இல் ஆண்மை

நல்ஆண்மை என்பது ஒருவற்குத் தான்பிறந்த
இல்ஆண்மை ஆக்கிக் கொளல். 1026—323

### பருவம் இல்லை

குடிசெய்வார்க்கு இல்லை பருவம்; மடிசெய்து
மானம் கருதக் கெடும். 1028—324

### குடி வீழும்

இடுக்கண்கால் கொன்றிட வீழும், அடுத்தூன்றும்
நல்ஆள் இலாத குடி. 1030—325

பலவகைத் தொழில்களால் உலகம் சுழன்று இயங்குகின்றது. ஆயினும், உழவுத் தொழிலே அடிப் படையாகக் கொண்டே உலக வாழ்வு அமைகின்றது அதனால், எத்துணை வருந்தி உழைப்பதானாலும் உழவுத் தொழிலே சிறந்த தொழிலாகும். 326

உழுது புரட்டிய ஒரு பலம் மண், கால் பலம் ஆகும்படி கதிரவன் ஒளியால் காய வேண்டும். அவ்வாறு காய்ந்தால், ஒரு பிடி எருவும் வேண்டாமல் மிகுதியாக விளையும். 327

நிலத்துக்கு உரிமையுடையவன் நாள்தோறும் வயல் நிலத்திற்குச் சென்று கண்காணிக்கவேண்டும், செல் லாது சோம்பி இருப்பானானால் தன்பால் அன்பு காட்டாத மனைவி ஊடல்கொண்டு இன்பம் தர மறுப் பதுபோல் நிலமென்னும் வளமான பெண்ணும் வெறுப்புகொண்டு நல்ல பயன் நல்காது விடுவாள். 328

உண்ணக் கிடைக்காமையால் வளரும் ஆசையே வறுமை எனப்படும் அது தன் குடிப்பெருமையைக் கெடுக்கும்; உடல் அழகையும் கெடுக்கும். 329

கொடிய நெருப்புக்குள் உறங்க முடியாது. அதற்குள் உறங்க நேர்ந்தாலும் உறங்கிவிடலாம். ஆனால், வறுமையில் எந்தச் சிறு அளவிலும் கண் மூடுதலும் முடியாது. வறுமை நெருப்பினும் கொடிது. 330

## 104. உழவு

### ஏர்க்குப் பின்னே உலகம்

சுழன்றும்ஏர்ப் பின்னது உலகம்; அதனால்
உழந்தும் உழவே தலை. 1031—326

### எருஇல்லாமல் ஏராள விளைச்சல்

தொடிப்புழுதி கஃசா உணக்கின், பிடித்தெருவும்
வேண்டாது சாலப் படும். 1037—327

### ஊடல் கொள்ளும் வயல்

செல்லான் கிழவன் இருப்பின், நிலம்புலந்து
இல்லாளின் ஊடி விடும். 1039—328

## 105, நல்குரவு

### வறுமை ஓர் அவா

தொல்வரவும் தோலும் கெடுக்கும், தொகையாக
நல்குர(வு) என்னும் நசை. 1043—329

### நெருப்பிலும் துயிலலாம்

நெருப்பினுள் துஞ்சலும் ஆகும்; நிலப்பினுள்
யாதொன்றும் கண்பா(டு) அரிது. 1049—330

கையேந்தி நின்று இரத்தல் (பிச்சை கேட்டல்) மிக இழிவானது. அவ்விழிவும் ஒரு வகையில் அழகாகும். செல்வத்தை ஒளிக்காத உள்ளத்தால் ஈகைக் கடமையை அறிந்தவர் நல்லவர். அவர் முன்னே வகயேந்தி நின்று இரக்கலாம். அஃது ஓர் அழகை உடையது. 331

ஈகைக் குணமுடைய செல்வர் ஈகை செய்தால் தான் புகழ் உண்டு. கையேந்தி நின்று பொருளைப் பெற்றுக்கொள்பவர் அவரை அணுக வேண்டும். அணுக வில்லையானல் எவ்வாறு புகழ் உண்டாகும்? 332

கையேந்தி நின்று இரந்துதான் உயிர் வாழ வேண்டும் என்று ஒரு விதி உண்டோ? அவ்வாருயின் அவ்விதியை விதித்து உலகை இயற்றிய இறைவனே, கையேந்தி இரப்பானுக! இரந்தவாறே எங்கும் பரவித் திரிந்து கெடுவானுக! 333

இரந்தால் அறுசுவை உணவும் கிடைக்கலாம். ஆனல் தன் முயற்சி தந்த உணவு, தெளிந்த நீர் போன்று ஆக்கிய கூழே ஆனலும் அஃதே இனிது. அதனை உண்ணுவது போன்ற சுவை அறுசுவை உணவிலும் இல்லை எனலாம். 334

"இரப்போரே! இல்லை என்று சொல்பவரிடம் கையேநதி நிற்காதீர்" என்று யான் (திருவள்ளுவர்) இரப்போரையெல்லாம் கையேந்தி நின்று கேட்டுக்கொள் வேன். 335

## 106. இரவு

### இரத்தல் ஓர் அழகு

கரப்பிலா நெஞ்சின் கடனறிவார் முன்நின்று
இரப்பும்ஓர் ஏஎர் உடைத்து. 1051—331

### இரப்பார் இன்றிப் புகழ் இல்லை

ஈவார்கண் என்னுண்டாம் தோற்றம், இரந்துகோள்
மேவார் இலாஅக் கடை? 1059—332

## 107. இரவச்சம்

### இறைவன் இரந்து கெடுக

இரந்தும் உயிர்வாழ்தல் வேண்டின், பரந்து
கெடுக உலகியற்றி யான். 1062—333

### கூழே சுவை

தெண்ணீர் அடுபுற்கை யாயினும் தாள்தந்தது
உண்ணலின் ஊங்குஇனிது இல். 1065—334

### திருவள்ளுவரே இரக்கிறார்

''இரப்பன் இரப்பாரை எல்லாம்; இரப்பின்
கரப்பார் இரவன்மின்" என்று. 1067—335

ஒழுக்கமற்ற கீழ் மக்கள் கயவர் எனப்படுவர். அவர் உடல் உறுப்புக்களால் மக்களைப் போன்றே இருப்பர். ஆனால், அவர் போன்று ஒப்புக் கூறத்தக்க மாந்தரை உலகில் யாம் (திருவள்ளுவர்) பார்த்தது இல்லை. 336

கயவர் தாம் அச்சங் கொள்ளும் அளவில் தம்மை விட வலியவரைக் கண்டால் அஞ்சி அடங்குவர். தமக்கு அடங்கிக் கீழ்ப்படியும் எளியவரைக் கண்டால் அவரினும் மேம்பட்டுத் திமிருடன் நடந்து கொள்வர். 337

கயவர்களிடம் நல்ல ஒழுக்கச் செயல்கள் இல்லை. ஏதேனும் இருக்குமானால், அதற்குக் காரணம் அச்சமே. அச்சமன்றி வேறு ஒன்று உண்டு என்றால், அது, ஏதும் கிடைக்கும் என்ற அவா உண்டாவதால் சிறிதளவு உண்டாகும். 338

பறை என்னும் தம்பட்டம் தன்னை மறைவிடத்தில் தட்டினாலும் ஊருக்கெல்லாம் ஒலிபரப்பிச் செய்தியை வெளிப்படுத்தும். கயவர் தாம் கேட்ட மறைவான செய்திகளை அதற்குத் தொடர்பு இல்லாதவரிடம் உரைப்பர். தாமே வலியப் போய் உரைப்பர். இதனால் கயவர் தம்பட்டம் போன்றவரே ஆவர். 339

கயவர் தம் கன்னத்தைக் குத்தி உடைக்கின்ற முட்டியை உயர்த்தியவருக்கு எப்பொருளையும் கொடுத்துவிடுவர். மற்றவர்க்குத் தாம் உணவை உண்டு கழுவிய ஈரக் கையையும் உதற மாட்டார். 340

## 108. கயமை

### மக்களில் ஒப்பில்லாதவர்

மக்களே போல்வர் கயவர்; அவரன்ன
ஒப்பாரி யாங்கண்டது இல். 1071—336

### மிஞ்சினால் கெஞ்சிக் கெஞ்சினால் மிஞ்சுவர்

அகப்பட்டி ஆவாரைக் காணின், அவரின்
மிகப்பட்டுச் செம்மாக்கும் கீழ் 1074—337

### அச்சத்தாலும் அவாவாலும் ஒழுக்கம்

அச்சமே கீழ்களது ஆசாரம்; எச்சம்
அவாஉண்டேல் உண்டாம் சிறிது. 1075—338

### கயவர் ஒரு தம்பட்டம்

அறைபறை அன்னர் கயவர், தாம் கேட்ட
மறைபிறர்க்கு உய்த்துரைக்க லான். 1076—339

### ஈரக் கையையும் உதறுதவர்

ஈர்ங்கை விதிரார் கயவர், கொடிறுடைக்கும்
கூன்கைய ரல்லா தவர்க்கு. 1077—340

உலகப் பொருளியல்

ஊறும் கிணறாய்

இலகும் பொருட்பால்

இயைந்து

—சேரன்

## இன்பத்துப் பால்

[காதலனும் காதலியும்
களவில் பழகி, கற்பில் ஊன்றும்
வளமார் இன்பத்தை அவரவர்
வாய்மொழியாக வடிப்பதே
இன்பத்துப் பால்.]

இன்பம் படைத்த
250 இன்ப மலர்களுள்
60 மலர்களை ஆய்ந்து தொடுத்த
இன்பமாலை.

முதற் சந்திப்பில் அவள் என்னைப் பார்த்தாள். அந்தப் பார்வை வருத்தும் அணங்கின் தாக்குதல் போன்றது. அப்பார்வைக்கு எதிராக நான் பார்த்தேன். அதற்கு எதிராக அவள் பார்த்தாளே, அந்தப் பார்வை தாக்கின அணங்கு ஒரு பெரும் படைகொண்டு வந்து தாக்கினது போன்றது. 341

போர்க்களத்தில் எதிர்க்க நினைக்கும் பகைவரும் கேட்டு நடுங்கும் பெருமையுடையது என் வலிமை. அவ் வலிமையின் பெருமை என் காதலியின் ஒளிபொருந்திய நெற்றி அழகு ஒன்றிற்கே தோற்றதே! 342

என் காதலியது மை சூழ்ந்த கண்ணில் இருவகைப் பார்வைகள் உள்ளன. ஒரு பார்வை காமத்தை எழுப்பித் துன்பம் தருவது. மற்றொன்று அத்துன்பத்திற்கு மருந்தாகிக் காதல் இன்பத்தை அரும்ப வைப்பது. 343

என் காதலி ஒற்றைக் கண்ணைச் சுருக்கி என்னைப் பார்க்கும் பார்வை, அளவில் சிறிதுதான், அச்சிறு பார்வை அவள் கொண்ட காமத்தில் நேர் பாதி மட்டும் அன்று. அந்தப் பாதி அளவினும் மிகப் பெரிது. 344

காதலர் இருவரது கண்களோடு கண்கள் இணை இணையாய்ப் பார்வையில் ஒன்றி ஒத்துவிட்டன. ஒத்தாற்போல் இமையடித்து அன்பைப் பேசிக் கொள்ளுகின்றன. இப்பேச்சுக்குமுன் காதலர் வாயடைத்துப் போயினர். வாய் திறந்து பேசினாலும் எப்பயனும் இல்லாது போகும். 345

## 109. தகையணங்குறுத்தல்

காதலன்: படையொடு தாக்கும் அணங்கோ!

நோக்கினாள் நோக்கெதிர் நோக்குதல் தாக்கணங்கு
தானைக்கொண் டன்னது உடைத்து. 1082—341

காதலன்: நெற்றி அழகிற்கே தோற்றேன்

ஒண்ணுதற் கோஒ உடைந்ததே, ஞாட்பினுள்
நண்ணாரும் உட்குமென் பீடு! 1088—342

## 110. குறிப்பறிதல்

காதலன்: நோயும் மருந்தும் தந்தாள்

இருநோக்கு இவளுண்கண் உள்ளது; ஒருநோக்கு
நோய்நோக்கொன் றந்நோய் மருந்து. 1091—343

காதலன்: அவள் கண் களவு பெரிது

கண்களவு கொள்ளும் சிறுநோக்கம், காமத்தில்
செம்பாகம் அன்று பெரிது. 1092—344

தோழி: வாய்ச் சொற்கள் போய்ச் சோர்ந்தன

கண்ணொடு கண்ணிணை நோக்கொக்கின்
என்ன பயனும் இல. [வாய்ச்சொற்கள் 1100—345

மாந்தன் பெறும் உடல் இன்பங்கள் ஐந்து வகையின. அவை, கண்டு களித்தல், கேட்டு உவத்தல், உண்டு சுவைத்தல், மோந்து மகிழ்தல், உணர்ந்து பூரித்தல் என்பன. ஐந்து அறிவால் விளையும் இவ்வைந்து இன்பங்களும் ஒளி வீசும் வளையலை அணிந்த என் காதலியிடம் ஒருங்கே உள்ளன. 346

தன்மேல் உள்ளத்தைப் பதித்த காதலியின் மெல்லிய தோள்களைத் தழுவியவாறே துயில்கொள்ளுவது போன்ற இன்பம் வேறு ஒன்றும் இல்லை. தாமரை போன்ற கண்ணையுடைய கண்ணன் பல பெண்களுடன் இன்பங் கண்டதாகக் கூறப்படும் அந்தக் கண்ணன் உலகிலும் உண்டோ? என்பேன். 347

என் காதலியிடம் ஒரு நெருப்பு உளது. அந்நெருப்பு வியப்பானது. அது அவளைவிட்டு நீங்கினால் சுட்டுத் தாக்குகின்றது. அவளை நெருங்க 'தண்' என்று குளிர்ச்சியைத் தருகின்றது. இப்படியொரு வியப்பான நெருப்பை எங்கிருந்து பெற்றாளோ அறியேன். 348

ஆ! அம்மம்ம! என் காதலி தழுவிய இன்பத்தை என்னென்பேன். தமக்குரிய இல்லத்தில் இருந்து, தாம் ஈட்டிய பொருளைப் பிறர்க்குப் பகிர்ந்து கொடுத்து உண்டால் உண்டாகும் இன்பம் போன்று உள்ளது என்று கூறலாம். 349

நூலறிவையும் பட்டறிவையும் புதிதாகப் பெறும் போதெல்லாம் அவற்றை முன்னர்ப் பெறுதிருந்த அறியாமை புலப்படும். அது போன்றதே என் காதலி தரும் இன்பமும். ஒவ்வொரு முறை தழுவும் போதும் இப்படியொரு இன்பத்தை இதற்குமுன் பெற்றதில்லையே என்று எண்ணும் புதுமை புதுமையாக உள்ளது. 350

## 111. புணர்ச்சி மகிழ்தல்

### காதலன் : ஐந்தும் அவளிடம் உள

கண்டுகேட்டு உண்டுயிர்த்து உற்றறியும் ஐம்புலனும்
ஒண்டொடி கண்ணே உள. 1101—346

### காதலன் ; கண்ணன் உலகிலும் உண்டோ?

தாம்வீழ்வார் மென்றோள் துயிலின் இனிதுகொல்,
தாமரைக் கண்ணான் உலகு! 1103—347

### காதலன் : அவள் வியப்பான நெருப்பு

நீங்கின் தெறூஉம், குறுகுங்கால் தண்ணென்னும்
தீயாண்டுப் பெற்றாள் இவள்? 1104—348

### காதலன் : ஆ! அம்மம்ம! என்னென்பேன்?

தம்மில் இருந்து தமதுபாத்து உண்டற்றால்
அம்மா அரிவை முயக்கு! 1107—349

### காதலன் : அவள் புதுமை ஊற்று

அறிதோறு அறியாமை கண்டற்றால், காமம்
செறிதோறும் சேயிழை மாட்டு. 1110—350

விண்ணில் விண்மீன்கள் நிலையின்றி அங்கங்கு திரிந்து கொண்டுள்ளன. இதற்குக் காரணம் எனக்குப் புலப்படுகின்றது. நிலவையும் என் காதலி முகத்தையும் கண்ட விண்மீன்கள் இரண்டிற்கும் வேறுபாடு அறிய முடியாமல் கலங்கியே இவ்வாறு நிலையின்றித் திரிகின்றன என்பேன். 351

உடம்போடு உயிருக்கு எவ்வகையில் ஒன்றிய தொடர்பு உண்டு? அதுபோன்று, என் காதலியோடு எனக்குள்ள காதல் உணர்வு பொருந்தி ஒன்றியுள்ளது. அவள் உடல் என்றால் என் காதல் உயிர் எனலாம். 352

என் கண்ணின் கருமணியில் உள்ள பாவையே! நீ கருமணியில் இருக்க வேண்டிய காலம் முடிந்துவிட்டது. இனி இவ்விடத்தைவிட்டுப் போய்விடு. என் உள்ளத்தைக் கொள்ளைகொண்ட அழகிய நெற்றியை உடைய என் காதலிதான் இனி என் பார்வையைத் தரும் பாவை. அவளை இங்கு வைத்து ஒளிபெறவேண்டும். இவ்விடமன்றி இப்பாவைக்கு வேறு இடம் இல்லை. 353

என் காதலர் என் கண்ணுக்குள் உள்ளார். இக்கண்களுக்கு மை தீட்டவேண்டுமாயின் இமைகளை மூட வேண்டும். மூடும்போது அவர் கண்ணுக்குள் ஒளிந்துகொண்டு காட்சி தரமாட்டார். அதனால் கண்ணுக்கு மை தீட்ட மாட்டேன். 354

யான் சூடான உணவை உண்ண மாட்டேன். ஏனெனில், என் காதலர் என் நெஞ்சில் நிலையான இடத்தைப் பெற்றுள்ளார். சூடான உணவு இந் நெஞ்சுவழியே செல்லும்போது அவரைச் சுட்டு வெந்து போகச் செய்யும். இதனை அறிந்துகொண்டேன். எனவே, சூடான உணவை உண்ணமாட்டேன். 355

## 112. நலம் புனைந்துரைத்தல்

### காதலன்: விண்மீன்களின் கலக்கம் அறிந்தேன்

மதியும் மடந்தை முகனும் அறியா
பதியிற் கலங்கிய மீன். 1116—351

## 113. காதற் சிறப்புரைத்தல்

### காதலன் : என் காதலுயிர்க்கு உடம்பு

உடம்போடு உயிரிடை என்னமற் றன்ன
மடந்தையொடு எம்மிடை நட்பு. 1122—352

### காதலன் : பாவை இடத்தில் பாவை

கருமணியிற் பாவாய்நீ போதாய்;யாம் வீழும்
திருநுதற்கு இல்லை இடம். 1123—353

### காதலி : கண்ணுக்கு மைதீட்டேன்

கண்ணுள்ளார் காத லவராகக் கண்ணும்
எழுதேம், கரப்பாக்கு அறிந்து. 1127—354

### காதலி : சுடுசோற்றை உண்ணேன்

நெஞ்சத்தார் காத லவராக வெய்துண்டல்
அஞ்சுதும், வேபாக்கு அறிந்து. 1128—355

தலைவியைப் பெறாத காமத் துன்பத்தால் ஆடவர் பனைமடலால் செய்த குதிரைமீது ஏறி "ஊராார்க்கு அறிவித்து விரும்பிய பெண்ணைப் பெறுவேன்" என்பர். காதலன் பிரிவால் கடல் போன்று பரவிய காமநோய் வாட்டினாலும் பெண் மடலேறுவதை நினைக்கவும் மாட்டாள். மடலேறாத பெண்மையைப் போன்று பெருந்தகுதி வாய்ந்தது வேறு ஒன்றும் இல்லை. 356

ஊரார் என் காதலைத் தூற்றுவது அலர். அந்த அலரால் நான் கொண்ட காதல் மேலும் என்னைக் கவ்விக்கொண்டு வளர்கின்றது. அந்த அலர் இல்லையானால் காதல் தன் பிடிப்பில் சுருங்கிவிடும். எனவே, அவர் வாழ்க! 357

அலர் தூற்றியே என் காதலைக் குறைத்துவிடலாம் என ஊரார் கருதுகின்றனர். அது நெய்யை ஊற்றுவதால் நெருப்பை அவித்துவிடுவோம் என்பது போன்றே முடியும். 358

அன்பை ஊன்றிய நம் இனத்தவனாக ஒரு நண்பனாவது இல்லாத ஊரில் வாழ்வது துன்பமானது. அதனினும் கொடுமையானது இனிய காதலரைப் பிரிந்து வாழ்வது. 359

தீ சுடும் வல்லமை உடையது என்பர். அது தன்னைத் தொடுபவரைத் தான் சுடும். காதல் நோயோ தன்னைத் தொடாது பிரிந்திருப்பவரைச் சுடும். எனவே, காதல் நோய் போன்று தீ வல்லமை உடையது அன்று. 360

## 114. நாணுத் துறவுரைத்தல்

### தோழி : மடலேறுள் பெண்

கடலன்ன காமம் உழந்தும் மடலேறாப்
பெண்ணின் பெருந்தக்கது இல். 1137—356

## 115. அவர் அறிவுறுத்தல்

### காதலி : ஊரார் அலர் தூற்றுக!

கவ்வையால் கவ்வியது காமம்; அதுஇன்றேல்
தவ்வென்னும் தன்மை இழந்து. 1144—357

### காதலி : நெய்யால் நெருப்பவிப்பாரோ?

நெய்யால் எரிநுதுப்போம் என்றற்றால், 'கெளவையால்
காமம் நுதுப்போம்' எனல். 1174—358

## 116. பிரிவாற்றுமை

### காதலி ; இனியவரைப் பிரிவது இன்னாதது

இன்னாது இனன்இல்ஊர் வாழ்தல்; அதனினும்
இன்னாது இனியார்ப் பிரிவு. 1158—359

### காதலன் : அவள் விட்டால் சுடும் தீ

தொடிற்சுடின் அல்லது காமநோய் போல
விடிற்சுடல் ஆற்றுமோ தீ 1159—360

நான் கொண்ட காதல் நோயைப் பிறர் அறிந்து கொள்ளாமல் மறைக்க முயல்கின்றேன். ஆனால், மணற் கேணியை இறைப்பவர்க்கு ஊற்றுநீர் ஊறிப் பொங்குவது போன்று பொங்கி வெளிப்படுகின்றது. 361

காதலருடன் கூடியிருக்கும் போது காதல் விளைக்கும் இன்பம் கடல் போன்றது. அதே காதல் பிரிவால் வருத்துங்கால் உண்டாகும் துன்பம் அக் கடலினும் பெரிது. 362

என் காதலர் வராதபோது எதிர்பார்த்து ஏக்கத் தால் என் கண்கள் இமைமூடி உறங்குவதில்லை. காதலர் வந்து அமைந்தால் அவரைக் கண்டுகொண்டே இருப்பதால் இமைமூடி உறங்குவதில்லை. இவ்வாறு இரு நிலைகளுக்கிடையே என் கண்கள் பெருந்துன் பத்தை அடைந்துள்ளன. 363

என் காதலர் என்னைப் பிரிந்து காம நோயையும் அதனால் பசப்பு என்னும் தேமலையும் கொடையாகக் கொடுத்தார். இக்கொடைக்குக் கைம்மாறாக என் உடல் மெருகையும் நாணத்தையும் எடுத்துக்கொண் டார். கொடை கைமாறு பெறுவதில்லை. இது தகவான கொடையோ? 364

அவரைத் தழுவியவாறே என்னை மறந்து கிடந் தேன், என்னையும் அறியாமல் சிறிது பக்கத்தில் பெயர்ந்தேன். அந்தப் பிரிவிற்குள் பசப்பு என்னும் தேமல் என் உடலை அள்ளிக் கொள்வதுபோல் எங்கும் பரவிவிட்டது. 365

## 117. படர்மெலிந் திரங்கல்

### காதலி : மறைக்கிறேன் இறைக்கிணறுகின்றது

மறைப்பேன்மன் யானிஃதோ நோயை; இறைப்பவர்க்கு
ஊற்றுநீர் போல மிகும். 1161—361

### காதலி : துன்பக் கடல் பெரிது

இன்பக் கடல்மற்றுக் காமம்; அஃதடுங்கால்
துன்பம் அதனிற் பெரிது. 1166—362

## 118. கண்விதுப்பழிதல்

### காதலி : என் துயிலாக் கண்கள்

வாராக்கால் துஞ்சா; வரின்துஞ்சா; ஆயிடை
ஆரஞர் உற்றன கண். 1179—363

## 119. பசப்புறு பருவரல்

### காதலி : கைமாறு பெறும் கொடையோ?

சாயலும் நாணும் அவர்கொண்டார், கைமாறு
நோயும் பசலையும் தந்து. 1183—364

### காதலி : அள்ளிக்கொண்டது பசப்பு

புல்லிக் கிடந்தேன், புடைபெயர்ந்தேன், அல்வளவில்
அள்ளிக்கொள் வற்றே பசப்பு. 1187—365

காதலியர் தாம் விரும்பிய காதலரைத் தம்மை அதே அளவில் விரும்புகின்றவராகிப் பெறவேண்டும். அவ்வாறு பெற்றவர் காமத்தைக் கனியாகப் பெற்றவர் ஆவார். கனியிலும் முற்றிய விதையில்லாத கனியைப் பெற்றவராய்த் தடையின்றிச் சுவைப்பர். 366

தோளில் சுமக்கும் காவடியின் ஒரு தலைப்பில் சுமை கூடுதலாக அமைந்தால் சுமக்க இயலாது: சுமைப் பொருளும் விழும். சுமை இரு தலைப்பிலும் சம மாக அமைந்தால் சுமத்தல் இனிது. காமம் காவடி போன்றது. காதல் கொண்டோர் இருவரும் சமமாக அன்பைப் பதிக்க வேண்டும். அந்நிலையில்தான் காதல் இனிமையாகும். ஒரு பக்கம் மட்டும் அன்பு பெருகு மானால் காமம் துன்பமேயாகிவிடும், 367

எனக்கு வரும் தும்மல் என் காதலர் என்னை நினைப்பதன் அறிகுறியாகும். இதுபோது தும்மல் உள்ளி ருந்து வெளியே வருவது போன்று வராமல் மறைகின் றது. அவர் இந்நேரம் என்னை நினைப்பவர் போன்று நினையாமல் விடுத்தார் போலும். 368

என் காதலர் நனவில் வந்து காதல் இன்பத்தை வழங்காதுபோனார். இதனால் என் உயிர் போயிருக்க வேண்டும் அவரைக் கனவில் கண்டு இன்பம் பெறுவ தால்தான் எனது உயிர் போகாது இருக்கின்றது. 369

யான் துயில்கொள்ளும்போது கனவில் என் காதலர் என்னைத் தழுவியவாறே தோள்மேல் அமைந் தார். அதனை உண்மையென்ன் நினைந்து கண் விழித் தேன். உடன் அவர் என் நெஞ்சில் விரைந்து புகுந்து ஒளிந்துகொள்கின்றார். 370

## 120. தனிப்படர் மிகுதி

### தோழி : விதையில்லாக் கனி உண்பவர்

தாம்வீழ்வார் தம்வீழப் பெற்றவர் பெற்ருரே
காமத்துக் காழில் கனி. 1 91—366

### தோழி : காமம் ஒரு காவடி

ஒருதலையான் இன்னுது; காமம்காப் போல
இருதலை யானும் இனிது. 1196—367

## 121. நினைத்தவர் புலம்பல்

### காதலி: தும்மல் அவர் நினைப்பைக் குறிக்கிறது

நினைப்பவர் போன்று நினையார்கொல்; தும்மல்
சினைப்பது போன்று கெடும். 1203—368

## 122. கனவுநிலை உரைத்தல்

### காதலி : கனவால் உயிர் உள்ளது

நனவினுல் நல்கா தவரைக் கனவினுல்
காண்டலின் உண்டென் உயிர். 1213—369

### காதலி : தூங்கினுல் தோள்; விழித்தால் நெஞ்சு

துஞ்சுங்கால் தோள்மேல ராகி, விழிக்குங்கால்
நெஞ்சத்த ராவர் விரைந்து. 1218—370

காதல் நோய் காலையில் அரும்பும். பகற்பொழு தெல்லாம் போதாகி மலரும் பக்குவத்திற்கு வளரும். மாலையில் மலரும். எனவே, காதல் ஒரு நோய் மலர். 371

என் காதலர் என்னைவிட்டுப் பிரிந்த போதே என் உயிர் மறைந்திருக்கும். அவர் பொருளீட்டும் கடமை யாற்றப் பிரிந்திருக்கிறார், இக்காரணத்தால் உயிரைப் போகவிடாமல் பிடித்திருக்கின்றேன். மயக்கத்தைத் தரும் இக்கொடிய மாலைப்பொழுது என் பிடியிலி ருந்து உயிரை மாய வைக்கிறது. 372

என் காதலருடன் யான் கூடிக் களித்த நாளில் என் தோள்கள் பூரித்தன, இப்போது மெலிந்து கும்பிய என் தோளகள் அவர் பிரிவை அறிவிக்கும் அறிகுறியாய் உள்ளன போலும். 373

அவளை இறுகத் தழுவினேன். எப்படியோ தென் றற் காற்று இடையே நுழைந்தது. அந்த இடை வெளிக்கே அப்பேதைப் பெண் கலங்கினாள். கலங்கிப் பெரும் மழைத்துளி போன்று கண்ணீர் வடித்த கண்கள் பஞ்சடைந்தது போன்று அழகிழந்தன. 374

என்னைவிட்டுக் காதலரைத் தேடி ஓடும் என் நெஞ்சே! உன்னுடன் என் இரு கண்களைகளையும் கூட் டிக்கொண்டு போய்விடு. விட்டுச் செல்வாயானால் அவைகள் அவரைக் காணும் துடிப்பில் என்னையே தின்றுவிடும். 375

## 123. பொழுதுகண்டு இரங்கல்

### காதலி : காமம் ஒரு நோய் மலர்

காலை அரும்பிப் பகலெல்லாம் போதாகி
மாலை மலரும்இந் நோய். 1227—371

### காதலி : மாயா உயிர் மாயும்

பொருள்மாலை யாளரை உள்ளி, மருள்மாலை
மாயும்என் மாயா உயிர். 1230—372

## 124. உறுப்புநலன் அழிதல்

### காதலி : வீங்கிய தோள் சூம்பியது

தணந்தமை சால அறிவிப்ப போலும்,
மணந்தநாள் வீங்கிய தோள், 1233—373

### காதலன் : தென்றல் புகுந்தது; தேம்பி அழுதாள்

முயக்கிடைத் தண்வளி போழப் பசப்புற்ற
பேதை பெருமழைக் கண். 1239—374

## 125. நெஞ்சொடு கிளத்தல்

### காதலி : கண்கள் தின்றுவிடும்

கண்ணும் கொளச்சேறி நெஞ்சே! இவையென்னைத்
தின்னும் அவர்க்காணல் உற்று. 1244—375

யாேனா என் காமத்தை வெளிக்காட்டாமல் மறைக்க முனைகின்றேன். எப்படி எழும் தும்மலைத் தடுத்து நிறுத்த முடியாதோ அதுபோன்று காமமும் என்னை மீறி வெளிப்பட்டுவிடுக்கிறது. 376

அவருடன் 'ஊடல்கொண்டு பூசல் விளைப்போம்' என்றுதான் அவர்பால் அணுகினேன். எனக்கு முன்னர் எனது நெஞ்சம் அவரிடம் ஓடிக்கொள்ள முந்தியது. அதனை அறிந்த யான் ஊடலை மறந்தேன். ஓடி அவரைத் தழுவிக்கொண்டேன். 377

நெருப்பில் கொழுப்பு போன்று அவர் காதலில் பட்டு என் நெஞ்சம் உருகுகின்றது. இத்தகைய நெஞ்சத்தைக் கொண்ட நான் அவரை நெருங்கியபின் 'ஊடல்கொண்டு தழுவாது நிற்போம்" என்று கூறவும் முடியவில்லை. 378

அவர் என்னைவிட்டுப் பிரிந்து சென்றார். அவர் வருகையைப்பார்த்துப் பார்த்துக் கண்கள் ஒளியிழந்து மங்கிப்போயின. அவர் சென்ற நாள்களை எண்ண விரலோடு விரலை ஒற்றியதால் விரல்களும் தேய்ந்து போயின. 379

என்னைப் பிரிந்து நெடுந் தொலைவான இடத்திற்குச் சென்ற காதலர் வரும் நாளை நினைந்து ஏங்குவர் காதலியர். அவர்க்கு ஒரு நாள் ஏழு நாள்போல மெதுவாகக் கழியும். 380

## 126. நிறையழிதல்

### காதலி : தடையை மீறிய காமம்

மறைப்பேன்மன் காமத்தை யானோ குறிப்பின்றித்
தும்மல்போல் தோன்றி விடும். 1253—376

### காதலி; ஊடச்சென்றேன்; கூடினேன்

'புலப்பல்'எனச் சென்றேன்; புல்லினேன், நெஞ்சம்
கலக்க வருவது கண்டு. 1257—377

### காதலி : நெருப்பில் உருகாத கொழுப்பு இல்லை

நிணந்தீயுள் இட்டன்ன நெஞ்சினார்க்கு உண்டோ
புணர்ந்தூடி நிற்பேம் எனல்? 1260—378

## 127. அவர்வயின் விதும்பல்

### காதலி : கண்களும் ஒய்ந்தன; விரலும் தேய்ந்தன

வாளற்றுப் புற்கென்ற கண்ணும் அவர்சென்ற
நாளொற்றித் தேய்ந்த விரல். 1261—379

### காதலி : நீளும் நாள்

ஒருநாள் எழுநாள்போல் செல்லும்சேட் சென்றார்
வருநாள்வைத்து ஏங்கு பவர்க்கு. 1269—380

அரும்பு முகையாகிய மொக்குளுக்குள் மணம் தேங்கியிருக்கும். அதுபோன்று, இந்தப் பேதைப்பருவம் பெண்ணின் புன்முறுவலாம் மொக்குளுக்குள் உள்ளது ஒன்று உண்டு. அது மணக்கும் காதல் ஆகும். 381

இவள் தன் காதல் ஏக்கத்தைத் தன் கண்களாலேயே குறிப்பாகச் சொல்லுகின்றாள். அக்குறிப்பிலேயே "பிரியாதீர்" என்று என்னை இரக்கின்றாள். இதுபோன்று குறிப்பில் அறிவுறுத்தலால் இவளது இயல்பான பெண்தன்மை மேலும் பெண்தன்மையைப் பெற்றதாகின்றது. 882

காமம் கள் போன்று மயக்கம் தருவது. ஆனாலும் கள்ளைக் குடித்தால்தான் களிப்படையலாம். காமம் நினைத்த நினைப்பிலேயே களிப்படையச் செய்யும். கண்ட காட்சியிலேயே மகிழ்வடையச் செய்யும். இவை இரண்டும் கள்ளுக்கு இல்லை. 383

கண்ணுக்கு மை தீட்டும் போது தீட்டும் மைக் கோலைக் கண் காண்பதில்லை, அதுபோன்று, காதலரைக் காணும்முன் எண்ணிப்பார்த்த அவரது குறைகள் அவரைக கண்டதும் நினைவில் காணாது மறைந்து விடுகின்றன, 384

காமம் மலரைவிட மென்மையானது. அதன் மென்மையை அறிந்து பக்குவமாகப் பயன்கொள்பவர் உலகில் சிலரே. அச்சிலருள் யானும் ஒருவன். 385

## 128. குறிப்பறிவுறுத்தல்

காதலன் : புன்முறுவலில் புகுந்துள்ள ஒன்று

முகைமொக்குள் உள்ளது நாற்றம்போல், பேதை
நகைமொக்குள் உள்ளதொன்று உண்டு. 1274—381

காதலன் : கண்ணினால் இரக்கின்றாள்

பெண்ணினால் பெண்மை உடைத்தென்ப கண்ணினால்
காமநோய் சொல்லி இரவு. 1280—382

## 129. புணர்ச்சி விதும்பல்

காதலன் : கள்ளுக்கும் இல்லாதவை

உள்ளக் களித்தலும், காண மகிழ்தலும்
கள்ளுக்கில் காமத்திற் குண்டு. 1281—383

காதலி : கண்டால் பழி காணேன்

எழுதுங்கால் கோல்காணாக் கண்ணேபோல், கொண்கன்
பழிகாணேனன் கண்ட விடத்து. 1285—385

காதலன் : காமம் மலரினும் மெல்லிது

மலரினும் மெல்லிது காமம்; சிலர் அதன்
செவ்வி தலைப்படு வார். 1289—385

என் நெஞ்சமே! என் காதலருடைய நெஞ்சு அவரைவிட்டு நீங்காமல் அவருக்குச் சார்பாக உள்ளது. இதனை அறிந்த நீ எனக்குச் சார்பாகஇல்லாமல் என்னை நீங்கி அவர்பால் ஓடுவது ஏன்? 386

நெஞ்சே! நீ என்னைவிட்டு அவர் பின்னே அவர் வயப்பட்டுச் செல்வது நன்றோ? இப்படிச் செய்வது "உலகில் செல்வம் கெட்டவர்க்குத் துணைநிற்கும் நண்பர் இலர்" எனும் தொடரின் இலக்கியம்என்பதோ? 387

எனது நெஞ்சு உயிர்மேல் காதலுடையது. காதலர் பிரிவால் உயிரைவிட விரும்பாதது. எனவே பிரிந்து வராத காதலரைக் குறைகூறி இழிவாகப் பேசுதல் தாழ்வாகும் என்று எண்ணுகின்றது. எண்ணி அவரது குணத்திறமைகளையே பேசுகின்றது. 388

ஊடல் உப்பு போன்றது. உணவில் உப்பு அளவோடு அமைதலே சுவை. அதுபோன்று, ஊடலை அளவோடு கொள்ளுவதே இன்பம். சிறிது நேரம் நீட்டித்தாலும் உணவில் உப்பு மிகுதியாக அமைந்து கரிப்பது போன்று வெறுப்பாகும். 389

ஊடல் கொண்ட காதலியரது ஊடலை உணர்ந்து அவரை அன்புகாட்டித் தழுவ வேண்டும். தழுவாது விடுதல் நீர் இல்லாமல் வாடிய வள்ளிக்கொடியினது வேரை அடியோடு அரிந்துவிடுவது போன்ற அழிவை உண்டாக்கியதாகும். 390

## 130. நெஞ்சொடு புலத்தல்

### காதலி : எனக்கு ஆகாத நெஞ்சு

அவர்நெஞ்சு அவர்க்காதல் கண்டும் எவன்நெஞ்சே,
நீஎமக்கு ஆகா தது? 1291—386

### காதலி : ஏழைக்கு நண்பர் இல்லையோ?

கெட்டார்க்கு நட்டார்இல்' என்பதோ, நெஞ்சேநீ
பெட்டாங்கு அவர்பின் செலல். 1293—387

### காதலி : உயிர்மேல் காதல்கொண்ட என் நெஞ்சு

'எள்ளின் இளிவாம்'என் றெண்ணி அவர்திறம்
உள்ளும் உயிர்க்காதல் நெஞ்சு. 1298—388

## 131. புலவி

### தோழி : புலவி உப்பு என்று அறிக

உப்பமைந் தற்றால் புலவி; அதுசிறிது
மிக்கற்றால் நீள விடல். 1302—389

### தோழி : வாடிய கொடியின் வேரா அறியாதீர்

ஊடி யவரை உணராமை, வாடிய
வள்ளி முதலரிந் தற்று. 1304—390

மிகக் கனிந்து அழிந்த பழம் சுவையற்றது. அது போன்று பெரும் பிணக்காம் துனி இல்லாத காமம் நிலை' இன்பமற்றதாகும். முற்றுது கருப்பிடித்த அளவேயுள்ள இளங்காயும் சுவை பிடிக்காதது. அது போன்று, சிறு பிணக்காம் புலவி இல்லாத காமம் இன்பக் குறை உடையதாகும். எனவே, துனியும் புலவியும் காமத்திற்குச் சுவை ஊட்டுபவை. 391

நிழலைச் சார்ந்துள்ள நீரே இனிமை தருவது. வெய்யிலைச் சார்ந்துள்ள நீர் இனிமை அன்று. அது போன்று, ஆழ்ந்த காதல் கொண்டவரிடம் ஊடல் கொள்ளுதலே இன்பந்தருவது, அது இல்லாதவரிடம் ஊடுவது இன்பம் அன்று. 392

யாம் ஊடல் கொண்டு பேசாதிருந்தோம். தும்மினால் 'நீடு வாழ்க' என்று வாழ்த்துதல் மரபு அன்றோ. அதனை அறிந்த அவர் தும்மினார். யானும் வாழ்த்தினேன். இவ்வாறு சூழ்ச்சியாக என்னைப் பேசவைத்து ஊடலைத் தீர்த்ததை என்னென்பேன்! 394

அவளைப் பேசவைத்து ஊடல் போக்க வலிந்து தும்மினேன். உடன் வாழ்த்திப் பேசினாள். வலிந்த தும்மலை அறிந்து மேலே பேசாதிருந்தாள். மேலும் பேசவைக்க அடுத்து வலிந்து தும்மினேன். உடன் வாழ்த்தை மாற்றி அழுதாள். "தும்மல் பிரிந்தவரை நினைப்பதன் குறிப்போ? எவரை நினைத்துத் தும்மினீர்" என்று அழுதவாறே வினவினாள்? 395

## 131. புலவி

### தோழி : கனியும் கருக்காயும் உண்ணார்

துனியும் புலவியும் இல்லாயின் காமம்
கனியும் கருக்காயும் அற்று. 1306—391

### தோழி : நிழல் நீரும் ஊடலும்

நீரும் நிலது இனிதே; புலவியும்
வீழுநர் கண்ணே இனிது. 1309—392

## 132. புலவி நுணுக்கம்

### காதலி : தும்மினார்

ஊடி யிருந்தேமாத் தும்மினார், யாம்தம்மை
நீடுவாழ் கென்பாக்கு அறிந்து. 1312—393

### காதலன் : ஊடினாள்

'யாரினும் காதலம்' என்றேனா ஊடினாள்
'யாரினும் யாரினும்' என்று. 1314—394

### காதலன் : தும்மலுக்கு அழுதாள்

வழுத்தினாள் தும்மினேனாக, அழித்தழுதாள்
யாருள்ளித் தும்மினீர் என்று. 1317—395

தானாகவே பாழும் தும்மல் ஒன்று வந்தது. இதற்கு என்ன சொல்வாளோ என்று அஞ்சித் தும்மலை அடக்கினேன். அடக்கியதை அறிந்துகொண்டாள். "உமக்கு விருப்பமானவரை நினைப்பதை எமக்கு மறைத்தீரோ" என்று வினவி அழுதாள். 396

உணவை உண்பது நல்லது. அதைவிட உண்ட உணவு செரித்தபின் உண்பது நன்மையாகும். அது போன்று, காமத்தோடு கூடுவது இன்பம். அதைவிட ஊடல்கொண்டு கூடுதல் இன்பமாகும். 397

ஊடற் போரில் தோற்கின்றவரே வெற்றிகொண்டவர் ஆவார். அவ்வெற்றி ஊடம் தீர்ந்து கூடிக் குலவி இன்பம் கொள்ளும்போது காணப்படும். 398

ஒளி உமிழும் கல் இழைத்த அணிகளை அணிந்த என் காதலியின் ஊடலழகு ஓர் இன்பம். எனவே, என்னுடன் ஊடல் கொள்ளுவாளாக! அவ்வூடலைத் தீர்கக யான் கெஞ்சி இரந்து நிற்க இந்த இரவுப் பொழுது நீண்டுகொண்டே இருப்பதாக! 399

காமத்திற்கு இன்ப மெருகேற்றுவது ஊடல். ஊடல் தீர்ந்து கூடித் தழுவப் பெறுவது அவ்வூடலுக்கு இன்பமாகும். 400

## 132. புலவி நுணுக்கம்

### காதலன் : தும்மலை மறைத்ததற்குள் அழுதாள்

தும்முச் செறுப்ப அழுதாள், 'நுமர்உள்ளல்
எம்மை மறைத்திரோ' என்று. 1318—396

## 133. ஊடலுவகை

### தோழி : கூடலிலும் ஊடல் இனிது

உணலினும் உண்டது அறல்இனிது; காமம்
புணர்தலின் ஊடல் இனிது. 1326—397

### தோழி : தோற்றவரே வென்றவர்

ஊடலில் தோற்றவர் வென்றார்; அதுமன்னும்
கூடலில் காணப் படும். 1327—398

### காதலன் : இரவு நீளுக!

ஊடுக மன்னோ ஒளியிழை; யாம் இரப்ப
நீடுக மன்னோ இரா. 1329—399

### தோழி : இன்பத்திற்கு இன்பம்

ஊடுதல் காமத்திற்கு இன்பம்; அதற்கின்பம்
கூடி முயங்கப் பெறின். 1330—400

காதற் சுனையிற்
கசிந்தெழும் வெள்ளமே
ஆதலிவ் வின்பத்துப்
பால்.

—'சேரன்'

அறம்பொருள் இன்பம்
அளிக்குங் குறளால்
திறம்பெறும் வாழ்வு
திகழ்ந்து!

—'சேரன்'

வினையே
ஆடவர்க்கு உயிர்;
மனையுறை மகளிர்க்கு
ஆடவர் உயிர்.

— குறுந்தொகை